ලංකා බැංකුව இலங்கை வங்கி

19th Issue

ETERNAL BANKER
நித்திய வங்கியாளர்

BANK OF CEYLON PENSIONERS' ASSOCIATION -JAFFNA DISTRICT

இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம் - யாழ் மாவட்டம்

1st FLOOR SUPER GRADE BRANCH, HOSPITAL ROAD, JAFFNA.

Volume: 11 No: 01 March - 2023 மலர் : 11 இதழ் : 01 பங்குனி - 2023



Our services continue for ever நாங்கள் இளைப்பாறியவர்களல்லர், எமது சேவைகள் தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Bank of Ceylon Pensioners' Association
Jaffna District

இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்
யாழ். மாவட்டம்

19th Issue
19வது வெளியீடு

வெளியீடு:

மலர்க்குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Title	:	BoC ETERNAL BANKER
Chief Editor	:	K.Balasubramaniam
Cover Design	:	Editorial Committee
First Edition	:	March 2012
Published by	:	Bank of Ceylon Pensioners' Association Jaffna District, 1st floor Bank of Ceylon Supra Grade Branch Hospital Road, Jaffna.
E-mail	:	bocpensionersasso.jd@gmail.com
Printers	:	Guru Printers, 39/2, Adiyapaatham Road, Thirunelvely, Jaffna.
No of Pages	:	85
No of Copies	:	200
Paper Used	:	70 Gsm
Subsidized Price	:	Rs. 200/=

தலைப்பு	:	இலங்கை வங்கி நித்திய வங்கியாளர்
தலைமை ஆசிரியர்	:	க.பாலசுப்பிரமணியம்
அட்டை வடிவமைப்பு	:	மலர்க்குழு
முதற் பதிப்பு	:	பங்குனி 2012
வெளியீடு	:	இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம், யாழ் மாவட்டம், முதலாம் மாடி இலங்கை வங்கி. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல்	:	bocpensionersasso.jd@gmail.com
பதிப்பகம்	:	குரு பதிப்பகம், 39/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
பக்கம்	:	85
பிரதிகள்	:	200
தாள் வகை	:	70 Gsm
சலுகை விலை	:	ரூபா 200/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Editorial Committee

Chief Editor	**:**	***K.Balasubramaniam (Rtd. Asst. Gen. Manager, BoC Northern Province)***
Sub Editor	**:**	***E. Premarajan (Rtd. Senior Manager, Jaffna Super Grade, Branch.)***
Committee Members	**:**	***S.Vignarajah (Rtd. Senior Manager BoC Jaffna Super Grade Branch 1)*** ***A. Paheerathan (Rtd. Asst. Manager)*** ***K.Pathmanesan (Rtd. Senior Manager, BoC Jaffna*** ***Super Grade II Branch, Stanley Road, Jaffna)*** ***D.Sujithan (Rtd. Manager, BoC Jaffna*** ***Super Grade II Branch, Stanley Road, Jaffna)*** ***K. Sethukavalar (Rtd. Chief Manager)*** ***S. Nadarajah (Executive Officer Kachcheri Br.)***
Date of Release	**:**	***March 2023***

மலர்க்குழு

பிரதம ஆசிரியர்	:	க.பாலசுப்பிரமணியம் (ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி, வடமாகாணம்.)
உதவி ஆசிரியர்	:	E. பிரேமராஜன் (ஓய்வுநிலை சிரேஸ்ட முகாமையாளர் இலங்கை வங்கி, அதிமேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்)
குழு உறுப்பினர்கள்	:	சி.விக்னராஜா (ஓய்வுநிலை சிரேஷ்ட முகாமையாளர், இலங்கை வங்கி, யாழ். அதிமேற்தரக் கிளை) அழ. பகீரதன் (ஓய்வுநிலை உதவி முகாமையாளர்) க.பத்மநேசன் (ஓய்வுநிலை சிரேஸ்ட முகாமையாளர், ச. நடராஜா (ஓய்வுநிலை நிறைவேற்று அதிகாரி) தே.சுஜிதன் (ஓய்வுநிலை முகாமையாளர்) கோ. சேதுகாவலர் (ஓய்வுநிலை பிரதான முகாமையாளர்)
வெளியீடு	:	பங்குனி 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Contents - உள்ளடங்குபவை

Page

01. Message from the former General Manager 05

02. Message From The Assistant General Manager (northern Province)
Bank of Ceylon 06

03. பிரதம ஆசிரியர் அமரர். க. பாலசுப்பிரமணியம் உதவிப் பொது முகாமையளர் (வட பிராந்தியம்) அவர்களுடைய பக்கம் 07

04. தலைவரின் உள்ளத்திலிருந்து... 08

05. இலங்கை வங்கி வடமாகாணம் ஓய்வூதியர் சங்க செயற்பாட்டு அறிக்கை 09

06. முகவா் வங்கியியல் - Agent Banking 10

07. Current Banking Environment 14

08. இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களும்
மக்கள் எதிர்நோக்கும் சவால்களும் 17

09. Understanding "Thesawalamai" 21

10. ஆரோக்கியமாக வாழ்வதற்கு 24

11. இலங்கையின் வங்கியியல் பற்றிய ஓர் அறிமுகம் 32

12. அறிந்தும் அறியாததும் 39

13. முள்ளிவாய்க்காலிருந்து மக்கள் இடப்பெயர்வு 42

14. உங்கள் பணி நிலையில் நீங்கள் மகிழ்ச்சியுடன் திளைக்க சில வழி முறைகள் 51

15. ஓய்வூதியர் கல்லூரியில் இணைந்து... 58

16. நிம்மதியான வாழ்க்கைக்கு... இவள் மனதிலிருந்து... சில வரிகள்... 61

17. சயிக்கிள் 62

18. Sivaratnam - A. 'Hatrick' Banker - who will never Be forgotten 63

19. ஒரு நல்ல நண்பரை இழந்து விட்டோம் 67

20. சிந்தையும் செயலும் ஒன்றுபட வாழ்ந்தார் அமரர் கந்தையா பத்மநேசன் அவர்கள் 71

21. சமையல் குறிப்புக்கள் 73

22. Membership Directory 78

23. Opening of newly established Kankesanthurai Limited Service Branch 79

24. "BoC Connect "Agent Banking Service established at Iranaipalai.
Puthukudiyiruppu 80

25. Our Services Visited to Our Senior Members 81

26. Our Services at Mandatheevu for abnormal Persons and their Family 82

27. Honoring Senior Pensioner Mr. M. Nagenthiram
Widow Pensioner Mrs. Pathmarany Magarajah 83

28. Tribute To our Beloved Colleagues 84

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Message from the former General Manager

It is with great pleasure that I join to compliment the Bank of Ceylons' Jaffna Pensioners' Association. The Jaffna Pensioners' Association of the Bank is a distinguished community in the region that goes a great distance to ensure the wellbeing of its members and the community they live in. Comprised with senior professional bankers who have contributed immensely for the progress of the Bank in continuing its journey as the leading bank, the association still extends the same sense of commitment towards BOC.

I consider it is a privilege as the General Manager of the Bank of Ceylon to extend my heartfelt gratitude and respect to each member of the Jaffna Pensioners' Association for playing a variety of roles in different capacities during and after their tenor with the bank. Their contribution has been instrumental in grooming future leaders by ensuring a well-ordered transition of responsibilities for the succession of the bank.

Again I thank members of the Association for this opportunity and for being instrumental stakeholder towards the success of the bank. I also wish all members and their families a healthy and prosperous year ahead.

K.E.D. Sumanasiri
Rtd. General Manager
Bank of Ceylon.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



MESSAGE FROM THE ASSISTANT GENERAL MANAGER (NORTHERN PROVINCE), BANK OF CEYLON

Good things remain good only because they are always scarce. I am glad to pen for this wonderful magazine as an appreciation of the commendable efforts put forth by the Pensioners' Association as their bi-annual publishment. The efforts taken to bring out this continuous publishment is appreciable.

As everyone aware, Pensioners and their services behind the growth of Mother Bank of Ceylon are immeasurable. They were not only worked in their service period; but also, they enhance their fullest support in every foot step of Mother BoC.

Eternal Bankers Magazine contains various kind of articles that are useful to the Bankers especially to Younger generation. It carries the information on latest Banking products, Banking Industry and other general matters.

I express my heartiest wishes and congratulations, to the Team who joined their hands behind this publishment.

V. Sivananthan
Assistant General Manager
Northern Province

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம ஆசிரியர்

அமரர். க. பாலசுப்பிரமணியம்

உதவிப் பொது முகாமையளர் (வட பிராந்தியம்)

அவர்களுடைய பக்கம்

உங்களுடைய இந்த பக்கம் இம் முறை மாற்றம் கண்டுள்ளது. காரணம் நீங்கள் இன்றில்லை. மாற்றம் ஒன்றே மனித வாழ்வில் நிச்சயம். நியதியும் கூட. காலச் சக்கரதில் வசந்த காலத்தில் மகிழும் நாம் கோடை காலத்தை வெறுக்க முடியாது அனைவரும் ஏற்றுக் கொண்டே வாழ்கிறோம். மனித வாழ்வு என்றும் மாற்றம் ஒன்றுக்கு உட்பட்டது. இதில் மாற்றுக் கருத்துக்கு எதுவுமில்லை. ஆனால் தொழில்நுட்பம் வளர்ந்த இக்கால கட்டத்தில் கூட நீங்கள் நோயிலிருந்து மாறி குணமடைந்து வாழ முடியாமல் போனது எமது துர்ப்பாக்கியம் என்றுதான் கூற வேண்டும்.

நீங்கள் இன்றில்லை என்றான போது இந்தப் பக்கத்தை யார் அலங்கரிப்பர் என்ற அங்கலாய்ப்பும் எம்மிடம் எழுந்துள்ளது. உண்மையும் கூட. எத்தனை விடயங்களை விதைத்தீர்கள். கடந்த காலத்தில் அதன் அறுவடையால் அகம் மகிழ்ந்தோம். நாளை அதனை நிரப்பவல்லர் யாருளர்?

இரங்கல் உரை நிகழ்த்தும் சந்தர்ப்பங்களில் ஒருவர் சாதாரண வயதுக்கு முன்பே மரணித்தால் நீங்கள் குறிப்பிடுவீர்கள் நல்லவர்களை இறைவன் சீக்கிரமே அழைத்து விடுவார் என்று. அத்தகைய இழப்பா உங்கள் இழப்பு ஜீரணிக்க முடியவில்லையே. அசாதாரண சூழ்நிலைக் காலத்தில் வங்கியாளர்களுக்கு ஒரு கலங்கரை விளக்காக விளங்கினீர்கள். பழைய நினைவுகளை மீட்டுப் பார்க்கும் போது யுத்த காலத்தில் வங்கியாளர்களாகிய நாம் வரைந்த வைர வரிகள் எத்தனை. மக்களோடு மக்களாக இடப்பெயர்வு கொண்டு வங்கிக் கிளைகளை வழி நடத்திய பாங்கு மறப்பதற்கில்லை.

வங்கியாளர்களிடையே நீங்கள் ஓர் அற்புதப் பிறவி. முகாமையளர் பதவி வகிக்காமலே உதவிப் பொதுமுகாமையளர் (வட மாகாணம்.) பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டு அப் பதவியை வகித்த பெருமை உங்களைச் சாரும்.

நீங்கள் இறப்பதற்கு சில நாட்கள் முன்பு இம் மலருக்காக பிரதம ஆசிரியர் உரைக்காக தங்களைத் தொடர்பு கொண்ட போது “ என்னால் எழுத முடியாமல் இருக்கிறது யாராவது சொல்ல சொல்ல எழுத முடியமா என்றீர்கள்” அதற்கான நேரம் ஒதுக்க எத்தனித்த போது அதற்குள்ளே கூற்றுவன் செய்தி எமக்கு கிடைக்கப் பெற்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தி அடையவும் தங்கள் குடும்பம் அமைதியும் சாந்தியும் அடையவும் இறைவனைப் பிரார்த்திப்பதுடன் இந்தப் பக்கத்தை உங்களுக்காக்கி எதிர் காலத்தில் எமது சங்கம் தாங்கள் எமக்கு அளித்த அறிவுரைகளுக்கு அமைய தொடர்ந்தும் இயங்கும் என அஞ்சலித்து நிற்கின்றோம்.

இலங்கை வங்கி யாழ். மாவட்ட
ஓய்வு நிலை வங்கியாளர்கள், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவரின் உள்ளத்திலிருந்து...

பத்தொன்பதாவது இதழாக இம்மலர் உங்கள் கைகளில் தவழ்வதையிட்டு பெருமகிழ்வடைகிறேன். இதன் எண்ணக்கரு எமது ஒய்வூதியர் சங்க மூத்த தலைவர்களில் உதித்து பதினொரு ஆண்டுகள் கடந்து விட்டன. காலம் காலமாக எமது வங்கித் தாய்க்கும் சமகால உத்தியோகத்தர்கட்கும் ஒரு தொடர்பாடல் (பாலமாக) ஊடகமாக இந்த சஞ்சிகை இருக்கவேண்டும் என்ற உயரிய சிந்தனையுடன் அனுபவங்கள் பலபெற்ற எமது அனுபவப் பகிர்வுகளும் சமகால வங்கியாளருக்குத் தேவையான பல ஆக்கங்களும் இச் சஞ்சிகையில் தொடர்ந்து இடம் பெறுகின்றமை இம் மலர் வாசகர்களுக்கு நல்ல பலனைத் தரும் என நம்புகின்றோம்.

நிறைவாக இம்மலரின் தோற்றத்திற்கு காரணகர்த்தாவாக இருந்த திரு. க.பத்மநேசன், திரு. ந. சிவரட்ணம், திரு. க. பாலசுப்பிரமணியம் ஆகிய மும்மூர்த்திகளை கடந்த குறுகிய சில காலங்களில் அடுத்தடுத்து இழந்து தவிக்கின்றோம். நாம் இம்மலரினை தொடர்ந்து சிறப்பாக வெளியீடு செய்வதே அவர்களின் கனவை நனவாக்குவதாகவும், கைமாறாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

உங்கள் ஆதரவிற்கு நன்றி

திரு. தி. செந்திநாதன்
தலைவர்,
இலங்கை வங்கி, ஓய்வூதியர் சங்கம்
யாழ் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம்
வடமாகாணம்

20.02.2022 தொடக்கம் 28.02.2023 வரை செயற்பாட்டு அறிக்கை

வடமாகாண ஓய்வூதியர் சங்கத்தின் பொதுக்கூட்டம் 20.02.2022இல் நடைபெற்றதனைத் தொடர்ந்து தெரிவான குழு 15வது ஆண்டுக்கான 9 நிர்வாகசபைக் கூட்டங்களை நடாத்தியது. பொதுக் கூட்டத்திற்கு எரிபொருள் தட்டுப்பாடு போக்குவரத்து நெருக்கடி காரணமாக தாய்ச்சங்கத்தினர் பங்குபற்றவில்லை. வடமாகாண உதவிப்பொது முகாமையாளர் தலைநகர் சென்றிருந்தமையால் செயற்பாட்டு முகாமையாளர் திரு. எஸ். ஆனந்தராசா பங்குபற்றி சங்கத்தின் சேவைகளைப் பாராட்டி நல்ல அறிவுரைகளையும் கூறினார்.

நித்திய வங்கியாளர் 18வது சஞ்சிகை வெளியீடு செய்யப்பட்டது. சஞ்சிகையின் ஆய்வுரையை இலங்கை வாங்கி யாழ் மேற்தரக்கிளை பிரதான முகாமையாளர் திரு. கு. சிவஞானசுந்தரம் சிறப்பாக ஆற்றி சபையின் பாராட்டுக்களையும் பெற்றார். புதிய உறுபபினர்களாக இருவர் இணைந்து கொண்டனர். எங்களைவிட்டு 9 உறுப்பினர்கள் நிரந்தரமாக பிரிந்து விட்டனர். வழமைக்கு மாறாக கொழும்பில் இயல்புநிலை பாதிப்பு காரணமாக தாய்ச்சங்கத்தின் பொதுக்கூட்டம் மகரகமவில் நடைபெற்றது. அதில் பங்குபற்ற எவரும் முன்வராத போதும் திரு. A. W. ஜேசுதாசன் தனது சொந்த ஆபத்தைக் கருதாம லேயே சென்று வந்தமை பாராட்டுக்குரியதாகும்.

சமூகசேவையாக மண்டை தீவில் 3 கிராம சேவைப் பிரிவை உள்ளடக்கிய மாற்றுத் திறனாளிகளுக்கு 15 உலர் உணவுப் பொதிகள் வழங்கினோம். எமது சிரேஷ்ட உறுப்பினர்களான திருவாளர்கள் K.V. முத்துக்குமாரசாமி, K. கணேசமூர்த்தி, M. பாலசிங்கம், T.குகனேசன் ஆகியோரை நிர்வாக சபை உறுப்பினர்கள் சென்று கதைத்து அளவளாவினார்கள். அவர்களிடம் நாம் சென்றதனால் மனம் மகிழ்ந்திருந்தனர். இலங்கை வங்கிக்காகவும், எமது ஓய்வூதியர்களுக்காகவும், சமூகத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்த அமரர்கள் K.பாலசுப்பிரமணியம், N. சிவரத்தினம், K. பத்மநேசன் ஆகியோர் நோய்வாய்ப்பட்டு இருந்தபோது எமது அங்கத்தவர்கள் பலர் நேரில் சென்று ஆறுதல் வார்த்தைகள் கூறினர். அப்படி இருந்த போதும் சற்றும் எதிர்பாராதவிதமாக காலன் அவர்களைக் கவர்ந்து விட்டான். அண்மையில் மூவரின் இழப்பும் ஈடுசெய்ய முடியாததாகும். அவர்களின் இறுதி நிகழ்வுகளின் நிர்வாக சபை உறுப்பினர்களும் சங்க அங்கத்தவர்களும் கலந்து கொண்டு பதாதைகள் கட்டி, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

திரு. T. பிருதிவிராஜ்
செயலாளர்,
இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கம், யாழ் மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவர் வங்கியியல் - Agent Banking

ஓர் வங்கியானது தன் சார்பாக தனது வாடிக்கையாளர்களுக்கு தெரிவு செய்யப்பட்ட குறிப்பிட்டளவு வங்கிச் சேவையினை நடாத்துவதற்காக நியமிக்கப்பட்ட ஒரு நபர் அல்லது ஒரு பதிவுசெய்யப்பட்ட நிறுவனம் அவ்வங்கியின் முகவர் என அழைக்கப்படுவர்.

வங்கிகள் தமது வலையமைப்பினை விஸ்தரிப்பதற்காகவும் அதிகளவான வாடிக்கையாளர்களை கவருவதற்காகவும் செலவு மிகக் குறைந்தளவில் கிளைகளற்ற வங்கி செயற்பாடாக முகவர் வங்கியியலை பயன்படுத்துகின்றன. இலங்கை மத்திய வங்கியானது தனது 2018ஆம் ஆண்டு 02ஆம் இலக்க வழிகாட்டல்களுக்கமைய உரிமம் பெற்ற வங்கிகள் தம்சார்பாக வரையறுக்கப்பட்ட வங்கி தொழிலை செய்வதற்காக முகவர்களை நியமிப்பபதற்கு அனுமதி அளிக்கின்றது. இலங்கையில் தற்போது இலங்கை வங்கியானது "BOC CONNECT" என்ற பெயரிலும் சம்பத் வங்கியானது "MY BANK" என்ற பெயரிலும் முகவர் வங்கியியலை மேற்கொள்கின்றன.

இலங்கை வங்கியானது தனது முதலாவது முகவர் வங்கியியலை 2021ஆம் ஆண்டு ஆவணி 9ஆம் திகதி கேமாமரன்கடுவலவிலும் மகாடி புல் வெவவிலும் ஆரம்பித்தது. தொடர்ந்து முதல் சுற்றில் மொத்தமாக நாடளாவிய ரீதியில் 36 முகவர்களை நியமித்ததுடன் தனது 02 ஆவது சுற்று முகவர்களை நியமிக்கும் செயற்பாட்டிலும் உள்ளது.

இலங்கை வங்கியில் முகவர் ஒருவரை தெரிவு செய்யும் முறை

1. தகுதியான முகவர் பிரிவுகள்

பிரதானமாக இரண்டு வகையினர் இந்த முகவர் வங்கிச் சேவையிற்கு இணைந்து கொள்ள முடியும்.

* தற்போது இலங்கை வங்கியின் POS (Point of Sale) இயந்திரத்தினை பயன்படுத்தும் பதிவு செய்த வர்த்தகர்கள்.

* முகவர் வங்கியியலை நடாத்த விரும்புகின்ற புதிய வர்த்தகர்கள் அல்லது தனி நபர்கள் (வியாபார பதிவு உடையவர்கள்)

2. முகவர் தெரிவு

ஒரு முகவரை தெரிவுசெய்யும் ஆரம்ப கட்ட பரிசீலனைகள் அருகில் உள்ள கிளை மட்டத்தில் கிளை முகாமையாளரால் மேற்கொள்ளப்படும்.

அதன்போது முகவர் வங்கி தொழிலுக்கு விண்ணப்பிப்பவர் ஒரு பதிவு செய்யப்பட்ட வியாபாரத்தினை நடாத்துபவராகவும், அதற்காக நிரந்தர வியாபார நிலையத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும். அவ் விண்ணப்பதாரர் நன்றாக ஸ்தாபிக்கப்பட்ட வியாபாரத்தினை கொண்டிருப்பது அவரின் முக்கிய அம்சமாக கருதப்படும்.

*முகவர் வங்கி தொழிலுக்கு விண்ணப்பிப்பவர் ஆகக்குறைந்தது 06 மாத காலம் ஒரு வங்கிக் கணக்கினை ஏதாவது ஒரு வணிக வங்கியியல் செயற்பாட்டில் கொண்டிருப்பதுடன் இலங்கை வங்கியின் முகவராக நியமிக்கப்பட முன்னர் ஒரு கணக்கினை இலங்கை வங்கி கிளையில் ஆரம்பித்து இருக்க வேண்டும.

* இலங்கை கொடுகடன் தகவல் பணியக (CRIB) தகவல்களில் அவர் திருப்திகரமான தரவுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

* விண்ணப்பதாரரின் முகவர் நிலையத்தின் புவிசார் அமைவிடம் மக்கள் மற்றும் சமூக பொருளாதார காரணிகளில் செல்வாக்கு மிக்கவையாக காணப்படுதல் மேலதிக சிறப்பம்சமாக கருதப்படும்.

3. முகவர் நியமனம்

கிளைகளினால் தெரிவுசெய்யப்பட்ட பிரேரிக்கப்பட்ட முகவர் வங்கியியல் விண்ணப்பங்கள் தலைமையகத்தில் அமைந்துள்ள முகவர் வங்கியியல் முகாமைத்துவ பிரிவினால் (Agent Management Unit) மீள்பரிசீலிக்கப்பட்டு வங்கியின் பணிப்பாளர் சபை பரிந்துரையுடன் இலங்கை மத்திய வங்கியின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படும். வங்கியின் முகவர் நியமனமானது இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் (Monetary Board) அனுமதியளிக்கப்பட்டதும் வங்கிக்கும் முகவரிற்கும் இடையிலான உடன் படிக்கையில் கைச்சாத்திடுவதன் மூலம் வழங்கப்படுகின்றது.



அனுமதியளிக்கப்பட்ட வியாபார நடவடிக்கைகள் மற்றும் நேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கிக்கும் முகவரிற்கும் இடையில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கணக்குகளிற்கான பண வைப்புக்கள், பண மீளப்பெறுதல்கள், Utility Bill கொடுப்பனவுகள், இலங்கை வங்கியில் உள்ள கணக்குகளிற்கிடையிலான பணப்பரிமாற்றம் கடனட்டை கொடுப்பனவுகள், கடன் தவணைப் பண கொடுப்பனவுகள், கணக்கு மீதியறிதல், மற்றும் கணக்கு செயற்பாட்டறிக்கை பெறல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.முகவர் தனது வியாபார நடவடிக்கையின் கால அட்டவணையின் அடிப்படையில் அல்லது 24/7 என்ற நேர அடிப்படையிலும் முகவர் வங்கிச் சேவையினை மேற்கொள்ள முடியும்.

முகவர் வங்கியியல் மூலம் வங்கி அடையும் நன்மைகள்

வங்கியானது தான் அடையமுடியாத கிராமப்புறங்களை சென்றடைய முடிவதுடன் வங்கியியலை பயன்படுத்தாத சனத்தொகையினை சென்றடைந்து வங்கியினை பயன்படுத்த தூண்ட மற்றும் வங்கியியலை மேற்கொள்ள ஒரு சிறந்த ஊடகமாக இந்த முகவர் வங்கியியல் காணப்படுகின்றது. இந்த இலக்கினை மிகக்குறுகிய செலவுடன் மிக அதிகளவான பிரதேசங்களுக்கு ஊடுகடத்தக்கூடியதாக உள்ளது.

வாடிக்கையாளர்கள் / சாதாரண பாமர மக்கள் வங்கி கிளைகளுக்கு மிக நிண்டதூரம் பிரயாணம் செய்வதனையும், வங்கிச் சேவையினை பெற நீண்ட நேரம் காத்திருப்பதனையும் தவிர்த்து அவர்களுக்கு அண்மையிலுள்ள முகவரை நாடி தேவையான வழமையான வங்கிச் செயற்பாடுகளை விரைவாக பெற்று கொள்ள வழி அமைக்கின்றது. முகவர் வங்கியியலானது கிளைகளற்ற வங்கியியலை நோக்கியதாகவும், செயற்பாட்டு செலவு குறைந்ததாகவும் கட்டமைப்பு, மற்றும் பராமரிப்புகள் அற்றதாகவும் மூலதன செலவுகள் மற்றும் பரிமாற்ற கட்டணங்கள் மிகக் குறைந்தாகவும் அதிக வாடிக்கையாளரை நிர்வகிக்கக்கூடிய ஒரு வங்கி செயற்பாடாக அமைகின்றது.

வாடிக்கையாளர் தொடுபுள்ளிகள் அதிகரிக்கின்றது தற்போது காணப்படும் வங்கிக்கிளைகள், விரிவாக்கற்கிளைகள் ATM / CDM/ CRM/ இலத்திரனியல் வங்கிச் சேவைகளிற்கு மேலதிகமாக ஒரு ஊடகமாக முகவர் வங்கி காணப்படுகின்றது. முகவர் வங்கியியலானது பல்வேறுபட்ட வங்கிச் சேவைகளை, வங்கியியல் செய்யாத மக்களிற்காக POS Terminal மற்றும் கைத்தொலைபேசியினை பயன்படுத்தி மிகவும் இலகுவாக கவரக்கூடியதாகவும் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டு உத்திகளை பயன்படுத்தி வங்கி தொழிலை மேம்படுத்தவும் உதவுகின்றது.

முகவர் வங்கியியல் மூலம் முகவர் அடையும் நன்மைகள்

பணப்பரிமாற்றங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும், தொகை அடிப்படையிலும் தரகுப்பண வருமானம் கிடைக்கின்றது. இதனடிப்படையில் முகவர் மேலதிக ஊழியரை அமர்த்தி இத் தொழிலை இலாபகரமாக மேற்கொள்ள கூடியளவிற்கு தரகுப்பண வருமானம் கிடைக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகவர் வங்கியிடமிருந்து கடன் வசதி, நிதி முகாமைத்துவ ஆலோசனைகள், மற்றும் இதர ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும். முகவர் தனது சொந்த வாடிக்கையாளர் அடித்தளத்தினை முகவர் வங்கி தொழில் மூலம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். முகவரிற்கு இலங்கையின் முதற்தர வங்கியின் முகவராக செயற்படுகின்ற கௌரவம் மற்றும் நற்பெயர் சமூகத்தில் ஏற்படுகின்றது.

எழுத்தாக்கம்
நா. ஜெயகரேசன்
(MBS(UOC), PgDISM(UOC), PgDEBM(IBSL), BIT(UOC), AIB(IBSL))
(நிறைவேற்று உத்தியோகத்தர்)
உற்பத்தி அபிவிருத்தி மற்றும் மீள்நிர்மாண செயற்பாடுகள்,
23 ஆம் தளம்,
இலங்கை வங்கி, தலைமை அலுவலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Current Banking Environment

The banking industries plays a huge role in the global economy and is undergoing a huge technological shift. Revisiting the market in past we could observed that much has evolved. COVID is still a reality, but it is no longer center stage. On the geopolitical front, global events such as the War in Ukraine, civil unrest in Iran, as well as domestic events (midterm elections, increasing political polarization and more frequent extreme weather) have significantly impacted global financial markets.

The economy is top of mind. Inflation, rising interest rates, a cooling housing market, and the possibilities of recession are all significantly influencing the behavior of banks and credit institutions - and the consumers they serve. Human financial expertise is an important part of the mix when it comes to delivering a meaningful customer experience – particularly in challenging times like today. But getting the right balance of human assisted support in place exactly when it is needed can be challenging in an environment that is increasingly more digital and self-serve. Optimized Channels Give Customers What They Want Good customer engagement means providing ample access and support across all channels and letting customers choose what works for them at any given moment.

Deeper engagement leads to a differentiated service rapidly changing, challenging times mean Financial Institutions-especially the mid-tier credit unions and community banks – must provide a deeper level of engagement. This entails the right balance of digital and human-assistance to differentiate themselves from the competition.

Great relationships are built on trust. Creating trust is essential for financial institutions, and that trust starts with how customers interact with our institution. Customers need frictionless experiences that are easy, fast, consistent, convenient, and seamless. Customers have more ways than ever to interact with their financial institutions — which means leveraging technology can be a double-edged sword for FIs who must now ensure they are providing seamless consistent experiences across all these channels.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The brass ring here will be in sustaining a consistent pattern of positive experiences that build good customer engagement no matter where customers interact with the financial institution. Customer Experience helps us better understand a single interaction, but Customer Engagement is about understanding and growing the entire relationship - translating to loyalty, retention, and trust. We may have 100 customer experiences that all go positively, but still struggle to win a customer's full engagement. That's why the broader lens is important.

Active customer engagement is foundational for the trust that banks need to build with customers. That's because trust and quality relationships lead to more profitable business and customer retention. Without good customer engagement, levels of trust are lower, relationships are weaker and customer loyalty is at risk. "Pursuing stronger customer engagement in 2023 will require financial institutions to realign their offerings, restructure their physical channels, reduce their operating costs and retrain their workforce.

Realign. Banks will need to shift from their traditional model of product selling to solution selling in order to meet the emotional needs of their customers. Open banking will put greater pressure on banks to focus on meeting the emotional needs of customers who are looking for strong advice and solutions that remove financial anxieties. The employee engagement model will align towards a consultative experience and away from primarily being transactional.

Restructure. With a shift to digital banking, institutions are restructuring their physical channels while reviewing their role in driving growth. Banks are starting to explore new branch business models, moving from transactions towards an advice-centric ecosystem where transactions are moved to newer and more personalized in-branch technologies. Banks are rethinking their staffing hiring and training model to attract, retain and train associates that are advice and empathy-focused.

Reduce. Financial institutions will continue to accelerate removing friction points through the use of technology in addition to helping reduce operating costs. The introduction of video ATMs a decade ago will continue with newer, smarter and highly integrated platforms being introduced that will allow for customers to open accounts, print new debit or even credit cards without the use of a live attendant.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Retrain. The shift from transaction to advice selling has not been smooth for FIs for a wide range of reasons and 2023 will see greater importance on hiring and training. Financial institutions have shifted towards universal bankers with limited success due to a lack of training, effective on-boarding of customers. 2023 will witness FIs putting greater importance on humanizing the banking experience for customers through better trained employees across all brand touch points.

We know that when consumers are dealing with these big financial events or decisions, they are more likely to seek the channels that provide human interaction - and it is in these moments where the greatest opportunity for relationship building exists.

Banks that provide a low friction way to engage those channels through technologies (like online appointment scheduling and video banking) will have the advantage.

Therefore, the Power of Integrating Human Assisted and Digital Channels, We also know that at least some utilization of human-assisted channels can contribute to banking customer engagement and feelings of connection.

By

Mrs. S. Senthuran

Manager

BoC Legal Dept

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களும்- மக்கள் எதிர்நோக்கும் சவால்களும்

தனிநபர் அல்லது அவரது குடும்பத்தை எடுத்துக்கொண்டால் அவர்களின் அத்தியாவசிய செலவுகளை ஈடு செய்யக்கூடிய வகையில் அவர்களின் வருமானம் போதாமல் இருக்கும் பட்சத்தில் நிதி நெருக்கடி ஏற்படுகின்றது. இவ்வேளைகளில் இவர்கள் தங்களின் அத்தியாவசிய பொருட்களின் அல்லது பெறும் சேவைகளின் அளவினைக் குறைத்துக் கொள்கிறார்கள். அதுவும் இயலாத பட்சத்தில் தங்களிடம் இருக்கும் அசையும், அசையா சொத்துக்களை விற்பனை செய்ய முற்படுகின்றார்கள். அதுவும் போதியதாக இல்லாதவிடத்து நிதி நிறுவனங்களில் அல்லது கூடிய வட்டிக்கு கடன்களை பெற முனைகின்றார்கள். இறுதியில் பெற்ற கடனை செலுத்த முடியாத பொழுது அவர்கள் வங்குறோத்து நிலையில் இருப்பதாக கருதப்படுகின்றார்கள்.

இதே போன்றதொரு நிலையில்தான் இலங்கை அரசும் இருக்கின்றது. இதற்கான காரணங்கள் சிலவற்றை கீழே அவதானிக்கலாம்.

* 1977இன் பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்தமையால், இறக்குமதிகளில் இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. அதன் காரணமாக உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்பட்டன. ஆடம்பரப் பொருட்கள் அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதன் விளைவாக கையிருப்பில் இருந்த வெளிநாட்டு செலாவணி பயன்படுத்தப்பட்டது. ஆனால் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டக்கூடிய அளவில் ஏற்றுமதிகள் இருக்கவில்லை.
* 1977ன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வரவு-செலவுத் திட்டங்களும் வருமானத்தை மிஞ்சிய செலவு கொண்டதாக அமைந்து குறை நிரப்பு தேவை இருந்தவாறே இருந்தது.
* இதை ஈடு செய்ய அரசு எப்பொழுதும் குறுகிய, நீண்டகால கடன்கள் முதலீடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து பெற்றதன் மூலமும் முக்கியமான சொத்துகளை நீண்ட கால குத்தகைக்கு வெளிநாடுகளுக்கு வழங்கியதன் மூலமும் செயற்பட்டு வந்ததை அவதானிக்கலாம்.
* மாறி, மாறி அதிகாரத்தில் இருந்த அரசுகள் நாட்டின் பொருளாதாரத்தில் பொதுவான கொள்கை அற்றவர்களாக தத்தம் சிந்தனைகள் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு கொள்கைகளை அமுல் படுத்தினார்கள்.
* பெறப்பட்ட கடன்கள், முதலீடுகளை வருமானம் ஈட்டும் செயற்திட்டங்களில் முதலீடு செய்யாமல் விட்டமை முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய ஒன்று.
* உலக கடன் வழங்கு நிறுவனம், உலக கடன் சீரமைப்பு திறன்மிகு நிறுவனங்களுடன் முறையாக கலந்துரையாடல்களை நடத்தாமையும் நெருக்கடி நிலைக்குக் காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சீரான வரி அறவீட்டுக் கொள்கை நடைமுறைப்படுத்தாமையும் வருமான வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக அமைந்தது.

* வருவாய் ஈட்டக்கூடிய நிலையில் இருந்த பெருந்தோட்டத் தொழிற்துறை உரிய முறையில் பராமரிக்கப்படாமையும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் கீழ் நிலையில் இருப்பதும் அதனால் அவர்கள் மத்தியில் ஒரு விதமான விரக்தி நிலையில் இருப்பதும், இதன் காரணமாக உற்பத்தித் திறன் மட்டுமல்ல, உற்பத்திப் பொருட்களின் தரமும் பாதிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக தேயிலைக்கு உலக சந்தையில் இருந்து வந்த கேள்வி வீழ்ச்சி அடைந்து, இப்பொருட்களை உற்பத்தி செய்யும் ஏனைய நாடுகள் பயனடைகின்றன. இதுவரையில் தோட்டத் தொழிலாளரின் வேதன அதிகரிப்புக்கான கோரிக்கை உரிய முறையில் கவனத்தில் எடுக்கப் படவில்லை. இது மிகவும் வேதனை தரக்கூடிய விடயம்.

* பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக் கொடுத்து வந்த சுற்றுலாத்துறை மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. இத்துறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

* விவசாயிகளுக்கான உரம், கிருமிநாசினி, ஏனைய இடுபொருட்கள் மீதான கட்டுப்பாடுகள், உரிய நேரத்தில் வழங்கப்படாமை விவசாயிகளை மட்டுமன்றி அவர்களை சார்ந்திருந்த கிராமிய பொருளாதாரத்திலும் பெரும் வீழ்ச்சியினை ஏற்படுத்தி உள்ளது.

* மீனவர்களின் பிரச்சினைகள் ஏற்புடைய வகையில் தீர்த்து வைக்கப்படாமை, எரிபொருள் கிடைக்காமை, கடல் வளங்கள் அந்நிய ஆக்கிரமிப்புகளால் சூறையாடப்படுதல் போன்ற விடயங்கள் இத்துறையினை வெகுவாகப் பாதித்துள்ளன.

* இலங்கைத் தீவில் நில வளம், நீர்வளம், கடல் வளம் நன்றாக அமைந்துள்ள பொழுதிலும் அரசு இப்பொழுதும் வெளிநாடுகளில் இருந்து அரிசி, மீன் ரின், கருவாடு போன்ற பொருட்களை இறக்குமதி செய்கின்றது. நெல் உற்பத்தியினை மேம்படுத்தினால் வெளிநாடுகளுக்கு நாட்டில் இருந்து அரிசி ஏற்றுமதிக்கான வாய்ப்பு கிட்டும்.

* நாட்டில் ஏற்பட்ட இன வன்முறைகள், சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்கள், கொரோனா தொற்று என்பனவும் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தமை மறுக்கப்படமுடியாத உண்மைகள்.

* நாட்டில் நீண்ட காலமாக நிலவுகின்ற இனப்பிரச்சினைக்கு ஏற்புடைய வகையில் தீர்வு காணப்படாமையும் இதனால் ஏற்படும் விரும்பத்தகாத செயல்களை கட்டுப்படுத்தவும் நாட்டின் அமைதியை ஏற்படுத்தவும், இராணுவ, பொலிஸ் கட்டமைப்புகள் பலப்படுத்த வேண்டிய தேவை அரசிற்கு ஏற்பட்டது. இதனால் பாதுகாப்பு செலவு அதிகரித்த வண்ணமே உள்ளது. அதுமட்டுமல்ல 10 லட்சத்துக்கு மேற்பட்ட அரச ஊழியர் கொடுப்பனவும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

* அத்துடன் சில அத்தியாவசியமான உட்கட்டமைப்புகளும் பெரும் செலவில் புனரமைக்கப்பட வேண்டி ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* மேலும் இந்நாட்டில், வைத்திய வசதிகள், கல்வி, மற்றும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு மானியங்கள், வாழ்வாதார உதவிகள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. இதன் காரணமாகவும் பெருமளவு நிதி அரசிற்கு தேவைப்படுகின்றது.

* நாடு முற்றிலும் எரிபொருள் தேவையினை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தே பூர்த்தி செய்யவேண்டி உள்ளது. இதற்கான போதிய அளவு வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பில் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் இருந்தமையே அண்மையில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடிக்கு காரணமாக இருந்தது. இதன் காரணமாக பலதுறைகளும் பாதிக்கப்பட்டன.

* இதனால் போக்குவரத்து, அலுவலகங்கள், பாடசாலைகள், மின்விநியோகம், வைத்தியசாலைகள், கைத்தொழிற்சாலைகள், சுற்றாலாத்துறை, விவசாயம், மீன்பிடி என்பன பெரிதும் பாதிக்கப்பட்டன.

* பெருமளவு உயிர் காக்கும் மருந்துகள், உபகரணங்கள் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்ய வேண்டிய நிலையில் நாடு உள்ளது. வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பில் போதிய அளவு இல்லாமையினால் மருந்து இறக்குமதி மட்டுப்படுத்தப்பட வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் உலகவங்கி, சில தெற்காசிய நாடுகள், சீனா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் நன்கொடைகளையும் வழங்கியுள்ளன.

* இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலை கூடுதலாக இருப்பதாலும், உள்ளூரில் கிடைக்கும் உணவுப் பொருட்களும், அவற்றின் உற்பத்திச் செலவு காரணமாக விலைகள் அதிகரித்த நிலையில் இருப்பதாலும், இத்தகைய விலை ஏற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் பொருளாதாரத்தில் கீழ்மட்ட நிலையில் உள்ள மக்கள் மட்டுமல்ல, நடுத்தர வகுப்பு மக்கள் கூட வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக ரூபா 55/=க்கு விற்பனை செய்யப்பட்ட பாண் இப்போ ரூபா 200/=க்கு மேல் விற்கப்படுகின்றது. இப்படியான நிலையில் ஏனைய பொருட்களின் விலைகள் எப்படி இருக்கும் என்பதை யாவரும் ஊகித்து அறியலாம். சில பொருட்களை பணம் இருந்தாலும் சந்தையில் வாங்க முடியாத நிலை உள்ளது.

* இறக்குமதி செய்யப்படும் சிமெந்து, கட்டிடப் பொருட்களின் அபரிமிதமான விலை ஏற்றத்தால் கட்டுமானத்துறையில் ஈடுபட்டு இருந்த பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இத்துறையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களும் தொழில் வாய்ப்பினை இழந்து என்ன செய்வது என்று புரியாத நிலையில் உள்ளனர்.

* நிபுணத்துவம் வாய்ந்த வைத்தியர்கள், எந்திரிகள், தொழில்நுட்ப உத்தியோகத்தர் களை எடுத்துக்கொண்டால் அவர்களின் கோரிக்கைக்கு சாதகமான தீர்வு கிடைக்காமையாலும் வேறு அழுத்தங்கள் காரணமாகவும் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கின்றார்கள். இந்நிலை தொடர்ந்தால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* எல்லாவற்றிற்கும் மேலாக மத்தியவங்கியின் நிதிக்கொள்கை காரணமாக மக்கள் தங்கள் கையிருப்பில் உள்ள பணத்தினதும், வங்கி வைப்புக்களில் உள்ள அடைகின்றார்கள். ஆனால் தற்பொழுது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மத்தியவங்கி செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் வெளிநாடுகளில் தொழில் புரிவோர் தங்கள் பணத்தை உள்நாட்டு வங்கிகளில் வைப்பிடுவதில் தயக்கம் காட்டுகின்றார்கள்.

  பணத்தினதும் கொள்முதல் பெறுமானம் பணவீக்கத்திற்கு ஏற்ப குறைவடைந்து செல்வதையிட்டு மனவேதனை அடைகின்றார்கள். ஆனால் தற்பொழுது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி காரணமாக பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மத்தியவங்கி செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் வெளிநாடுகளில் தொழில் புரிவோர் தங்கள் பணத்தை உள்நாட்டு வங்கிகளில் வைப்பிடுவதில் தயக்கம் காட்டுகின்றார்கள்.

* இங்கே மிகவும் கூர்ந்து கவனிக்க வேண்டிய விடயம் மேற்குறிப்பிட்ட காரணங்கள் ஏற்படுத்திய தாக்கத்தினால் மக்கள் மத்தியில் தங்கள் எதிர்காலம் பற்றி ஒரு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் படிப்படியாக வெளிநாடுகளுக்கு செல்ல முனைப்பு காட்டுகிறார்கள். சிலர் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொண்டு இந்தியாவிலும் தஞ்சம் கோரியுள்ளார்கள்.

* வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொழில் வாய்ப்புகளை இழந்த நிலையில் கடும் பஞ்சத்தை எதிர்கொள்வதுடன், அவர்களின் பிள்ளைகள் போசாக்கு இன்மையால் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் குடும்பத்தலைவர்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு மூன்று வேளை உணவையும் வழங்க முடியாத நிலையில் அவதிப்படுகின்றார்கள். பாடசாலைகளிலும் பிள்ளைகள் கல்வியினை தொடர முடியாமல் இடைவிலகல் அதிகரிப்பதை அவதானிக்க முடிகின்றது. குடும்பத் தலைவர்கள் உறுப்பினர்கள் தொழில் வாய்ப்பினை இழந்த நிலையில் சட்ட விரோத தொழில்களை நாடுகின்றார்கள். இது மிகவும் கவலைக்குரிய விடயம்.

இப்பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்க இப்போதைய அரசு ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுத்து வருவது போன்ற தோற்றப்பாடு நிலவுகின்றது. எவ்வளவு விரைவில் தீர்வு கிடைக்கும் என்பது இலங்கை அரசின் இஸ்திரத் தன்மை, வெளி உறவுக் கொள்கை, கடன் வழங்கும் நாடுகளின் உள்நோக்கம் அற்ற வெளிப்படைத் தன்மை, மக்களின் சகிப்புத் தன்மை போன்ற விடயங்களிலேயே தங்கியுள்ளது.

நன்றி :- புது வசந்தம் 2022

சபா. திருச்செல்வம் JP(WI)
Rtd.Area Manager, BOC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Understanding "Thesawalamai"

'Thesawalamai', in Tamil, literally mean the customs of the land. It is ancient in its origin and has prevailed in the North Ceylon for several centuries – long before the evolution of any political parties or liberation movements. Because of its popularity among the local inhabitants, the Dutch first codified it in 1706 and the British gave it legal validity by the Tesawala Regulation No 18 of 1806. Ordinance No 5 of 1869. The Matrimonial Rights and Inheritance Ordinance of 1911 (as amended by the Ordinance No 58 of 1947) and the Jaffna Matrimonial Rights and Inheritance Ordinance No 1 of 1911 are the sources and basis of the Matrimonial Rights of Tamil Spouses and gave statutory validity and, where required, affected amendments, to Thesawalamai principles concerning the same subject. The Thesawalamai Pre-emption Ordinance of 1948 amended and consolidated the Law of Pre-emption relating to lands affected by the Thesawalamai Case law on the various aspects of Thesawalamai has been richly developed over a hundred years by our judges.

Thesawalamai is one of the three main customary Laws which are in current operation in Sri Lanka. The other customary laws are the Kandyan Law and the Muslim Law. All three customary laws operate strictly within limited parameters. The general law of the land apply in all other matters. Thesawalamai always recognized that the criminal law (wherein matters such as capital punishment and rape are dealt with) was the same as is elsewhere in Sri Lanka.

Thesawalamai, in its origin, was intended to serve an agricultural community. It dealt with customary rules governing caste, slavery, marriage, marital rights, guardianship, adoption, the law of parent and child, of intestate succession, preemption, forms of mortgage peculiar to Thesawalamai such as ottiand servitudes peculiar to Thesawalamai, the law of property and contractual obligations which were current among the agricultural communities such as those arising from loan of beasts, paddy etc . Slavery was abolished by Regulation No 20 of 1844. In modern times, many of the other provisions contained in Thesawalamai are obsolete. Thus adoption, the law governing obligations and the otti form of mortgage are currently not in use. The customary form of marriages (eg. The "Thali" ceremony, etc) among the Tamils governed by Thesawalamai are still recognized and followed. Now a days, possibly just to make sure, such ceremonies are almost always followed by

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

registration. All other requirements of marriage, such as consent, prohibited degree of marriage etc are governed by the General Marriages Ordinance.

Thesawalamai is both territorial and personal in character viz: (1) it is applicable to all lands situated in the Northern Province, whether such land is owned by a Sinhalese, Tamil, Muslim or Burgher; and (2) it does not attach itself by reason of descent and religion to the whole Tamil population. It is a personal law applicable to the" 'Malabar' (Tamil) inhabitants of the Province of Jaffna".

Decided case law inform us that, though Thesawalamai applies to Tamils in the Mannar area, it does not apply to the Tamils in the Trincomalee or to those in Batticaloa or to those Tamils of Indian origin resident in the hill provinces. Again, Thesawalamai does not apply to all Jaffna Tamils but only to those Tamil Inhabitants of the Jaffna Province. The word 'Inhabitant" is of the essence. Rules repaying domicile, as found in International Law, have been developed andapplied, mutatis mutandis, to determine as to whether a person is an inhabitant of Jaffna.

The late Dr. H. W. Tambiah Q.C. who was the leading authority on the subject of Thesawalamai was of the opinion that Thesawalamai recognized only one domicile i.e. a Ceylon (Sri Lankan) domicile and that it is wrong to assume that Thesawalamai is based on a "homeland theory" as has been propounded by some politicians. The (Thesawalamai) concept has been greatly misunderstood with the consequence that incorrect inferences have been drawn. One widespread wrong belief is that Sinhalese cannot buy land in the Northern Province consequent to the law of pre-emption contained in the Thesawalamai. Pre-emption, under Thesawalamai, may be explained as a right recognized over immovable property situated in the Northern Province of Sri Lanka by which a co-owner, co-sharer or adjacent landowner, who has a mortgage of the land in question, has the right to demand the seller to sell it to him at a price which any bonafide purchaser is prepared to pay a higher price than the persons who are entitled to pre-emption. Pre-emption would also benefit Non-Tamils because of the territorial character of Thesawalamai. Any person, irrespective of race, owning land in the Northern Province has to comply with the postulates as they applied. Dr. Tambiah believed that resistance towards the devolution of powers in the Northern province was significantly influenced by misconceptions regarding the true nature of Thesawalamai. It is only possible to remove such misconceptions if people are educated about the origin, history and significant aspects of the Thesawalamai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thesawalai being primarily a codified law, however, has not been able to evolve with time or take into account social changes which have, over the years, taken place in Sri Lanka or elsewhere. Under Thesawalamai, the woman on marriage, passes from the guardianship of the father to the guardianship of the husband who becomes the sole and irrevocable attorney of the wife. It is ironic that, however qualified a woman may be, as for example, be a Judge, or an Investment Adviser and deals with millions or billions of rupees on behalf of her employer but is unable to do so with regard to her own personal investments or, indeed, sign away ownership of land without the husband's written consent.

Sure, the time is ripe for urgent reform this and other areas of Thesawalamai. But changes must necessarily take place through legislative intervention and/or with judicial creativity. Such changes cannot be done by person or persons or by a political party made to stand by themselves in the wilds of Vanni, and yet remain under the banner of 'Thesawalamai' The threads of 'Thesawalamai' are inextricably interwoven into the legal system of Sri Lanka and are very much part of the rich fabric that is the legal system in Sri Lanka. Thesawalamai is still a way of life among a good proportion of the Jaffna Tamils. In a recent case, the Hon.Chief Justice Sharvananda decided that, once it is established that a person had an initial Jaffna inhabitancy, an intention to abandon such an inhabitancy should not be lightly presumed. This could mean that

Thesawalamai will continue to apply to certain persons who regard Jaffna as their home although, such persons have not been able to physically travel to Jaffna over long periods of time because of prevailing war conditions, difficulties of travelling etc. Some properties in Colombo and other parts of Sri Lanka may be governed by Thesawalamai principles consequent to the fact that Thesawalamai, by virtue of its personal character, applies to the owners of such properties.Let not ignorance, prejudice, and misinterpretation of this rich system of customarylaw be impediments to its harmonious co-existence with the other laws of Sri Lanka.

Srimala. T. Prasathkumar LLB

Attorney - at – Law- Legal Officer

Northern Province, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரோக்கியமாக வாழ்வதற்கு

வெற்றியைத் தேட ஆயிரம் புத்தகங்கள் இருக்கின்றன. சந்தோஷத்தை எங்கே போய்த் தேடுவது? அது உள்ளுக்குள்ளிருந்து மலரவேண்டிய விடயம் இல்லையா? நாமாக நம் வாழ்க்கையை சந்தோஷமாக அமைத்துக் கொள்ள வழி ஏதேனும் உண்டா?... நிச்சயமாக உண்டு!!!

நாம் தெரிந்து கொள்ளவேண்டிய மிக அவசியமான விடயங்கள் சில:

1. முதலில் உங்கள் உடலை நோயின்றி பார்த்துக் கொள்ளவும். சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம்.
2. உடனடி சந்தோஷத்தை மட்டும் பார்க்காதீர்கள். பின்விளைவுகளையும் யோசித்து மனசைக் கட்டுப்படுத்தப் பழகுங்கள்.
3. உங்களுடைய உறவுகளுக்கு, நண்பர்களுக்கு, விசுவாசமாக இருங்கள்.
4. உங்கள் வயது எதுவானாலும் பரவாயில்லை, குழந்தைகளோடு நேரம் செலவிடுங்கள்.
5. பெற்றோரை மதியுங்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யுங்கள்.
6. "அடுத்தவர்களுக்கு நான் ஒரு நல்ல முன் உதாரணமாகத் திகழ்வேன்" என்று உங்களுக்கு நீங்களே உறுதி சொல்லிக் கொள்ளுங்கள்.
7. உண்மை எத்தனை கசப்பானாலும் பரவாயில்லை, ஏற்றுக்கொள்ளுங்கள்.
8. யாரையும் , வார்த்தைகளால்கூட காயப்படுத்தாதீர்கள்.
9. சட்டவிரோதமான எதையும் செய்யாதீர்கள், அதனால் எத்தனை லாபம் வந்தாலும்.
10. பாரபட்சமின்றி சமூகத்தில் ஒரு சமநிலை வருவதற்கு உங்களால் என்ன செய்ய முடியும் என்று சிந்திக்க ஆரம்பியுங்கள்.
11. ஒருவர் நல்லது செய்யும் போது, ஏதாவது சொல்லி அவரது முயற்சியைக் தடுத்து விடாதீர்கள்.
12. உங்கள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பு.
13. எல்லோருடைய நம்பிக்கைக்கும் உரியவராக இருங்கள்.
14. சொன்ன வாக்கை மீறாதீர்கள்.
15. "சும்மா இருப்பதே சுகம்" என்று யாராவது சொன்னால் நம்பாதீர்கள்.
16. கல்வி என்பது முடிவற்றது, எந்நேரமும் மாணவராகவே வாழவேண்டும்!
17. அடுத்தவர்களுடைய மத உணர்வுகளை மதியுங்கள்.
18. மற்றவர்கள் உங்களுக்கு எதையெல்லாம் செய்யக்கூடாது என்று நினைக்கிறீர்களோ, அதை நீங்களும் அவர்களுக்குச் செய்யாதீர்கள்.
19. அதேபோல், அவர்கள் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அப்படியே நீங்கள் அவர்களை நடத்துங்கள்.
20. இந்தஉலகம் வளங்களால் நிறைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. முடிந்ததை அள்ளிக்கொடுங்கள். ஏனென்றால் நாம் போகும்போது சிறிதும் அள்ளிச் செல்ல முடியாது.
22. நீங்கள் கொடுப்பதை விட பல மடங்கு உங்களுக்கு திரும்பி வரும்.

அதிகாலையில் எழுவது மிகவும் சிறப்பான செயல் மாணவர்கள் கல்விகற்க மிகவும் உகந்த நேரம்

1. அதிகாலையில் உடலும், சிந்தனைகளும் உற்சாகமாக இருக்கும்.
2. உங்களுக்கு நீங்களே மனதளவில் ஒரு அறிவுறுத்தல் செய்யவும். நாளை முதல் அதிகாலை 5 மணிக்கு எழுந்திருப்பேன் என்று நமக்குள்ளேயே ஒரு சங்கற்பம்.
3. அதிகாலையில் சுமார் ஒரு மணி நேரம், உங்கள் நேரம், யாரும் குறுக்கிடமாட்டார்கள். படித்தல், உடற்பயிற்சி, தியானம், நற்சிந்தனைகள் என்று வழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.
4. ஒரு மாதம் கழித்துப் பார்த்தால் உங்கள் வாழ்வியல் முன்னேற்றத்தை பார்த்து நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.
5. முதல் நாள் இரவே நம்மை தயார் செய்து கொள்ளுங்கள்.
6. இரவு உணவு உண்டவுடன் சிறு குறுநடை.
7. தூங்கப் போவதற்குமுன் ஓய்வாக ஒரு சாய்வு நாற்காலியில் பத்து நிமிடம் உட்காருங்கள்.
8. கண்களை மென்மையாக மூடி உடலைத் தளர்த்திக் கொள்ளுங்கள்.
9. சில நிமிடங்கள் ஆழ்ந்து சுவாசியுங்கள். பிரபஞ்ச சக்தி சுவாசத்தின் வழியே உங்கள் உடல் முழுவதும் பரவி உங்களை உடல் நலத்தில், சிந்தனையில் மேன்மையுற செய்கிறது என்று உறுதியாக நம்புங்கள்.
10. நான் புத்துணர்ச்சியோடும், விழிப்போடும், ஆர்வத்தோடும் காலையில் விரும்பிய நேரத்தில் (5 மணிக்கு) எழுவேன் என்று உங்களுக்குள் குறைந்தது 20 முறையாவது சொல்லி கொள்ளுங்கள்.
11. அதிகாலையில் எழுவதால் நம் வாழ்வு எப்படி எல்லாம் சிறக்கும், அன்றைய நாளை அழகாக திட்டமிடலாம், செய்யும் செயல்களை நாள் முழுவதும் சிறப்பாக செய்யலாம் என்பது போல நல்ல எண்ணங்களைப் (positive thoughts) பரவ விடுங்கள்.
12. இது ஒரு நல்ல சுய பயிற்சி. ஆழ் மனதில் நன்றாகப் பதிந்து விடும். உங்களை சிறப்பாக வழிநடத்தும்.
13. நாளை முதல் அதிகாலை 5 மணிக்கு நம் நாளைத் தொடங்குவோம்.

அதிகாலை 5 மணிக்கு எழுந்தவுடன் நினைத்துக் கொள்ளுங்கள்: வாழ்வை இனிமையாக்கி கொள்ளலாம், நல்ல மாற்றங்களை வாழ்வில் வசப்படுத்திக் கொள்ளலாம், அதிகாலை நேர இயற்கையின் மாற்றங்களை ரசிக்கலாம், சூரிய உதயம், பறவைகளின் இனிய உற்சாக குரல்கள், நல்ல காற்று, மாணவர்கள் கல்விகற்க மிகவும் உகந்த நேரம், முயன்றால் முடியாதது எதுவுமே இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் வயது 40 இற்கு மேல் எனின்

* நாம் போகும்போது எதையும் எடுத்துக்கொண்டு போகப்போவதில்லை, ஆகவே சிக்கனமாக இருக்காதீர்கள்.
* செலவு செய்ய வேண்டியவற்றிற்குச் செலவு செய்யுங்கள். மகிழ்ச்சியாக இருக்க வேண்டிய நேரத்தில் மகிழ்ச்சியாக இருங்கள்.
* உங்களால் முடிந்த தானதர்மங்களைச் செய்யுங்கள்!
* எதற்கும் கவலைப்படாதீர்கள். நீங்கள் கவலைப்படுவதால் எதையும் நிறுத்த முடியுமா? வருவது வந்தே தீரும்!
* சம்பாதிக்கிறேன் என்று பணத்தைத் தேடி அலையாதீர்கள். பணத்தைவிட உங்களின் ஆரோக்கியம் முக்கியம். பணம் ஆரோக்கியத்தை மீட்டுத் தராது!
* ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு மனிதனுக்கும் பிரச்சினைகள் இருக்கும். ஆகவே சவால்களை எதிர்கொண்டு வெற்றியை நோக்கி முன்செல்லுங்கள்.

ஆகவே உங்களை யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள்

* நீங்கள் மகிழ்ச்சியாகவும், ஆரோக்கியமாகவும், நீண்ட ஆயுளுடனும் இருந்து மற்றவர்களுக்கு உதாரணமாகத் திகழுங்கள்!
* நீங்கள் உங்களுக்கான சூழ்நிலையை உருவாக்கி, அதன் மூலம் எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள். மன மகிழ்ச்சிதான் ஆரோக்கியத்திற்கு அடிப்படை !
* உற்சாகத்தோடு இருக்கும்போது நோய் நொடிகள் குணமாகும். அனுதினமும் உற்சாகத்தோடு இருப்பவர்களை நோய் நொடிகள் அண்டாது.
* நல்ல மனநிலை, உடற்பயிற்சி, தியானம், ஆலய தரிசனம், சூரிய ஒளி, நல்ல உணவு, தேவையான விற்றமின்கள் ஆகியவை இன்னும் பல ஆண்டுகள் உங்களை வாழவைக்கும்.
* எல்லாவற்றிற்கும் மேலாக, உங்களைச் சுற்றி நடப்பவை நல்லவைகளாகவே இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள்.

75 வயதை கடந்தவர்களுக்கு எளிய அறிவுரைகள்

1. படிகளில் ஏறும் போது அவதானமாக இருங்கள். முடிந்தால் துணையுடன் ஏறுங்கள்.
2. குளியலறையில் கவனம் அதிகம் தேவை. வழுக்கி விழாமல் உறுதியாக நிதானமாகச் செல்லுங்கள். பல என்புமுறிவுகள், குளிக்குமிடத்தில் வழுக்கி விழுவதால்தான் ஏற்படுகின்றன.
3. நின்றவாறு உள்ளாடை போடுவதைத் தவிர்க்கலாம். சமநிலை தவற வாய்ப்புண்டு.
4. உடற்பயிற்சி செய்யும்போது கவனம். மென்மையான எளிமையாக பயிற்சிகள் மட்டுமே போதுமானது. உதாரணமாக நடத்தல், பூங்கன்றுகளுக்கு அல்லது பயிர்களுக்கு நீரை வாளியில் எடுத்து ஊற்றுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. எடை அதிகம் உள்ள பொருள்களை குனிந்து தூக்காதீர்கள். முழங்கால் நோவு , முதுகு நோவு போன்றவை ஏற்படலாம்.

6. படுக்கையில் இருந்து எழுந்திருக்கும் போது உடனடியாக எழுந்து நிற்கவோ நடக்கவோ வேண்டாம். இரண்டு நிமிடங்கள் படுக்கையிலேயே அமர்ந்து இருந்து விட்டு பின் நிதானமாக எழுந்திருங்கள். ஓரிரு நிமிடங்களின் பின் நடவுங்கள்.

7. உணவு உண்ணும் போது நிதானம் தேவை. தொண்டையில் உணவு அடைத்து கொண்டால் இரண்டு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்துங்கள். அடைத்து கொண்ட உணவு தானாக இறங்கும். பதட்டப்படாதீர்கள்.

8. சரியான தலையணையை உபயோகப்படுத்துங்கள். இல்லையேல் கழுத்து வலி, தோள்வலி என்று அவதிப்பட வேண்டி வரும்.

9. சுய மருத்துவம் வேண்டவே வேண்டாம். டாக்டரது ஆலோசனை இன்றி எந்த ஆங்கில மருந்தையும் எடுத்துக் கொள்ளாதீர்கள்.

10. தினமும் 30 நிமிடங்கள் நடைப்பயிற்சி செய்தால் சிறப்பு. இயல்பாக கை கால்களை நன்றாக வீசி நடங்கள். மற்றவர்களோடு போட்டி போடுகிறேன் என்று மூச்சிரைக்க, வேர்க்க விறுவிறுக்க நடக்காதீர்கள்.

11. தினமும் குறைந்தது 2 அல்லது 3 போத்தல் தண்ணீர் பருகுங்கள். இதனால் தசைப் பிடிப்பு, பாரிசவாதம் போன்றவை வருவதைத் தடுக்கலாம்.

நட...நட... நட... நடராஜா

* நடக்கவேண்டும். சிலர் நடப்பதையே மறந்து விட்டார்கள். வீட்டிற்கு வெளியே வாகனம், நேராக அலுவலகம், உட்கார்ந்து கொண்டே வேலை, பின் வீடு, TV, தூக்கம், மிகக் குறைவான நடை, உடல் நலம் சீக்கிரம் பாதிப்படையும்.

* முன்பு நமது கிராமங்களில் வாங்க, வாங்க, எந்த வண்டியில் வந்தீங்க என கேட்பார்கள். அதற்கு வந்தவர், நடராஜா வண்டியிலதான் வந்தேன், அதுதானே நம்மது என்பார். அந்தக் காலத்திலே நடை அதிகம். எனவே ஆரோக்கியம் நன்றாக இருந்தது.

* ஆம், நடராஜா வண்டி எனச் சொல்லக்கூடிய எமது கால்கள் சரியாக இருந்தால் மட்டுமே நாம் நடமாட முடியும் என்ற மாபெரும் உண்மையை எப்போதும் நினைவில் கொள்வோம்.

* கால்கள் சரியாக இருந்தால் மட்டுமே நமது வாழ்க்கை நகரும். இல்லையெனில் முடங்கும். தயவு செய்து கால்களை உற்றுப்பாருங்கள். விரல்கள், விரல் இடுக்குகள், பாதங்கள், என உற்றுப்பாருங்கள். நம் உடல் முழுவதையும் தாங்கிக் கொள்கிற, நம்மை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்துகின்ற, இந்தப் பாதங்களைப் பாருங்கள்.

* சிலர் பாதங்களில் வெடிப்புகளோடு இருப்பார்கள். நடப்பது, நிற்பது என எல்லாம் சிரமமாகும். சிலர் கால் ஆணி எனப்படும் துயரோடு இருப்பார்கள். வலி சொல்ல இயலாது இருக்கும். இதுபோல் ஆகும் முன் தயவு செய்து கால்களைக் கவனிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்களைப் பாதுகாக்க எளிய வைத்தியம்

* இரவு தூங்கப் போவதற்கு முன் வெதுவெதுப்பான நீரில் கல் உப்பு, மஞ்சள் தூள், இருந்தால் எலுமிச்சைச்சாறு கலந்து அவற்றில் கால்களை கால் மணிநேரம் வைத்திருங்கள். சுகமாக இருக்கும். பின் மெதுவாக தேய்த்து விடுங்கள். மசாஜ் செய்வது போல நீங்கள் கவனிக்க ஆரம்பிக்க, பித்தவெடிப்போ, கால் ஆணியோ குணமடையும்.
* நடவுங்கள். தயவுசெய்து நித்தமும் ஒரு 30 நிமிடம் நடவுங்கள். பூமியில் உங்கள் பாதம் படும் அழகை, உங்களுக்கும் இந்தப் பூமிக்குமான தொடர்பை, நெருக்கத்தை உணர்ந்து, ரசித்து அமைதியாக இயற்கையை ரசித்து, நேசித்து நடவுங்கள்.
* நடந்துபோகும் தூரங்களுக்கு எல்லாம் மோட்டார் சைக்கிள், கார் எனத் திரியாமல் நடக்கலாம்.
* நீங்கள் நடக்க சோம்பேறித்தனம் கொண்டால் பிற்காலத்தில் நடக்க இயலாத சூழல் கூட உருவாகும். ஆதலால் நடவுங்கள். உங்கள் உடம்பு சொல்லும் அளவு நடவுங்கள்
* நடப்பது நல்லது. அதிலும் செருப்பில்லாமல் மண்தரையில், புல்வெளியில் நடப்பது இன்னும் நல்லது.
* நடப்பதை இயல்பாக்கிக் கொள்வோம். உடல்நலம் காப்போம்.

சுய ஒழுக்கம் (Self Discipline)

1. தொடர்ச்சியாக இரண்டு முறைக்கு மேல் யாருக்கும் தொலைபேசியில் அழைப்பு எடுக்காதீர்கள். அவர்கள் முக்கிய வேலையாக இருக்கலாம், அல்லது பேச முடியாத சூழ்நிலையில் இருக்கலாம்.
2. உணவு விடுதியில் சாப்பிடலாம் என நண்பர் உட்பட யார் அழைத்தாலும், Menu cardy; costlyயாக உள்ள எதையும் Order செய்யாதீர்கள். அழைத்தவரையே உங்கள் விருப்பப்படி Order செய்யச் சொல்லலாம்.
4. இன்னும் கல்யாணம் ஆகவில்லையா? குழந்தைகள் இல்லையா? இன்னும் சொந்தவீடு வாங்கவில்லையா? ஏன் இன்னும் Car வாங்கவில்லை? இது நமது பிரச்சினை இல்லைத் தானே! இது போன்ற தர்மசங்கடமான கேள்விகளைத் தவிர்க்கலாம்.
5. தானியங்கிக் கதவை திறக்க நேர்ந்தால் பின்னால் வருபவர் ஆணோ, பெண்ணோ, சிறியவரோ, பெரியவரோ அவர்கள் வரும்வரை மூடாமல் பிடித்திருப்பது அவர்களை சமூகத்தில் பொறுப்புள்ளவர்களாக மாறச்செய்யும்!
6. நண்பருடன் Taxi யில் சென்றால் இம்முறை இயலாவிட்டால் மறுமுறை நீங்கள் காசு கொடுத்துவிடுங்கள்.
7. மற்றவர்களின் கருத்துக்கு மதிப்பளியுங்கள்.
8. அடுத்தவர்கள் பேசும்போது இடைமறிக்காதீர்கள். அவர்கள் கூறுவதை செவிமடுங்கள். நல்லவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நீங்கள் கிண்டலடிப்பதை சம்பந்தப்பட்டவர் ரசிக்கவில்லை என்றால், மீண்டும் அதைச் செய்துவிடாதீர்கள். அவரை உற்சாகப்படுத்துங்கள். உங்கள் மதிப்பை அது மேம்படுத்தும்.

10. யார் உதவினாலும் பாரபட்சமின்றி நன்றி சொல்லுங்கள்.

11. பொதுவில் புகழுங்கள். தனியாக இருக்கையில் குறைகளை சுட்டிக்காட்டலாம்.

12. உடற்பருமனை ஒருபோதும் கிண்டலடிக்காதீர்கள்.

"நீங்கள் பார்க்க Smartlhf, Cutelhf இருக்கிறீர்கள் என்று கூறுங்கள். உடல் எடை குறைக்க அவராகக் கேட்டால் ஒழிய நாம் அறிவுரை வழங்கக் கூடாது.

13. யாராவது அவர்கள் Photoவைக் காட்ட Phoneனைக் கொடுத்தால் Galleryயில் இடது வலதாக தள்ளிப் பார்க்காதீர்கள். அடுத்து என்ன இருக்கும் என்று உங்களுக்குத் தெரியாது.

14. யாரும் தனக்கு Doctor Appointment இருக்கிறது, போகவேண்டும் என்றால், உடனே என்ன நோய்க்கு என்று கேட்டுவிடாதீர்கள். அவர்களின் தனிப்பட்ட நோய்கள் பற்றி மற்றவர்களுக்கு தெரியக்கூடாது என்று கருதலாம். விரைவில் நலமடைவீர்கள் என்று நம்புகிறேன் என்று கூறலாம்.

15. நண்பர்களிடமோ யாரிடமோ நேரில் சந்தித்துப் பேசும்போது Phone ஐ நோண்டிக் கொண்டிருக்காதீர்கள்.

16. கேட்டால் தவிர அறிவுரை வழங்காதீர்கள்.

17. நீண்ட நாட்கள் கழித்து யாரையும் சந்தித்தால், அவர்களின் சம்பளம், வயது ஆகியவற்றைக் கேட்காதீர்கள்.

18. தெருவில் யாரையாவது சந்திக்க நேர்த்தால், கறுப்புக்கண்ணாடி அணிந்திருந்தால் கழற்றிவிட்டுப் பேசுங்கள். கண்பார்த்துப் பேசுதல் நம்பிக்கைக்கு நல்லது.

19. எவரதும் தனிப்பட்ட பிரச்சினையில் நேரடியாக வலியப் போய்த் தலையிடாதீர்கள்.

குளிக்கும் போது கவனிக்கவேண்டியவை

நம்மில் ஆரோக்கியமான பலர் திடீரென குளியலறையில் விழுந்த பிறகு பக்கவாதம் மற்றும் மயக்கம் போன்ற கவலையான செய்திகள் பலவற்றை நாம் அடிக்கடி கேள்விப் படுகிறோம்.

ஒரு ஆரோக்கியமான வாழ்க்கை முறை என்ற கலந்துரையாடல் வகுப்பில் பங்கேற்றபோது தேசிய விளையாட்டு கவுன்சிலின் பேராசிரியர் கூறியவை:

* குளிக்கும் போது முதலில் தலைமுடியைக் கழுவ வேண்டாம் என்று அறிவுறுத்தினார்.

* நாம் குளிக்கும்போது முதலில் தலைமுடியைத் தவிர உடலின் மற்ற பாகங்களை கழுவ வேண்டும். ஏனென்றால், தலை ஈரமாகவும் குளிராகவும் இருக்கும்போது, தலையை சூடாக்க இரத்தம் நம் தலையை நோக்கிப் பாயும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அச்சமயத்தில் இரத்தம் பயணிக்கக்கூடிய நாடிகள் குறுகினால், அது இரத்த நாடிகளைச் சிதைப்பதற்கு வாய்ப்புள்ளது.

நாம் முதலில் குளிக்கும்போது எதில் இருந்து நீர் ஊற்றத் தொடங்கி பின் தலைக்கு எப்படி நீர் ஊற்ற வேண்டும் என்பதை வரிசைப் படியாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளது

1. பாதத்தின் அடிப் பகுதியிலிருந்து தொடங்குகிறது
2. பாதத்திற்கு மேல் உள்ள முழங்கால் பகுதி
3. தொடைகள்
4. அடிவயிறு
5. தோள்பட்டை
6. 5-10 விநாடிகள் நீர் ஊற்றாமல் சிறு இடைவேளை

* இச்சமயத்தில் நம் உடலில் இருந்து நீராவி அல்லது காற்று நிரம்பி வழிவது போல் உணருவோம். பின்னர் வழக்கம் போல் தலைக்கு நீரூற்றிக் குளிக்கவும். இதனைத்தான் முன்னோர்கள் படிநீர் ஆடு என்பார்கள்.
* முதலில் நேரடியாக தலைக்கு நீர் ஊற்றுவது என்பது சூடான நீரில் நிரப்பப்பட்ட கண்ணாடிக் கிளாஸில், குளிர்ந்த நீரை நிரப்புவதற்கு ஒப்பாகும். கண்ணாடியில் வெடிப்பு ஏற்பட்டு உடையும் நிலை வரும். !!!

இதேபோன்ற நிகழ்வு நம் உடலில் ஏற்பட்டால் ... என்ன நிலை உருவாகும்?

* பொதுவாக நமது உடல் வெப்பநிலை சூடாகவும், தண்ணீர் குளிராகவும் இருக்கிறது, எனவே முதலில் நாம் உடலில் அல்லது தலையில் நேரடியாக நீர் ஊற்றும்போது, இரத்த நாடிகள் சிதைவதால் இரத்தக் கசிவு போன்ற அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும்.
* இதனால்தான் மக்கள் திடீரென குளியலறையில் விழுவதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம்.
* தவறான குளியல் முறையின் காரணமாகவே, பலருக்கு பக்கவாதம் அல்லது ஒற்றைத் தலைவலி ஏற்படுகிறது.
* இந்த பாதம் முதல் தலைவரை நீரூற்றி குளிக்கும் முறையானது அனைத்து வயதினருக்கும் பொருத்தமானது.
* அதிலும் குறிப்பாக நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் மற்றும் ஒற்றைத் தலைவலி/ தலைவலி உள்ளவர்களுக்கு மிகவும் ஏற்றது.
* குளிர்ந்த நீரில் குளிப்போம்!
* சூடான நீரை குடிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நோயற்ற பெரு வாழ்வு வாழ்வோம்

* இறுதியாக நீங்கள் ஒருவரைப்பற்றி மற்றொருவரிடம் கூறும்போது சோக்கிரட்டீஸ் என்ன சொன்னார் என்பதைப் பாருங்கள்.

* ஒருமுறை சோக்ரட்டீஸ் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் வந்து அவருடைய நண்பரைப் பற்றி ஏதோ கூற முயன்றார். உடனே சாக்ரட்டீஸ் அவரிடம், என் நண்பரைப் பற்றி என்னிடம் கூற விரும்பினால் அதற்கு முன் 3 கேள்விகளைக் கேட்பேன். மூன்று கேள்விக்கும் ஆம் என பதில் இருந்தால் மட்டுமே நீங்கள் அவரைப் பற்றிக் கூறலாம் என்றார். சோக்ரட்டீஸ் முதல் கேள்வியைக் கேட்டார்.

அவர் செய்த செயலை நேரடியாகப் பார்த்துவிட்டு தான் அவரைப் பற்றி கூறுகிறாயா ? என்று கேட்டார்.

இல்லை எனப் பதில் சொன்னார்.

அவரைப் பற்றிய நல்ல விடயத்தைக் கூறப்போகிறாயா? என்று இரண்டாவது கேள்வியைக் கேட்டார்.

இல்லை எனப் பதில் சொன்னார்.

அந்த நண்பரைப் பற்றி என்னிடம் கூறினால் யாராவது பயனடைவார்களா? என்ற மூன்றாவது கேள்வியைக் கேட்டார்.

இதற்கும் இல்லை என்றே பதில் வந்தது.

யாருக்கும் பயனில்லாத, நல்ல விடயமுமில்லாத, நேரடியாக நீங்கள் பார்க்காத, என் நண்பரைப் பற்றிய சம்பவத்தை தயவு செய்து என்னிடம் கூறாதீர்கள் என்றார். எனவே வேண்டாத விடயங்களைப் பிறரிடம் கூறுவதைத் தவிருங்கள்.

நன்றி

வைத்தியகலாநிதி தம்பிப்பிள்ளை பேரானந்தராசா

பொது வைத்தியநிபுணர்

போதனா வைத்தியசாலை

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வங்கியியல் பற்றிய ஓர் அறிமுகம்

அறிமுகம்

வங்கி என்ற பதம் இத்தாலிய Banco சொல்லான என்ற சொல்லிலிருந்து உருவானது. இது Desk/Bench என்ற கருத்தை வழங்குகின்றது. ஆரம்ப காலங்களில் வங்கியாளர்கள் தாங்கள் பயன்படுத்தும் மேசைவிரிப்புகளுக்கு பச்சை நிறத்தையே பயன்படுத்தினர்.

வங்கியியலை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம். "வங்கி என்பது ஓர் ஒழுங்குபடுத்தப்பட்ட நிறுவனமாகும். இது வேறுபட்ட வைப்புக்களை ஏற்று அவர்களது வேண்டுகோளுக்கு அமைவாக கடன்களை வழங்ககின்றது."

மேற்குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத்திற்கு அமைவாக வங்கியானது பல மில்லியன் தனிப்பட்டவர்களின் தேவைகளுக்கு மிகையாகக் காணப்படும் பணத்தினை வைப்பாக திரட்டுகின்றது. பின்னர் அப் பணத்தை முதலீட்டு ஆர்வமுள்ளவர்களுக்கு குறுங்கால நீண்டகால அடிப்படையில் கடனாக வழங்குகின்றது. இதன் மூலம் பண வளர்ச்சிக்கும் முதலீட்டு உருவாக்கத்திற்கும் வங்கி உதவுகின்றது எனலாம்.

வங்கியால் பெற்றுக்கொள்ளப்படும் நிதியானது உட்கட்டமைப்பு அபிவிருத்திக ளுக்கும் விவசாய வலுவூட்டல்களுக்கும் கைத்தொழில் முன்னேற்றத்திற்கும் உலக வியாபார மாற்றங்களுக்கும் நாட்டுக்கான நிதியை வழங்குகின்றது.

வங்கிகள் பொருளாதார மற்றும் இறைக்கொள்கை போன்றவற்றிற்கு அரசாங்கத்திற் கான ஒரு இடைநடுவராகத் தொழிற்படுகின்றது. எனவே வங்கிகளை நாட்டின் நிதிமுறைமையின் இதயம் எனக் குறிப்பிடலாம்.

மேலதிக நிதியைக் கொண்டிருப்போர் (சேமிப்பாளர்) —இடைநடுவர் (வங்கி)→ பற்றாக்குறை நிதித்தேவையுடையோர் (முதலீட்டாளர்)

இலங்கையின் நிதியியல் முறமை

நிதியியல் முறைமை என்பது ஒரு நாட்டில் காணப்படுகின்ற அனைத்து நிதிசார் நிறுவனங்களையும் ஒழுங்குமுறையாக்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய அனைத்தையும் குறிப்பிடும். அமைதியானதும், சிறந்ததுமான நிதியியல் சூழல் ஒன்றை உருவாக்க நிதியியல் முறைமை உதவுகின்றது. அண்மைக்காலத்தில், உலகில் உருவாகிய பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிகள் வங்கிகள் மற்றும் ஏனைய நிதிநிறுவனங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறையாக்கலுக்கு உள்ளாகின்ற அதிகார சபைகள் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியது. குறிப்பாக இங்கிலாந்தில் வங்கி முறைமைகளில் உருவாகிய நெருக்கடி நிலமைக்கு அப்போது காணப்பட்ட ஒழுங்கு முறையாக்கல் நிறுவனங்களே பொறுப்பு என்ற குற்றச்சாட்டு எழுந்தது.

நிதியியல் முறைமை ஒன்றில் காணப்படுகின்ற நுண்ணிய முறைசாராத அசைவுகள் கூட நிதியியல் முறைமையினை குழப்பிவிடலாம். இதனால் நிதி நெருக்கடி மற்றும் பொருளாதார சமமின்மைகள் உருவாகி அதன் மூலமாக பாரிய விளைவுகள் உருவாகிவிடும். இதனால் நிதியியல் முறைமைகளும் அதில் காணப்படும் நிறுவனங்களும் முக்கியமானவை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் நிதியியல் முறைமை பிரதான நிதியியல் நிறுவனங்களை உள்ளடக்கி உள்ளது. அவ்வாறான நிதியியல் நிறுவனங்களாகப் பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்.

* இலங்கை மத்திய வங்கி,
* உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்,
* உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்,
* உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்,
* சிறப்பு குத்தகை வழங்கும் கம்பனிகள்,
* முதன்நிலை வணிகர்கள்,
* ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதிகள்,
* காப்புறுதிக் கம்பனிகள்,
* கிராமிய வங்கிகள்,
* பங்குத் தரகர்கள்,
* பிணையங்கள் மற்றும் சந்தை இடையீட்டாளர்கள்,
* கூறு நம்பிக்கைகள் மற்றும் சேமிப்பு, கொடுகடன் கூட்டுறவு சங்கங்கள்.

வங்கித்தொழில் வியாபாரம்

வங்கித்தொழில் வியாபாரம் என்பது வைப்புக்களைப் பெறுதல் கடன்வழங்கல் எனப்பொருள்படும். அதாவது மிகையான பணம் உள்ளவர்களிடம் இருந்து வைப்புக்களைப் பெற்று அதனை முதலீட்டு ஆற்றல் உடையவர்களுக்கு பணத்தேவை உள்ளவர்களுக்கு கடனாக வழங்குதல் ஆகும். இதற்காக பணக்கொள்வனவு மற்றும் பண விற்பனை இரண்டுக்கும் இடையில் செயற்பட்டு இலாபத்தினை உழைக்கின்றது. குறிப்பாக வணிக வங்கிகள் நிதிக்கட்டமைப்புக்குள் முக்கியமான வகிபாகத்தினை வழங்கி அதன் மூலமாக இடர்களினை முகாமை செய்து பொருளாதாரத்திற்கு திரவத்தன்மையினை வழங்குகின்றன.

வங்கிகளின் இன்றைய அவசியம்

1. சேமிப்பு ஆற்றல்களை பொதுமக்கள் மத்தியில் அதிகரித்துக் கொள்ளவதற்கு.
2. நாட்டின் மூலதன சந்தைகளை அபிவிருத்தி செய்வதன் மூலமாக மூலதனங்களை உருவாக்கிக் கொள்வதற்கு.
3. பணக்கொள்கைகளை செயல்முறைப்படுத்துவதற்கு.
4. தொழில் நிறுவனங்கள் மற்றும் பாரிய உற்பத்தி தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு
5. பிராந்திய ரீதியான முன்னேற்றங்களை ஏற்படுத்துவதற்கு
6. விவசாயம் மற்றும் மரபுரீதியான தொழிற்துறைகளை முன்னேற்றுவிப்பதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதி நிறுவனங்களின் வகைப்படுத்தல்கள்

இலங்கை மத்திய வங்கியின் கட்டுப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நிதிநிறுவனங்களை பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

1. இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படும் நிதிநிறுவனங்கள்
2. இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படாத நிதிநிறுவனங்கள்

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படும் நிதிநிறுவனங்கள்

மத்தியவங்கியினால் நேரடியாக ஒழுங்குபடுத்தப்படுவதும் கட்டுப்படுத்தப்படுவதுமான நிதிநிறுவனங்கள் அனைத்தும் இதனுள் அடக்கப்படும். பின்வருவன அவ்வாறான நிதிநிறுவன வகைகள் ஆகும்.

* அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள்
* அனுமதிக்கப்பட்ட விசேட வங்கிகள்
* அனுமதிக்கப்பட்ட நிதிக்கம்பனிகள்
* அனுமதிக்கப்பட்ட குத்தகைக் கம்பனிகள்
* அனுமதிக்கப்பட்ட முதல்நிலை வணிகர்கள்

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப்படாத நிதிநிறுவனங்கள்

குறிக்கப்பட்ட அளவிலான நிதிநிறுவனங்கள் மத்திய வங்கியினால் ஒழுங்குபடுத்தப் படாத நிதிநிறுவனங்களாக இலங்கையில் செயற்படுகின்றன. இவ்வாறான நிதிநிறுவனங்கள் வெவ்வேறு விதமான தனித்துவமான நிறுவனங்களின் கீழ் தமது செயற்பாடுகளை மேற்க்கொள்கின்றன. அவ்வாறான நிறுவனங்கள் பின்வருமாறு:

* பங்குத்தரகர் நிறுவனங்கள்
* அலகுப்பொறுப்பாட்சி நிறுவனங்கள்
* முதலீட்டு முகாமைத்துவ நிறுவனங்கள்
* காப்புறுதிக் கம்பனிகள்
* காப்புறுதித் தரகர்கள்
* துணிகர மூலதனக் கம்பனிகள்
* ஊழியர் சேமலாப நிதியங்கள்
* ஒய்வூதிய திணைக்களங்கள்
* நுண்பாக நிதியிடல் கம்பனிகள்

இலத்திரனியல் வங்கியியல்

இலத்திரனியல் வங்கியியல் என்பது கணணி வலைப்பின்னல்களை பயன்படுத்தி தகவல் தொழில்நுட்ப முறையினூடாக இடம்பெறுகின்ற கொடுக்கல் வாங்கல் நடைமுறைகளைக் குறிக்கும். இவ் வங்கியியலானது தங்போது அதிகம் பிரபலமடைந்த வங்கி முறையாகக் காணப்படுகின்றது. இவ் வங்கியியலின் பல்வேறு முறைகள் பின்வருமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. Personal computer banking - பிரத்தியேக கணணிமுறையிலானவங்கிச் சேவை.
2. Internet banking - இணையத்தள வங்கிச் சேவை
3. Virtual banking - பௌதீகப் பிரதேசமற்ற வங்கிச்சேவை
4. Online banking - தொடரறா வங்கிச்சேவை
5. Home banking - வீட்டுக்கு வீடு வங்கிச்சேவை
6. Remote electronic banking - தொலைவில் இருந்து வங்கிகளை இயக்குதல்
7. Mobile banking - தொலைபேசி வங்கிச்சேவை

மேற்காட்டப்பட்ட அனைத்து முறைகளையும் இணைத்ததே இலத்திரனியல் வங்கியாகும். இலத்திரனியல் வங்கி என்பதனை தன்னியக்க விநியோகம், மரபுரீதியற்ற வங்கி சேவைகள் மற்றும் புதிய வங்கி சேவைகள் என வரையறுக்கலாம்.இது வாடிக்கையாளர்களை நேரடியாக இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் மூலமாக இணைக்கின்றது. இது வாடிக்கையாளர்களை அவர்களின் பல்வேறுதேவையின் போது வங்கியுடன் நேரடியாக இணைக்கின்றது. இதன் மூலம் இவை தமது பிரத்தியேக கணணிகளை தனிப்பட்ட பொதுத் தொடர்பாடல் மூலம் இணைத்து பிரத்தியேகமான சேவைகளை வழங்குகின்றன.

1995 இல் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்ட 'first security network bank" என்பதே இலத்திரனியல் வங்கியின் முதல்படி எனலாம்.

இலத்திரனியல் வங்கிகளின் பகுதிகள்

தன்னியக்க வங்கியியல் முறைமையானது பல்வேறு பகுதிகளைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப் பகுதிகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

* தந்திரோபாய நோக்கங்கள்
* தொழில்நுட்ப வல்லுநர்கள்
* பாதுகாப்பு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள்
* முறைமை மற்றும் செயற்பாடுகள

நிதி நிறுவனங்கள் இலத்திரனியல் வங்கியியல் சேவைகளை தமது சேவைகளின் போது உதவியாக பெற்றுக்கொள்கின்றன. நிதி நிறுவனங்கள் தமது இலத்திரனியல் முறைமைக்கு மூன்றாம் நபரிடமிருந்து உதவிகளைப் பெற்றுக் கொள்கின்றன. பொதுவாக இலத்திரனியல் வங்கிச் சேவை ஒன்றுக்கு பின்வரும் சேவைகள் இன்றியமையாதவை.

* Another financial institution - பிறிதொரு நிதியியல் நிறுவனம்
* Internet services provider - இணையச் சேவை வழங்குனர்
* Internet banking software vendor or procedures - இணைய வங்கி மென்பொருள்
* Core banking vendor or procedures - வங்கித் தொழில் செய்முறைகள்
* Managed security service provider - பாதுகாப்பு வழங்குனர்
* Credit bureau - கடன் தகவல் பணியகம்
* Credit scoring company - கடன் தரப்படுத்தல் நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைய வங்கியின் வாடிக்கையாளர் சேவைகள்

* கணக்கின் மீதிகளை அறியமுடியும்.
* கணக்கின் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பான கூற்றுக்களையும் பெற முடியும்.
* குறித்த வாடிக்கையாளரின் கணக்குகளுக்கிடையில் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ள முடியும்.
* மூன்றாம் நபரின் கணக்குகளுக்கு பணப் பரிமாற்றம் மேற்கொள்ளமுடியும்.
* காசோலைப் புத்தகங்களின் விண்ணப்பங்களை மேற்கொள்ளமுடியும்.
* காசோலை மீதான கொடுப்பனவு நிறுத்தங்களை மேற்கொள்ளமுடியும்.
* கணக்குடன் தொடர்புடைய நிலையான கட்டளைகளுக்குரிய விண்ணப்பங்களை மேற்கொள்ளமுடியும்.
* பல்வேறுவிதமான கொடுப்பனவுகளை மேற்கொள்ளமுடியும்.
* நிலையான வைப்புக்கள் தொடர்பினை புதுப்பித்தல் தொடர்பான விண்ணப்பங்களை மேற்கொள்ளமுடியும்.
* பல்வேறுவிதமான சந்தேகங்களுக்குரிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தன்னியக்க ரெலர் இயந்திரம் (Automated TellerMachine) (ATM)

தன்னியக்க ரெலர் இயந்திரம் என்பது தன்னியக்கமான கணனி மயப்படுத்தப்பட்ட ஓர் தொடர்பாடல் ஊடகம் ஆகும். இவ் ஊடகம் நிதி நிறுவனங்களால் வாடிக்கையாளர்களுக்கு நிதி கொடுக்கல் வாங்கல்களை இலகுவாக மேற்க்கொள்வதற்காக அமைக்கப்பட்ட ஓர் உபகரணமாகும். இம்முறைக்கு ஊழியர்களின் சேவைகள் அவசிய மற்றதாகும். இவ் இயந்திரத்தில் பிளாஸ்ரிக் அட்டைகளைப் பயன்படுத்தி தமக்குரிய திறவுச் சொற்களின் மூலமாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்குப் பிரதானமானது (PIN- Personal Identification Number) ஆகும்.

ATM இன் நன்மைகள்

வாடிக்கையாளர்களுக்கு:

1. வாரத்தில் 7 நாட்களும் 24 மணிநேரமும் சேவையைப் பெறமுடியும்.
2. விரைவான வினைத்திறனான சேவையினைப் பெறமுடியும்.
3. வங்கியின் கருமபீடத்திற்கு செல்லாமலேயே வசதியான இடத்தில் சேவையினைப் பெறமுடியும்.
4. குறுகிய அறிக்கைகளை பெறமுடியும்.
5. பாதுகாப்பான முறையில் பணத்தினை இடம் நகர்த்த உதவும்.

வங்கிக்கு :

1. வங்கிகளின் கருமபீடங்களின் வேலைப்பளு குறைவடையும்.
2. வங்கிக் கிளைகளில் வாடிக்கையாளர் நெருக்கடியுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறைவடையும்.
3. வங்கிகளின் புதியகிளை உருவாக்கம் மற்றும் நீடித்த கருமபீடம் தொடர்பான செலவு குறைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. புதிய வாடிக்கையாளர்களை இலகுவாக கவரமுடியும்.

5. வாடிக்கையாளர் விசுவாசம் அதிகரிக்கும்.

தொலைச் சந்தைப்படுத்தல் (Tele Marketing)

வாடிக்கையாளர்கள் தொலைபேசியினைப் பயன்படுத்தி தமக்கு சௌகரியமான இடங்களிலிருந்து எந்நேரமும் வங்கிச்சேவையினை பெறக்கூடிய விதத்தில் அனுமதிக்கப் பட்ட ஓர் வங்கிச்சேவை இதுவாகும்.

குறிப்பாக இச்சேவை எந்நேரமும் எவ் இடத்தில் இருந்தவாறும் சேவைகளை பெறக் கூடியவாறு வடிவமைக்கப்பட்ட ஓர்முறையாகும். இம்முறை தன்னியக்கமான குரலொலிகள் மூலம் ஒழுங்குபடுத்தப்பட்ட முறை ஆகும்.

இவ்வாறான தொலை வங்கிச் சேவையானது பல்வேறு விதமான நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு ஏற்படுத்துகின்றது.

* சௌகரியமான தன்மை
* விரைவான தன்மை
* செலவு குறைந்த தன்மை
* அதிகளவு வாடிக்கையாளர்களை கவரக்கூடிய தன்மை

கடன் அட்டை (Credit Card)

கடனட்டை என்பது வாடிக்கையாளர்களுக்கு பிணைகள் எதுவுமின்றி வழங்கப்படுகின்ற குறுகியகாலக் கடன் வசதி என வரையறுக்கலாம். இவ்வாறான கடனட்டைகளை தம்வசம் வைத்துள்ள வாடிக்கையாளர்கள் பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்வதற்கும் வரையறுக்கப்பட்ட அளவில் முற்பணங்களைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். இலங்கையில் 1989ம் ஆண்டில்வர்த்தக வங்கிகளினால் அறிமுகப்படுத்தப்பட்டது. கடனட்டையின் தகவல்களைப் பெறுகின்ற வியாபாரி அத் தகவல்களை வங்கிக்கு சமர்ப்பிக்கின்ற போது கொள்வனவின் பெறுமதியானது வியாபார நிறுவனத்திற்கு வங்கியினால் செலுத்தப்படும்.

கடன் அட்டையின் நன்மைகள்

வாடிக்கையாளர்களுக்கு

1. கடனடிப்படையில் கொள்வனவு செய்வதற்கான வசதி காணப்படும்.
2. பணம் இடம் நகர்த்துவது தொடர்பான ஆபத்துக்களைக் குறைத்தல்.
3. சில்லறை நிறுவனங்களில் மீதி சில்லறைகளை பெறுவது தொடர்பான பிரச்சினைகளை நீக்க உதவுதல்.
4. பணக்கழிவுகள் மற்றும் வெகுமதிப் புள்ளிகள் போன்ற நன்மைகளைப் பெற முடிதல்.
5. இணையங்கள் மூலம் கொள்வனவுகளை இலகுவாக மேற்கொள்ள முடிதல்.

கடன் அட்டை தொடர்பான மத்திய வங்கியின் மேற்பார்வை

இலங்கையில் கடன் அட்டையானது 2005 ஆண்டு 28 இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமை சட்டத்தின் கீழ் கடன் அட்டை வழங்குபவர்களுக்கான் சட்டம் 2009 ஆண்டு 1 இலக்கத்தின் கீழ் உருவாக்கப்பட்டு, தற்போது 2013 ஆண்டின் 1 இலக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவு அட்டை மற்றும் செல்லிடத் தொலைபேசி சார்ந்த கொடுப்பனவு முறைகளுக்கான கட்டளைகளின் மூலம் உருவாக்கப்படுகின்றது.

பற்று அட்டைகள் (Debit Card)

வங்கிகளில் சேமிப்பு வைப்பு மற்றும் நடைமுறை வைப்பினைப் பேணுகின்ற வாடிக்கையாளர்களுக்கு வங்கிகளினால் வழங்கப்படும் அட்டை பற்று அட்டை ஆகும். ஏதேனும் ஒரு பற்று அட்டை மூலமான கொள்வனவின் போது கொள்வனவு செய்த பெறுமதியானது வாடிக்கையாளரின் குறித்த வங்கிக் கணக்கில் பற்று வைக்கப்படும். இவ் அட்டையின் மூலமாக கொள்வனவு செய்யப்படும் உச்ச பெறுமதி அக்கணக்கில் வாடிக்கையாளர் வைத்துள்ள மீதிக்குச் சமனாக காணப்படும்.

உசாத்துணை நூல்கள்

* Glenn Hubbard & Anthony Partrick o' Brien (2018), money, Banking and the Financial system, 2nd Edition, Person publication, pp (15 - 20)
* Tims.Campbell & william A.Kracaw (2010) Financial Risk management, Haper Collins College publishers pp (17 - 26)
* Astan Development Bank (2014), monetary and financial Integration in Asia, Volume 02 pp (285 - 300)
* Wimal Hettiarachchi (2018), Development of Banking in post - Independence SriLanka,The way forward, Bankers ' perspectives, Association of professional Bankers - Srilanka, pp (1-25)
* Kannangara D.L (1998), some Aspects of Central Banking The way forward, Bankers ' perspectives, Association of professional Bankers (pp 26 - 36)
* Wickrema s weera sooria, (1998) The Financial system, Banking and cheque law in Srilanka, The Institute of Bankers of Srilanka, Financial system stability Review (2019) , Central Bank of SriLanka.
* Somashekar.N.T (2010), Banking New age international (p) Limited, publishers. pp (2 - 26)

Prof. T. Velnampy
Senior Professor, Faculty of Mgt Studies &
Commerce, University of Jaffna.

C. Umakanth
Senior Lecturer,
Faculty of Mgt Studies &
Commerce, University of Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்தும் அறியாததும்

மனிதவாழ்வானது பிறப்பு முதல் இறப்பு வரை எப்போதும் போராட்டம் நிறைந்ததாகவே இருக்கும். இந்த போராட்ட வாழ்வினை சரியான முறையில் முகாமை செய்யப்படுகின்ற பொழுது வாழ்வை சந்தோசத்தையும், மலர்ச்சியையும் தரும் ஒரு அமைதிப் பூங்காவாகவும் மாற்றிக் கொள்ளலாம். முகாமை என்பது ஒரு வணிகச் சொல்லாக இருந்தாலும் அல்லது நவீனச் சொல்லாக இருந்தாலும் அது மனிதகுலம் தோன்றிய திலிருந்து செயல்முறைப்படுத்தப்படுகின்ற ஒரு செய்கையாக மனித வாழ்வில் இயல்பாக அமைந்துவிடுகின்றது.

குடும்பத்தில் அம்மா முதல் சகல அங்கத்தவர்களும் முகாமைத்துவத்தின் சகலநுட்பங்களையும் பயன்படுத்தி கொண்டே இருக்கின்றனர். அம்மாவானவர் வீட்டில் மூன்று நேர சமையல் செய்வதனையே அனுபவத்தின் ஊடாகவும், அறிவினூடாகவும் திட்டமிட்டே தங்களை அறியாமல் செயற்படுத்துகின்றனர். சமையலுக்கு தேவையான அத்தனை உள்ளீடுகளையும் முறைப்படி திட்டமிட்டு மீள்நிரப்பிக் கொள்ளுதலும், களஞ்சியப்படுத்தலும் அதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளுவதும் அம்மாவினால் செய்யப்படுகின்ற ஒரு முகாமைத்துவ அம்சமாகும். அதனை திருவள்ளுவர் திருக்குறளில் "மனைத்தக்க மாண்புடையவளாகி தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" இக்குறளில் இல்லறத்தாள் என்பவள் சமையற்கலையில் மிகுந்த தேர்ச்சி பெற்றவளாகவும் இல்லறத்தின் மாண்பினைப் பேணுபவளாகவும் அக்குடும்பத்தின் நற்பண்புகளையும், நற்பயன்களையும் விளைவிக்கும் உத்தமியாகவும் செயற்பட்டு தனது வாழ்க்கைத்துணையினதும் வருமானத்திற்கு ஏற்ப சிறப்பாக வாழக்கூடிய மனப்பக்கு வத்தையும், மனத்திருப்தியையும் கொண்டவளாக இருப்பாளாயின் அவ் இல்லறம் நல்லறம் தழைத்தோங்கும் விளைநிலமாக இருப்பது என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

சாதாரண விவசாயிகள் தொடக்கம் மீன்பிடி, கைத்தொழில், சேவைத்துறை, கலைத்துறை உட்பட்ட எத்துறையாக இருந்தாலும் அதில் திறனும் நேர்த்தியும் மிக்க நயத்தக்க நாகரீகமுடைய ஒரு வளர்ச்சி மிகு சமுதாயமாக நம் தமிழர் சமுதாயம் திகழ்ந்தது. கம்பராமாயணத்தை பாடிய கம்பன் விவசாயத் தொழிலினை எவ்வாறு நுணுக்கமாக ஒரு வெற்றியடைந்த விவசாயியாக மாறுவதற்குத் தேவையான அத்தனை விடயங்களையும் உள்ளடக்கி "ஏர் எழுபது" எனும் நூலினை இயற்றி கொடுத்துள்ளார். ஏர் எழுபதில் உழுதல், பண்படுத்தல், வரம்பிடுதல், விதைத்தல், நீர்ப்பாய்ச்சல். அறுவடை செய்தல், களஞ்சியப் படுத்தல், உழவு சாதனங்களை பராமரித்தல் எனும் பலவகை விடயங்களை உள்ளடக்கி 70 பாடல்களை இயற்றிக் கொடுத்துள்ளார்.

கந்தபுராணத்தில் பிரமனை சிறைப்பிடித்த முருகனிடம் சிவபெருமானும் வந்து "ஐயா விடுதி பிரமனை" என மன்றாடுகின்றார். இங்கு கந்தபுராணம் எமக்கு சொல்கின்ற உட்கிடையான பொருள் யாதெனில் யாருடனும் இனிமையான சொற்களைக் கொண்டு உரையாடுவது மட்டுமன்றி 'கீழோராயினும் தாழவுரை" என்பது போல் பண்புடனும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவுடனும் எந்தத்தகுதி உடையவராக இருந்தாலும், எந்த தகுதி அற்றவர்களாக இருந்தாலும் அவர்கள் மனம் புண்படாத வகையில் உரையாடல்களை நிகழ்த்த வேண்டும் என கந்தபுராணம் தெளிவாகக் கூறுகின்றது. முழுமுதற் கடவுளான சிவபெருமானே தனது மகனான முருகனிடம் வந்து கொடுக்க வேண்டிய மரியாதைகளை கொடுத்து "ஐயா விடுதி" என உரையாடலை தொடங்குகின்றான். அதனைத் திருவள்ளுவர் தனது 100வது குறளில் 'இனிய உளவாக இன்னாத கூறல் கனி இருக்க காய் கவர்ந்தாற்று" என குறள் கூறியுள்ளார். கனி நிறைந்த மரத்தில் கனியை விட்டு எவனொருவன் காயை நுகர முயற்சிக்கின்றானோ அது போல எம் மொழியில் கொட்டிக்கிடக்கின்ற எத்தனையோ இனிமையான சொற்களை விடுத்து கடுமையான சொற்களைப் பயன்படுத்துவதை உவமை செய்கிறார்.

ஒரு சிக்கலான நேரத்தில் ஒரு தலைவனிற்கு தளபதிகளோ. அதிகாரிகளோ விடயத்தைக் கொண்டு செல்கின்ற போது தலைவன் எந்தவித மனச்சலனமும் ஏற்படாத வகையில் (கோபமோ, கவலையோ, உணர்சிவசப்படுத்தலோ, ஏக்கமோ, அதிர்ச்சியோ) தகவலை பரிமாற்றம் செய்தல் வேண்டும் அப்பொழுதான் அத் தலைவனிடம் இருந்து வரும் முடிவும் சரியானதாகவும் நீதிசார்ந்ததாகவும் அமையும். அதனை பெரியபுராணத்தில் சேக்கிழார் அழகாக பாடல் மூலம் விபரிக்கின்றார். சோழ மன்னனுடைய மகன் வீதிவிடங்கன் தன் அரசிலங்குமாரனுக்குரிய பண்போடு அரசகுமாரர்கள் உழாவுகின்ற தெருவில் தேரில் தேர்ச்சேனைகள் சூழ செல்கின்ற போது பசுக்கன்று ஒன்று தேர்ச்சில்லில் சிக்கி இறந்ததனை தெரிவித்து தாய்ப்பசு அபயமணி அடித்ததை முதிர்ச்சியும் அனுபவமும் ஆண்டால் கொண்ட அமைச்சர் அவர்கள் சோழமன்னனிடம் மிகநுட்பமான முறையில் துக்ககரமான அதிர்ச்சி செய்யக்கூடிய செய்தியை பரிமாற்றுகின்றான். அவ்வாறான செய்தியை எவ்வாறு சொல்ல வேண்டும் என சேக்கிழார் புராணம் தெளிவுபட எடுத்தியம்புகின்றது. "வளவ நின் புதல்வன் ஆங்கு ஓர் மணி நெடுந்தேர் மேல் ஏறி" எனும் பாடல் வரி மூலம் விளங்கப்படுத்தப்படு கின்றது. அது ஓர் முகாமைத்துவ நுட்டபமாகும்.

கம்பராமாயணத்தில் சீதையை பார்த்துவருமாறு இராமனால் அனுமன் இலங்கைத் திருநாட்டிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றான். அனுமன் தன் தீராமுயற்சியினால் இலங்கை முழுவதம் தேடி இறுதியில் அசோக வனத்தில் அரக்கர்கள் மத்தியில் சீதை இருப்பதைக் கண்டார். இருப்பது சீதைதான் என்பதை நன்று ஆராய்ந்து அறிந்து உறுதிப்படுத்திய பின் அந்த ஆனந்தமான சந்தோசத்தினை பகிர்வதற்காக இராமனிடம் மீண்ட அனுமான் தன் சொல்லின் வன்மையால் மிக அழகாக ஆவலுடன் எதிர்பார்த்த இராமனிற்கு நற்செய்தியாக சீதையைக் கண்டதை கூறுகின்றார். கூறுகின்ற சொல் வன்மை மிக அற்புதமானது 'கண்டன் கற்பினிற்கு அணியினை கண்களால்" எனும் கம்பராமாயாணப் பாடல் மூலம் மிக நுட்பமாக தொடர்பாடல் திறனை கம்பர் வெளிப்படுத்துகின்றார். கண்டணன் என்றாலே கண்ணால் என்பது பொருத்தம். கற்பினிற்கு அணியினை அவள் கண்களில் கண்டேன் என்பது இரண்டாவது சொல்லில் வரும் அவ்வாறு முகாமைத்துவநுட்பங்களை மிகத் தெளிவாக ஒவ்வொரு இலக்கியங்களும் சொல்லிச் செல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேக்ஸ்பியரின் ஓதல்லோ நாடகம் முதல் சீனக் கிரேக்கத் தத்துவங்களை தங்கள் இலக்கியங்கள் ஊடாக சொல்லிச் செல்கின்றன. விதுர நீதி, மனுநீதி, அர்த்தசாஸ்திரம். சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்கள் இன்னோரன்ன முகாமைத்துவ நுட்பங்களைக் கொட்டிவிட்டு செல்கின்றன. ஔவையார் பாடல்கள் மனித மாண்பையும், மனிதமரபையும் பண்போடும், பணிவோடும் பேண வேண்டும் என அறிவுலகம் ஏற்றுக் கொள்ளும் வகையில் சொல்கின்றன. அவ்வாறு பலம்பெரும் இலக்கியங்களில் முகாமைத்துவத்தின் எத்தனையோ நுட்பங்கள் பரவிக்கிடக்கின்றன.

சிக்கலான சந்தர்ப்பங்களின் போது தலைவன் தன்னிலையையும் விட்டுக்கொடாமல் தன் பால் அன்பும், விசுவாசமும் வைத்த தொண்டன் மேல் எந்தவித பாதிப்புத் ஏற்படாத வகையில் தன் தலைமைப் பண்பை வெளிப்படுத்த வேண்டும். அத்துடன் பொருற்தன்மையும் தூரநோக்கும் மக்களுக்காக தன்னை இழந்தாலும் சமுதாய நன்மை பெற வேண்டும் என்ற நன்நோக்கும் இருத்தல் வேண்டும். கம்பராமாயணத்தில் காந்தாரி தன் மக்களுக்காகவும் தன் அரச குடும்ப கௌரவத்திற்காகவும் கண் தெரியாத திருதராஸ்டினை திருமணம் செய்வது மட்டுமன்றி கணவன் காணாத உலகத்தை தான் காணக்கூடாது என்று தன் கண்ணை இறுகக் கட்டி உலகம் காணாது வாழ்கின்றாள்.

தலைவன் எப்போதும் காலம் தாழ்த்தாதவனாகவும், முயற்சி உடையவனாகவும், அதிக தூக்கம் இல்லாதவனாகவும், அதிக ஞாபகசக்தி உடையவனாகவும் காணப்படுதல் வேண்டும். அதனை திருவள்ளுவன் தன் திருக்குறளில் 605வது குறளாக "நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும் கெடுநீரார் காமக் கலன்" மிகவும் எளிமையாக, அருமையாக கூறிச் செல்கிறார்.

முகாமைத்துவத்தில் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், கட்டுப்படுத்தல், மீள்பரிசிலனை செய்தல், நிர்வகித்தல், மனிதவள முகாமைத்துவம், உற்பத்தி முகாமைத்துவம், நேர முகாமைத்துவம், நிகழ்வுகள் முகாமைத்துவம், போன்ற இன்னோரன்ன முகாமைத்து வங்களும் கருத்தியம்பல்களும் இருந்தாலும் நமது இலக்கியங்களை ஆழமாக ஊன்றி நுண்மான்நுளைபுலம் மூலம் ஆய்ந்தறிந்து தெளிவதன் மூலம் இலக்கியங்கள் சொட்டும் முகாமைத்துவத்தை உள்வாங்கி சிறந்த நயத்தக்க நாகரீக மேலான்மையை செயற்படுத்த லாம் என்பது எனது திண்ணமான எண்ணமாகும்.

கு. சிவஞானசுந்தரம்
பிரதான முகாமையாளர்
இலங்கை வங்கி அதிமேற்தரக் கிளை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்காலிருந்து மக்கள் இடப்பெயர்வு

இப்பெருந்துயர் உலகில் எங்கும் நடக்கக்கூடாது.நான் ஒரு BoCயின் A.G.M(N.P)யாக இருந்தமையாலும் தமிழன் என்ற வகையிலும் விசேடமாக வல்வை மண்ணின் ஒரு குடிமகன் என்ற வகையிலும் பல காரியங்களை துணிந்து செயற்படுத்த கடமைப்பட்டிருந்தேன்.

முள்ளிவாய்க்காலிருந்து அனாதைகளாக வந்த ஏராளமான தமிழ் உறவுகளை மந்தைகள் போல எண்ணி சிங்களச் சிப்பாய்கள் வழி நடத்தினார்கள். லொறிகளில் ஏற்றி வவுனியாவுக்கு அனுப்பினார்கள். இரவு வேளையில் பல நூற்றுக்கணக்கான லொறிகளிலும் ரக்டர்களிலும் ஏதிலிகளாக கொணர்ந்து வந்து குவிக்கப்பட்ட எம்மவர்களுக்கு அடிப்படை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படவில்லை. பெண்கள், குமருகள், வயோதிபர்கள் குழந்தைகள் இயற்கை உபாதிகளினால் அவதியுற்றனர்.ஆனால் ஓரிரு நாட்களில் 04 (நான்கு) பெரிய முகாம்களை வனப்பகுதியில் இராணுவத்தினர் உருவாக்கினர். அவையாவன:

1. கதிர்காமர் முகாம்
2. அருணாசலம் முகாம்
3. இராமநாதன் முகாம்
4. ஆனந்தகுமாரசாமி முகாம்

வெட்டவெளியில் அடிப்படை வசதிகள் அற்ற முறையில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இதற்கு எமது (BoC) ஊழியர்களும் விதி விலக்கல்ல. இவர்களை சென்று பார்க்க வேண்டிய தலையாய கடப்பாடு எனக்கிருந்தது. எனவே ஒவ்வொரு முகாம்களாக சென்று தரவுகளை சேகரித்து வந்து தினமும் அவர்களுக்கு (குடும்பத்தினர்க்கு) தேவையான தண்ணீர், சாப்பாடு என்பவற்றை நான் நேரடியாகச் சென்று விநியோகித்ததுடன் அவர்களுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறிவருவதும் எனது வழமையான தொழிற்பாடாக இருந்து வந்தது.

இதற்கெல்லாம் உற்ற துணையாக இருந்தவர் எமது (Driver) சாரதியான சிவராஜா என்பதையும் இங்கு சிறப்பாக பதிவிட விரும்புகின்றேன்.

அவர்களுக்கு தேவையான உடுதுணிகள், சவர்க்காரம் போன்ற நாளாந்த தேவைகளுக்குரிய பொருட்களையும் நல்கி வந்தேன். இது பெருமைக்குரிய விடயமல்ல. ஆனால் எனது கடமைகளாகவே நான் கருதினேன். இவை யாவும் சிங்களச் சிப்பாய்களின் கெடுபிடிகளுக்கிடையிலேயே நடந்து வந்தன.

நான் கண்ட காட்சிகள் சில

கொற்றாவத்தையை அதாவது “மலர்பதி” பொலிகண்டி வல்வெட்டித்துறை எனும் முகவரியைக் கொண்ட திரு.T.கெங்காபதி எமது security officer தனது பதின்ம வயது பிள்ளைகளுடன் தனது குடும்பத்துடன் ஒரு சிறிய கூடாரத்தினுள் வேறும் சிலருடன் தங்க வைத்திருப்பதைக் கண்டேன். அவர் ஒரு can (5 லீட்டர்) உடன் மிக நீண்ட (QUEUE) வரிசையில் தனது குடும்பத்தினர்களுக்கு வழங்கப்படும் (QUOTA) அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுமதிக்கப்பட்ட அளவு தண்ணீருக்காக (விடியற்காலை) 4.00 மணியிலிருந்து நின்று கொண்டிருந்தார். இந்த தண்ணீர்தான் அவர்கள் காலைக்கடன்களை முடிப்பதற்கும் உணவு சமைப்பதற்கும் பயன்படுத்தப்பட வேண்டும் என அறிந்தேன்.

அவர் வரிசையிலிருந்து விலகினால் மீண்டும் கடைசியில் போய் சேர வேண்டும். இதற்கு இன்னும் 2 மணி நேரம் ஆகும். எனவே நான் 5.0 Leter தண்ணீர் போத்தல்கள் பலதை எனது செலவில் கொள்வனவு செய்து அவருக்கு மட்டுமன்றி ஏனைய குடும்பத்தினருக்கும் supply செய்து வந்தேன்.

ஓர் குமர்ப்பெண்ணின் அவலம்

நான் இறக்கும் வரை மறக்க முடியாத ஒரு காட்சி திரு. கெங்காபதி அவருக்காகவும் ஏனைய BoC உறவுகளுக்காகவும் செய்ய வேண்டியவற்றை செய்து விட்டு திரும்பும் வழியில் ஒரு குமர்ப்பெண் தனது காலைக்கடனை முடிப்பதற்காக முகாமின் ஓரத்தினுள்ள தேக்கமரத் தோப்பில் இயற்கை உபாதைக் கழிவை கழித்து விட்டு தண்ணீர் இல்லாமையால் தேக்க மரத்து சருகுகள் எடுத்து (இப்பொழுது பாவிக்கும் Bathroom Serviet போல) பாவித்து தனது உடலை ஓரளவுக்கு சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

எனது பிள்ளை இதைச் செய்வது போல நான் உணர்ந்தேன். இது எமது ஈழத்தமிழரின் தலைவிதி என்பதையும் நினைத்துக் கொண்டு எனது பணிகளை தொடர்ந்தேன். (இப்பொழுது அந்தக் குமரி வெளிநாட்டில் Best Bathroom (Washroom)ல் தனது காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கலாம்.)

BoCயில் வைப்புச் செய்த எமது வாடிக்கையாளர்களின் அவலமும் (எனது) முகாமைத்துவத்திற்கெதிரான தற்துணிவான முடிவுகளும்

நானும் இக் காலப்பகுதியில் வன்னி officeலேயே முகாமிட்டிருந்தேன். காலையில் 6:00, 7:00 மணிக்கே எமது வாடிக்கையாளர்கள் மாவட்ட காரியாலத்திற்கு வந்து விடுவார்கள். ஏறக்குறைய பிச்சைக்காரர் போலவே காட்சியளிப்பார்கள். அவர்களிடம் கைகளில் பணமில்லை. ஆனால் BoCயில் வைப்பு செய்த கொஞ்ச நஞ்சப் பணங்களையாவது எடுப்பதற்காக அங்கு வந்து குவிந்திருப்பார்கள். நான் காரியாலத்திற்கு வரும் போது எல்லோரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்துவார்கள். அந்தக் காட்சியை கற்பனை செய்யில் நான் கிருஷ்ண பரமாத்மாகவும் அவர்கள் என்னிடம் வரம் வாங்க வந்த பக்தர்களாகவும் சித்தரிக்கலாம். இது எனக்கு ஒரு தலைகுனிவையும் ஒரு விதமான சங்கட நிலைமையையும் உருவாக்கியது.

நான் என்ன கடவுளா? அவர்கள் என்ன யாசகர்களா? எமது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள் அல்லவா? எனவே அவர்களுக்காக எனது கடமையை செய்ய துணிந்து விட்டேன். அவர்களில் பலரிடம் passbookக்கோ தே.அ.அ. (NIC)யோ இல்லை. அதே நிலைமைதான் எம்மிடமும் கணக்கு ஆரம்பித்த படிவம் (mandate), மாதிரி கையொப்ப அட்டை (signature card) என்பன எதுவும் இருக்கவில்லை இந்நிலையில் எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு உதவுவது? என்னால் முற்கூட்டியே எடுக்கப்பட்ட சில சமயோசித நடவடிக்கைகள் இப்போது கை கொடுத்தன.

நான் ஒரு தடவை 2009, Jan / Feb பகுதிகளில் மன்னார் கிளைக்கு எனது D.C.S.O-திரு அபே குணவர்த்தனவுடன் Branch visit போய் வரும்போது உயிலங்குலத்தில் அமைந்திருந்த ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு போகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்பொழுது மன்னார் பகுதிக்கு பொறுப்பாக இருந்த Brigadiar (பெயர் ஞாபகமில்லை) அவர் தனது அறைக்கு எம்மை அழைத்துச் சென்று அறையின் முழு அளவிலான ஒரு வரைபடத்தை காட்டி தாம் இன்னும் சில தினங்களில் கிளிநொச்சி ஊடாக முல்லைத்தீவை அடைந்து விடுவோம். இதை தலைவரிடமும் தெரிவிக்கலாம் என என்னைப் பார்த்து கூறினார். அந்த வரைபு ஏறக்குறைய ஒரு தளபதி தனது குழுவினருக்கு விளங்கப்படுத்தும் படமான பாணியிலேயே அமைந்திருந்தது. அவரது உள்நோக்கம் என்னைப் பரீட்சிப்பதாகவோ அன்றி தலைவரை பயமுறுத்துவதாகவோ இருந்திருக்கலாம். ஆனால் நான் எதுவும் செய்யாமல் இருந்து விட்டேன். (அது தவறோ சரியோ என எனக்கு இன்று வரை புரியவில்லை)

இக்காட்சியை கண்டு எமது இடங்களை இராணுவம் எனும் இருள் சூழ்ந்து வருவது போல நான் உணர்ந்திருந்தேன். எனவே நான் சில முற்கூட்டிய நடவடிக்கைளை எடுத்திருந்தேன்.

1. நகை ஈடுபிடிப்பதை நிற்பாட்டினேன். (தமது நகையை பாதுகாக்கும் நோக்கத்திற்காக ஈடுபிடிக்க வருபவர்களினது மட்டும்)
2. கிழமைக்கு ஒரு தடவை A/C No உம் Balance களும் உள்ள S/A and C/A Balance களை எடுத்து எனக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனும் எனது அறிவுறுத்தல் (சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கு மீதிகளை எடுத்து எனக்கு அனுப்பி வைக்குமாறு எனும் கிளைகளுக்கான எனது அறிவுறுத்தல்
3. கிளைகளை அதாவது மல்லாவி போன்றவற்றை கிளிநொச்சி நோக்கி நகர்த்தும் நடவடிக்கை.
4. பின்னர் கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பரந்தன் பாதையூடாக நகர்த்தல்.
5. சகல கிளைகளும் சகல செயற்பாடுகளும் நிறுத்தியதும் இறுதியாக எடுத்த Backups (கணக்கு வைப்புக்களின் விபரங்களை) அப்போ உடையார்க்கட்டில் இயங்கிய மல்லாவிக் கிளையிடம் (முகாமையாளராக இருந்தவர் திரு. K. மனோகரன்) உடையார்கட்டில் இயங்கிய கிளையிடம் Soft Copy மூலமாக சேர்ப்பித்தல். ஏறக்குறைய இடம்பெயர்ந்திருந்த சகல கிளைகளிலும் மண்ணெண்ணெய் கூட இல்லாத நிலையால் generatorகளும் (மின் பிறப்பாக்கிகள்) computerகளும் (கணனிகளும்) இயங்கா நிலை அடைந்திருந்தன.
6. பெரிய பிரமாண்டமான கிளைகள் இப்போது வீடளவாகி அலுமாரி அளவாகி இறுதியில் உரப்பைகளாக் உருமாறியிருந்தன.
7. இறுதியில் யாவற்றையும் முல்லைத்தீவு கிளைக்கு அதிலும் முக்கியமாக ஈடுபிடிக்கப்பட்ட நகைகள் பரீட்சை மீதிகளையும் (Trail Balance) களையும் மாற்றினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. **முல்லைத்தீவில் முகாமையாளர் திரு.மு.ஆனந்தராசாவால்** இவற்றை உள்வாங்க முடியாமலிருந்த போதும் எனது அன்பு வேண்டுகோளிற்கிணங்க நகைகளையும் வேறு சில ஆவணங்களையும் பொறுப்பேற்றார்.

ஒரு முக்கிய சம்பவம்

உடையார் கட்டில் மல்லாவி (மாங்குளக் கிளை)இயங்கி வந்த நேரத்தில் அதாவது இறுதி மூச்சு நேரத்தில் எனக்கு கிடைக்க வேண்டிய update கிடைக்காமையால் ஒரு வழியாக அவருடன் தொடர்பு கொண்ட போது Sir எல்லாம் Ready Computer இருக்கு ஆனால் Petrol மண்ணெண்ணெய் இல்லை Generator Start பண்ண இயலாது என்ன செய்வது? எனக் கேட்டார்.

எனக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆனால் அவரது ஒரு மகன்(பங்கரில் ஒளிந்திருந்தவர்)அப்பா அதன் Hard Disk ஐ எடுத்து AGMக்கு அனுப்புங்கோ, (அது தான் முதன்முதலில் Hard Disk எனும் சொல்லை நான் அறிந்த நாளாகும்). அதன் படி திரு.மனோகரன் அதனை முல்லைத்தீவு A.G.A ஊடாக Or அவரது Accountant பெயர் தெரியாது (Mr. Jeyakumar என எண்ணுகின்றேன்.) ஊடாகவே ICRC கப்பல் மூலம் எனக்கு அனுப்பி வைத்தார். இதுவே எனது Updateக்கு கை கொடுத்துதவியது. எனவே நான் ஒவ்வொரு கிளைக்கும் ஒவ்வொரு file திறந்து தரவுகளை சேமித்து வைத்திருந்தேன்.

எமது உறவுகள் உயிரை துறந்து எம் கொள்கைக்காக தியாகம் செய்யும் போது (எனது மூத்தமகளும் அப்போது முள்ளிவாய்க்காலில் மற்றவர்களைப் போலவே வாழ்ந்து வந்தார். நான் ஏன் ஒரு சிறிய காரியத்தை கூட செய்ய முடியாது?

எனவே ஒவ்வொரு முகாமாக சென்று அங்கிருந்த இராணுவ அதிகாரிகளை சந்தித்து. எனது Staffகளை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்தேன். முடிவெடுக்க முடியாத அவர்கள் அது தமக்கு இயலாது எனவும் மேலிடத்து உத்தரவு வேணும் என்றும் கூறினார்கள். இந்தப் போடு போட்டதே எனது காரிய சித்திக்காகத்தான். நான் அவர்களை ஒரு ஒழுங்கு முறையில் காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரை வேலை செய்ய அனுமதிக்கும் படியும் அவர்களை மீண்டும் கொணர்ந்து உங்களிடம் ஒப்படைப்பது எனது பொறுப்பென்றும் கூறி அவர்களை சம்மதிக்க வைத்து, பின்வரும் ஒழுங்குகளை மேற்கொண்டேன்.

அதாவது ஒவ்வொரு கிளைக்கு (உதாரணமாக-கிளிநொச்சி மாங்குளம் முல்லைத்தீவு கிளைகள்) ஒன்று விட்டு ஒரு நாள் தினம் குறித்து நீங்கள் இந்த குறிப்பிட்ட நாட்களில் மட்டும் இராணுவ அனுமதியுடன் வாருங்கள் என்றும் வீணே வந்து அலைய வேண்டாம் எனவும் கூறி உரிய நாட்களையும் கூறி அறிவித்தல் பலகைகளிலும் போட்டு எமது வாடிக்கையாளர்களை அனுப்பினேன்.

அதன்படி குறித்த நாட்களில் காலை 7:00 மணிக்கே எனது Van Driver சிவராஜாவுடன் சென்று குறித்த கிளை முகாமையாளரையும் சக உறுப்பினர்களையும் அழைத்து வந்து குறித்த கிளைகளின் வாடிக்கையாளர்களுக்கு பணம் வழங்கும் (மீளப்பெறல்) சேவையை ஆரம்பித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் ஓரளவு திருப்தி ஏற்பட்டது. இருந்தும் இங்கு பல பிரச்சினைகள் காணப்பட்டன

1. சில வாடிக்கையாளரிடம் தம்மை இனங்காட்ட Pass Book, N.I.C முதலியன இருக்கவில்லை.
2. எம்மிடம் mandate, Signature card முதலியன இருக்கவில்லை.
3. அவர்கள் கணக்கிலுள்ள நிலுவையை அவர்களால் நிச்சயமாக கூறமுடியாத ஒரு பரிதாப நிலை
4. எப்போது இறுதியாக கணக்கை நடைமுறைப்படுத்தினார்கள் என்றும் சொல்ல முடியாத இயலாமை.

எனினும் எப்படியாவது அவர்களுக்கு உதவ வேண்டும் என உறுதிபூண்டு அந்தந்தக் கிளை முகாமையாளர்களின் உதவியை நாடி பின்வரும் உறுதிமொழிகளை பெற்றுக் கொண்டேன்.

1. அவர்களை (வாடிக்கையாளர்களை) அடையாளம் காணமுடியும்.
2. அவர்களின் நம்பிக்கை அல்லது விசுவாசத்தன்மை தெரியும்.
3. எதுவித பிற ஆவணங்களும் (உ+ம்) Signature card, Nic என்பன இல்லாமல்) அவர்களுக்கு குறித்த தொகையை செலுத்த தாம் சிபார்சு செய்யத் தயார் போன்றன.

இதனடிப்படையில் அவர்களுக்கு ஒரு வாரத்திற்கு ஒரு முறை ரூபா 10 000 வரை கொடுப்பனவு வழங்கப்பட்டது. இதற்கு உதவியது. என்னிடமிருந்த Backups தான். இப்படி செயற்படுவது தாடி என நாம் அழைக்கும் எனது (D.G.M) ID.Weerasene போன்ற மேலிடத்தில் பலருக்கு பொறுக்க முடியவில்லை. எனக்கு T.P Callகளுக்கு மேல் call களாக இதைச் செய்வேண்டாம் என அறிவுறுத்தல் தந்தார். ஆனால் நான் அவற்றை உதாசினம் செய்து எனது பணியை தொடர்ந்தேன். இறுதியில் அவர் எனக்கு மறைமுகமான (Black mail) ஒரு வெருட்டலைத் தந்தார். அதாவது இவை அப்பாவி மக்களின் வைப்புக்கள் அல்ல. இவை புலிகள் இவர்களை வெருட்டி தமது பணங்களை வைப்புச் செய்தவை. எனவே இதை வழங்கினால் AGM என்ற முறையில் உமக்கு பெரும் பிரச்சினை வரும் (நினைவுக்கு வந்த பழமொழி -ஆடுகள் நனைகின்றன என ஓநாய் கத்தியது) எனக் கூறினார்.

நான் அதற்கும் மறுப்பு தெரிவித்து எனது பணியை தொடர்ந்தேன். இறுதியாக அவர் "இனிமேல் பணம் மீளப் பெறுவதனால் Joseph இராணுவ முகாமுக்கு சென்று அவர்களிடம் ஒப்பம் வாங்கி வந்த பின் கொடுப்பனவுகளை செய்ய சொன்னார்"

எனக்கு சரியான கோபம் வந்தது. அவரிடம் நான் திருப்பி கேட்டேன். "வைப்புக்கள் செய்யும் போது இராணுவ முகாமின் அனுமதியுடனா எமது வாடிக்கையாளர்கள் நடந்து கொண்டனர்? இது தாளியிலிருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாகி விடும். எனவே நான் அப்படி செய்யமாட்டேன்" என்றும் கூறினேன்.

முகாமிலிருந்து வெளியே வருவதற்கு இலஞ்சம் கொடுக்க வேண்டும். அதுவும் குறித்த சில மணித்தியாலங்களுக்குள் மீண்டும் வந்து சேர வேண்டும் என்ற நிபந்தனை. இதற்கு மேலும் Joseph campக்கு போய் அங்கு அகப்பட்டால் அவர்களை (எமது வாடிக்கையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளர்களை) பல மணிநேரம் விசாரணைக்குட்படுத்தி அவர்களிடம் வலுக்கட்டாய மாக பல விளக்கங்களைப் பெறுவர். சிலர் மீண்டும் வரமுடியாத நிலையும் இருக்கலாம். இதை மானமுள்ள ஒரு தமிழ்மகன் எப்படி அனுமதிப்பது எனவே நான் எனது தற்துணிவுடன் எமது DGM MR. Weerasena வின் பணிப்புரையை ஏற்க மறுத்து விட்டேன்.

இதனால் மிகவும் ஆத்திரமுற்ற அவர் எப்படியும் என்னை பழிவாங்கும் சிந்தனையுடனேயே செயற்பட்டு வந்தார். இப்படி பல நாட்கள் கழிந்தன. என்னால் முடிந்த அளவுக்கு BoC வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றி வரும் போது ஒரு நாள் ஒரு வயோதிப அம்மா எனது அருகில் வந்து மிகவும் இரகசியமாக "ஐயா எனது மகன் இயக்கத்துடன் தொடர்புடையவன். எனது கணவரும் இறந்து விட்டார். எனது பிள்ளையாவது தப்பிப் பிழைத்து உலகத்தில் எங்கோ ஒரு மூலையில் வாழட்டும். அதற்கு உங்களின் உதவி தேவை. மேலும் ஆமிக்காரர்கள் இலட்சணக்கணக்கில் காசு வேண்டிக் கொண்டு எனது பிள்ளை போன்றவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புகின்றார்களாம் எனக் கூறினார். எனது கணவர் ஒரு மில் முதலாளி பல இலட்சம் ரூபாய்களை உங்கள் வங்கியில் என்னுடன் சேர்ந்து கணக்கில் போட்டிருக்கின்றார். தனது கணக்கு மாங்குளம் கிளையில் உள்ளது. (மல்லாவி) இப்போ இல்லாத அந்தப் பணம் நான் இறந்த பின் என்னத்துக்கு உதவப் போகின்றது என மிக உருக்கமாக கூறினார்.

ஆனால் எமது வாடிக்கையாளர்களுக்கு ரூபா 10000/= மீளக்கொடுத்தல் செய்ய முடியாத கையறு நிலையில் இருந்த எனக்கு என்ன செய்ய முடியும்? இருந்தும் அத் தாயாரது இரங்கலான வேண்டுகோளை என்னால் தட்டிக் கழிக்கவும் முடியவில்லை. இரவிரவாக சிந்தனையில் ஆழ்ந்தேன். முயற்சி செய்தால் எது முடியாது? 'Failiers are the pillers of success' எனும் தம்பிப்பிள்ளை அதிபர் கற்பித்த ஆங்கில பழமொழி என் நினைவுக்கு வந்தது.

"மயிலே மயிலே இறகு போடு" என்றால் அது போடாது. எனவே எனது தலைமைய கத்துடன் பகைத்துக் கொண்டு இக் காரியத்தை சாதிக்க முடியாது எனவும் உணர்ந்து கொண்டேன். "மாட்டுக்கு மாடு சொன்னால் கேட்காது ஆனால் மணி கட்டின மாடு சொன்னால் கேட்கும்" என்பார்கள். அது போலவே நானும் யோசிக்க தொடங்கினேன்.

அப்போது எனது ஊர் பிறந்தவரும் மத்திய வங்கியில் (After Retirement) கடமை புரிந்தவருமான திரு. ஸ்ரீபத்மநாதன் எனது நினைவுக்கு வந்தார். அத்துடன் அவர் அறிமுகப்படுத்திய விவசாய இலகு கடன் பகுதிக்கு அத்தியட்சகராக (Director) ஆக இருந்த திரு. கருணாரட்ண அவர்களின் மனிதநேயப்பண்பு எனது ஞாபகத்திற்கு வந்தது. அவர் என்னுடன் எனது (AGM.NP) விடுதியில் தங்குவதுமுண்டு. அவரும் என்னைப் போல ஒரு ஏழை விவசாயக் குடும்பத்தில் பொலன்நறுவையில் பிறந்த ஒரு ஜீவகாருண்யம் உள்ள கண்ணியாமானவர் என நான் எண்ணுகின்றேன். பிற்காலத்தில் அவர் கொழும்பில் வசித்து வந்ததாகவும் அறிந்தேன். அவர் யாழ் மாவட்ட விஜயத்தை முடித்துக் கொண்டு ஒரு இரவு என்;னுடன் வவுனியா விடுதியில் தங்கியிருந்த பொழுது அவருக்கு எனது மனக்குழப்பத்தை கூறினேன். அது மட்டுமல்ல எனக்கு ஏழை மக்களுக்கு அதுவும் எமது வாடிக்கையாளருக்கு உதவ ஏதாவது யோசனை கூறும்படி கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது அவர் சொன்னார் "All the financial institutions are controlled by the central bank Your BoC is not exceptional to this. so you can approach Central bank to protect the fundamental rights of the customers".

Besides, He said "I am familier with Ms Rani Jeyamaha Who is the co-ordinator between BoC and the Government of Srilanka in policy making " If you can give me a letter to her I would hand over same to her on the following day.

எனவே நான் மிகவும் மகிழ்ந்து உரிய (அதாவது வாடிக்கையாளர்கள் அனுபவிக்கும் கஸ்டங்களை விபரித்து (மிகச்சுருக்கமாக) ஒரு கடிதம் Type பண்ணி அதை எமது Chairman, General Manager மற்றும் DGM போன்றோருக்கு விலாசமிட்டு (According to the protocol) அவற்றை அவர்களுக்கு பதிவுத்தபாலில் அனுப்பி விட்டு அதன் பிரதியை (Copy) Ms Rani Jeyamahaக்கு விலாசமிட்டு வைத்திருந்தேன்.

MS. Rani Jeyamaha வுக்குரிய Hard copy மட்டும் திரு. கருணாரட்ண கையில் கொடுத்து அனுப்பி அது அவருக்கு அடுத்த நாள் சேரும்படி செய்துவிட்டேன். கடிதத்தை தந்தால் நான் நாளைக்கே Ms. Raj Jeya னிடம் நேரில் சமர்ப்பித்து இங்குள்ள நிலைமையையும் கூறுவேன் என்றும் கூறினார். அதில் வாடிக்கையாளருக்கு உதவ முடியாத அதுவும் மிகவும் தேவையான நேரத்தில் இருப்பதாகவும் இதற்கு வழிவகுத்து தரும்படியும் கேட்டிருந்தேன். அக்கடிதம் அடுத்த நாளே கிடைத்து விட்டது. எனவே எனது தலைமையகத்திற்கு மிகவும் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்து குறித்த D.G.Mயும் என்னையும் நேரில் வந்து சந்திக்குமாறு அறிவுறுத்தல் வழங்கி அக்கடிதத்தின் பிரதியை எனக்கும் Fax மூலம் அனுப்பியிருந்தார்.

அதன்பின் எனக்கு பல callகள் Chairman தொடக்கம் DGM வரை இருந்து வந்தன. என்னை மிகவும் கடிந்து கொண்டார்கள். இது நான் எதிர்பார்த்த ஒன்றே. இது ஏற்கனவே நான் கூறிய விடயங்கள் என நம்புகின்றேன்). இதன் அடிப்படையில் நான் மறுநாளே கொழும்புக்கு சென்று எனது D.G.M-MR.I.D Weeraseneவின் அறைக்குப் போய் Good morning சொல்லியும் என்னைக் காணாதது போல பாசாங்கு செய்தவரின் மேசைக்குப் போய் னன். அப்போதும் அவர் எனக்கு ஒரு மதிப்பும் தரவில்லை. அவருக்கு முன்னால் கதிரையிலிருந்து மீண்டும் Good morning சொன்னேன்.

எனவே நான் "Sir I am going to central bank to meet ms.Rani jeyamaha"என்று சொல்லிப் புறப்பட்டவுடன் அவரும் என்னைப் பின் தொடர்ந்து வந்தார். போகும் வழியில் "Siva,Don't tell anything Bad about me"என்றார். நானும் அவரது பாணியிலேயே "Sir why should I say bad about you infact you were trying to safe guard me,so I will not say anything bad about you"என்றேன். அங்கு போனதும் நடந்த சம்பவம் தொடரும்....

அக்கடிதம் இராணி ஜெயமஹாவுக்கு கிடைத்ததும் அவர் எமது Head office க்கு Chairman, G.M போன்றோருக்கு மிகவும் அனல் பறந்த தொனியில் பேசியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு தேசத்தின் வங்கியானது வாடிக்கையாளரது பணத்தை மீளக்கொடுக்க மறுப்பது எந்த சட்டப்படி நியாயம்? உரிய ஆவணங்களை தொலைத்தமை வங்கியின் பொறுப்பு ஆனால் அவர்களின் கொடுப்பனவை அதுவும் அவஸ்தைப்படும் நேரத்தில் எப்படி மறுப்பீர்கள்?" என எனது உயர் அதிகாரிகள் பலரிடமும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயங்கள் எனக்கு தெரியாது. ஆனால் மறுநாள் Chairman தொடக்கம் DGM வரை எனக்கு call எடுத்து நீர் எப்படி வங்கி நடைமுறையை மீறி மத்திய வங்கிக்கு புகார் செய்யலாம் என்று பலவாறாக கடிந்தார்கள். ஆனால் நான் 'Sir I have addressed the Letters to,1st chairman Then General Manager' என்று கூறி இக்கடிதங்கள் உங்களுக்கு ஏற்கனவே பதிவுத்தபாலில் அனுப்பி விட்டதாகவும் நான் எந்த விதிமுறையையும் மீறவில்லை என்றும் கூறி அக்கடிதத்தின் பிரதியை Fax மூலம் அனுப்பி வைத்தேன்.

"நான் நினைத்தது போல அவர்களால் ஒன்றும் செய்ய முடியாத ஒரு நிலைமையை உருவாக்கினேன்". இதன் விளைவு எனக்கும் Head officeக்கும் கடிதங்கள் Fax மூலம் வந்தன. அதன் படி Ms. Rani jeyamaha வை எனது DGM Weerasenaவும் நானும் அவரை நேரில் சந்திக்க வேண்டும். அதன்படியே நான் கொழும்புக்கு அடுத்த நாளே சென்றேன். இவை ஏற்கனவே கூறியவை

நானும் D.G.M உம் Central Bankக்கு போய் Ms. Rani Jeyamaha வை அவரது அறையில் சந்தித்து உரையாடிக் கொண்டிருக்கும் போது தற்செயலாக குறித்த Central Bank Director உம் அங்கு வந்து சேர்ந்தார்.

ராணி ஜெயமஹா அவரிடம் How is Mr. Sivaratnam (A.G.M-N.P-BOC) Do You Know him? என்றார்? அதற்கு அந்த Director 'Yes I Know him, He is gem of a man, If not Sivaratnam the N.P. BOC Would have gone for Sick' என பலவாறு புகழ்ந்து கூறினார். அதன்பின் எனது தேவைகளை கேட்டறிந்து கொண்டு எமது D.G.M இடம் நான் நோக்கும் குறைபாடுகள் நிலவுகின்றதா எனவும் MR. Sivaratna திற்கு இந்த இக்கட்டான நிலையில் கூடிய அதிகாரங்கள் அதாவது அவர் கேட்கும் நியாயமான அதிகாரங்களை ஏன் கொடுக்கக்கூடாது என்பன போன்ற பல விடயங்ளை கூறி அவர் கேட்கும் அதிகாரங்ளை கொடுப்பதில் ஏதாவது பிரச்சினை இருக்கா? எனவும் வினாவினார். அதற்கு எமது D.G.M மிகவும் அமைதியாக இல்லை எனக்கூறினார்.

என்னை பார்த்து இராணி ஜெயமஹா கேட்டார். What you need? அதற்கு நான் பின்வருமாறு கூறினேன். 'I take Personal Responsibility and needAuthotity to pay Rs.1.0m being Maximum Amount for a customer per week' அதாவது எனக்கு ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு வாரத்தில் அதியுயர் தொகையாக ஒரு மில்லியன் (10 இலட்சங்கள் வரை) எனது சொந்த Risk ல் கொடுப்பனவு செய்ய அதிகாரம் வேண்டுமென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு MS. Ranijeyamaha எமது D.G.Mஐ பார்த்து "Have you got any objection?" என்று கேட்டார். அதற்கு அவர் "No Objection" என்றார். அத்துடன் நான் உடனடியாக வன்னிக்கு வந்து எழுத்து மூலம் Ms. Ram Jeyamohaவுடன் நானும் DGM உம் Meet பண்ணிய விடயத்தை quote (Refer பண்ணி) அதன்படி நான் எனது அதிகாரத்தை இன்றிலிருந்து பயன்படுத்த தொடங்கி விட்டேன். எனது Head officeக்கும் Central Bankக்கும் அனுப்பிவிட்டு பெருமிதத்துடன் அதாவது ரூபா 10,000/= கொடுப்பனவு செய்ய அனுமதிக்காத D.G.M ஐ பத்து இலட்சம் வழங்க அனுமதி பெற்ற விடயத்தை மனதிலிருத்தி செயற்பட தொடங்கினேன்.

இவற்றிற்கு உதவி புரிந்த ஆண்டவனுக்கும் அந்த Directorக்கும் இராணி ஜெயமஹாவுக்கும் மனமார நன்றி தெரிவித்து மக்களுக்குரிய பணியை தொடர்ந்தேன்.

தொடரும்.....

திரு. ந. சிவரட்னம்
இலங்கை வங்கி
ஓய்வுநிலை உதவிப் பொது முகாமையாளர்
வ.பி. யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பணி நிலையில் நீங்கள் மகிழ்ச்சியுடன் திளைக்க சில வழி முறைகள்

மகிழ்ச்சியை ஆனந்தம் களிப்பு இன்பம் உவகை என்றெல்லாம் அழைப்பர். மகிழ்ச்சியை வெளிப்படுத்த துள்ளிக் குதிப்பதும் வாய்விட்டுச் சிரிப்பதும் கை குலுக்கி மகிழ்வதும் மனதின் வெளிப்பாடு. மகிழ்ச்சி என்பது மனம் வெளிப்படுத்தும் ஓர் உணர்வு. மகிழ்ச்சியும் மனமும் மிகவும் நெருங்கி பயணிக்க வல்லன.

ஒவ்வொரு மகிழ்ச்சியின் பின்னாலும் மனிதனின் உழைப்பு தியாகங்கள் வலிகள் நிறைந்து இருக்கும். அது மட்டுமல்ல மனதோடு சேர்ந்து பயணிக்கும் பல காரணிகளும் கலந்திருக்கும். பொதுவாக மனிதர்கள் தாம் மகிழ்ச்யில் வாழவேண்டும் என்றே கனவு காண்பார்கள். அவர்களைக் கேட்டால் எது எப்படியிருந்தாலும் தாம் மகிழ்வோடு வாழ்ந்தால் போதும் என்பார்கள்.

சில மனிதர்கள் என்றும் வெற்றிக் கோட்டை தொட வேண்டும் என தம் வாழ்நாளில் எதிர்பார்ப்பார்கள். வெற்றி என்பது பெரிதாய் ஒன்றுமில்லை. நீங்கள் செய்யும் செயலில் திருப்தியும் மகிழ்ச்சியும் நிறைந்து இருந்தால் அதுதான் உங்களின் வெற்றி.

அந்த வகையில் பணி நிலையில் காலம் காலமாக பயணிக்கும் பணியாளர்கள் பணியாற்றும் எந்தப் பணியாயினும் அவர்கள் மகிழ்ச்சியில் திளைக்க இருக்கும் வழி முறைகளை பிரித்தறிந்து பார்ப்போமாயின் அவற்றில் 16 வழிகள் குறிப்பிடத்தக்கவை. அவையாவன...

1. ஞாபகத்தில் கொள்ளுங்கள் உங்கள் மகிழ்ச்சிக்கு நீங்களே பொறுப்பு

இதை எதிர் கொள்வோம் எப்பொழுதும் மகிழ்ச்சியும் வேலையும் (பணியும்) கை கோர்த்துச் செல்வதில்லை. இதற்காக 2013ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் 180 மில்லியனுக்கும் அதிகமான மக்களிடமிருந்து பெறப்பட்ட தரவை அடிப்படையாகக் கொண்டு புகாரளித்த நம்மில் 13 வீதமான மக்களே தம்மை மகிழ்ச்சியுடன் ஈடுபடுவதாக கருதுகின்றனர்.

நம்மிடையே புரிந்துணர்வு சக்தி மிக மிக அவசியம். புரிந்துணர்வு சக்தியானது எல்லா வேளைக்கும் இலகுவான மாற்றத்தை ஏற்படுத்தும். உங்களுக்குள் இருக்கும் அறிவு ஆற்றல் திறமை இருந்தும் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழையாமை இருந்தால் அது மகிழ்ச்சியைத் தராது.

முயற்சியும் பயிற்சியும் இருந்தால் வளர்ச்சியும் உயரச்சியும் கிட்டும். அந்த விதைப்பின் அறுவடை மகிழ்ச்சியாகவே உங்களுக்குள் அமையும். சுய மாற்றம் உங்களுக்குள் இல்லாவிட்டால் எல்லா வேளைக்கும் இலகுவான மேன்மையான மாற்றத்தை ஏற்படுத்தாது.

புடவைக் கடை ஒன்றை அவதானியுங்கள். ஒருவருக்கு எத்தனை புடைவையையும் பணியாளர் எடுத்துக் காட்டுவார். ஆனால் வாடிக்கையாளர் சென்றதும் புடவை அனைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரால் பழைய இடத்தை ஆக்கிரமித்து விடும். தினமும் எத்தனை வாடிக்கையாளர்கள் வந்தாலும் இதே நிலைதான்

வைரத்தின் மீது படிந்துள்ள தூசி அகற்றப்படாத வரை அந்த வைரம் ஒளிராது. மனதையும் பட்டை தீட்டுவோமாக இருந்தால் பயனையும் அனுபவிப்பவர்கள் நிச்சயமாக நீங்களாகவே இருப்பீர்கள்.

2. நீங்கள் கட்டுப் படுத்த முடியாத விஷயங்களை கவனியாதீர்கள்

கடந்த ஆண்டு உலகளாவிய ரீதியில் ஆரம்பிக்பட்ட தொற்று நோய் காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு தாக்கத்தைத் தந்துள்ளது. இதனை அறிந்திருக்கலாமே ஒழிய உங்களால் கட்டுப் படுத்த முடியாத நிலையில் அவ்வாறான நிகழ்வுகளை கவனத்தில் எடுப்பதாலும்,

இயற்கை அனர்த்தம் பாரிய அழிவை ஏற்படுத்தும் போது கட்டுப்படுத்த முடியாத நிலையில் அவ்வாறான நிகழ்வுகளை கவனத்தில் எடுப்பதாலும். பொருட்களின் விலை வருமானத்தைக் காட்டிலும் அதிகமாக எகிறும் போது பணி நிலையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாலும்,

தற்பொழுது போதைப் பொருள் பாவனை அதிகரித்து காணப்படுகின்றது. அதனால் ஏற்படும் சமூகப் பிறழ்வு கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு எகிறுகின்றது.

மேற்படி கட்டுப்படுத்த முடியாத நிகழ்வுகளை கருத்திற் கொண்டு பிரதி வாதங்களை ஏற்படுத்துவதால் நேரவிரயங்களும் மன உறுத்தல்களும் நட்பு விரிசல்களும் ஏற்படுமே ஒழிய மகிழ்ச்சியை எட்ட முடியாது. இவ்வாறான இக்கட்டான நேரங்களை மகிழ்வுடன் எதிர்கொள்வோம். அதற்கு அடுத்து வருவது அதைப் போல் இருக்காது.

3. மற்றவர்களுடன் உங்களை ஒருநாளும் ஒப்பிடாதீர்கள்

அவரவர் பாவ புண்ணியங்கள் ஒரே மாதிரி அமைவதில்லை. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் அல்லது என்ன செய்கிறார்கள் என்பது முக்கியமல்ல, உங்கள் சுய மதிப்பு உள்ளிருந்து வருகிறது.

எந்தவொரு குறிப்பிட்ட தருணத்திலும் மக்கள் உங்களைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பொருட்படுத்தாதீர்கள். ஒன்று நிச்சயம் அவர்கள் சொல்வது போல் நீங்கள் ஒரு போதும் நல்லவரோ அல்லது கெட்டவரோ அல்ல.

உங்களை மற்றவர்களுடன் ஒப்பிடுவதிலிருந்து உங்கள் இன்பம் மற்றும் திருப்தி உணர்வு பெறும் போது நீங்கள் உங்கள் சொந்த மகிழ்ச்சியின் எஜமானர் அல்ல. நீங்கள் செய்த ஒரு காரியத்தைப் பற்றி நீங்கள் நன்றாக உணரும் போதும் யாருடைய கருத்துக்களையும் சாதனைகளையும் உங்களிடமிருந்து பறிக்க அனுமதிக்காதீர்கள். மற்றவர்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதற்கான உங்கள் எதிர்வினைகளை முடக்குவது சாத்தியமற்றது. என்றாலும் உங்களை மற்றவர்களுடன் ஒப்பிட வேண்டியதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரை பார்க்கின்ற, பிறரைப் பற்றிச் சிந்திக்கின்ற தூசியிலிருந்து தொலைவில் இருப்பவர்களே உண்மையான பெறுமதிமிக்க வைரங்கள் ஆவார்கள்.

4. உன்னையே வெகுமதியாக்கு

பலவீனங்களுக்கு முற்றுப் புள்ளி இடுவதன் மூலம் திறமையை வெளிப்படுத்து கின்ற முழுமையும் சம்பூரணமுமான வடிவத்தை வெளிப்படுத்துங்கள்.

கடினமாக உழைப்பது முக்கியம், ஆனால் உங்களை ஒருபோதும் ஓய்வெடுக்க அனுமதிப்பது உங்கள் மகிழ்ச்சிக்கு தீங்கு விளைவிக்கும். முயலும் - ஆமை கதை போன்று ஓய்வு என்பது எதிர்வினையை ஏற்பத்தி விடும்.

மரங்களில் சந்தன மரம் தன்னையே அழித்து உயர்ந்த இடத்தில் விளங்கவில்லையா? எல்லா மரங்களும் சிலுவைகள் ஆவதில்லை. சிற்பங்கள் ஆக்கப்பட்ட கற்கள் வணங்கப்படும் இடத்தில் வைக்கப் படுவதில்லையா? இதற்கு எண்ணம், சொல், செயல் சமனாக இருத்தல் வேண்டும். சிந்தையும் செயலும் ஒன்றுபட்டால் மாற்றம் காணமுடியும். அன்னை தெரேசா வாழ்ந்தார் - மறைந்தார்- புனிதரானார்.

5. வேலை வாரத்தில் உடற் பயிற்சி செய்யுங்கள்

உடற் பயிற்சியின் நன்மைகள் எப்போதுமே அதன் நாட்டத்தில் இழந்த நேரத்தை விட அதிகமாக இருக்கும்.

பல்கலைக்கழக ஆய்வு ஒன்று வேலை நாட்களில் உடற் பயிற்சி செய்தவர் கள் நேர மேலாண்மை மனநிலை மற்றும் செயல்திறன் ஆகியவற்றில் முன்னேற்றங்களை அறிவித்த தாக காட்டியது. அமர்ந்து பணியாற்று பவர்களுக்கு நாளடைவில் முதுகு வலி மற்றும் கழுத்து வலி ஏற்படலாம். மூச்சுப்பயிற்சி, யோகா மூலம் உடல் ஆரோக்கியத்தை பேண முடியும்.

6. நியாயத் தீர்ப்பு வழங்குதல் மற்றும் வதந்தி பரப்புதல் வேண்டாம்

எதிர்மறையாக இருக்கும் வகையில் வேறொருவரைப் பற்றி பேச நீங்கள் ஆசைப்படும் போது உங்களைப் பற்றி யாராவது சொல்வதை நீங்கள் விரும்புகிறீர்களா என்று நீங்களே உங்களைக் கேட்டுக் கொள்ளுங்கள்.

ஒருவரைப் பற்றி தவறாகவோ சரியாகவோ வதந்தியைப் பரப்பி அவர் அதனால் துன்பத்தை அனுபவிக்க நேர்ந்தால் உங்களுக்கு கிடைக்கும் மகிழ்ச்சி நிரந்தரமாய் நிலைக்காது. காலப்போக்கில் பிறிதொரு கதவால் உங்களையே வதைக்கும் . விதைப்பின் அறுவடை அதுவாக இருக்கும். நியூட்டன் விதி இதுவரை மாற்றி எழுதப்படவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக மேடையில் நாம் அனைவரும் நடிகர்கள். தங்கள் தங்கள் பாத்திரங்களை அவர்கள் நடிக்கிறார்கள் என்று உணர்ந்தால் கலக்கம் கலவரம் அடையமாட்டீர்கள். அவ்வாறாயின் தீர்ப்பு வழங்குவதற்கோ வதந்தி பரப்புவதற்கோ எண்ணத் தோன்றாது.

7. உங்கள் போர்களை புத்திசாலித்தனமாக அணுகுங்கள்

மற்றொரு நாள் போராடுவது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்வு பூர்வமாக அறிவார்ந்த மக்கள் அறிவார்கள்.

உங்கள் உணர்ச்சிகளை படித்துப் பதிலளிக்கும் போது நீங்கள் உங்கள் போர்களை புத்திசாலித்தனமாகத் தேர்வு செய்ய முடியும்.

· சரியான நேரத்தில் மட்டுமே உங்கள் நிலத்தில் நிற்க முடியும்.

ஹிற்லரின் கதை- ரஷ்யாவுக்குள் காலநிலை புரியாமல் போர் தொடுத்ததே அவனது தோல்விக்கு முழுக்காரணம்.

எதிரியின் பலம் பலவீனம் அறிந்தவனே போரில் ஜெயிக்க முடியும். உங்கள் பணிநிலையையும் பணியிடத்தையும் நன்கு அறிந்தவராக திகழுங்கள். அதற்கான தேடல்கள் என்றும் பணியிடத்தில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும்.

நீச்சல் கற்றுக் கொள்ளாமல் ஆழ்கடலில் குதிப்பது எதிர் வினையை ஏற்படுத்தும்.

8. உங்களுக்கு நீங்களே உண்மையாய் இருங்கள்

வெற்றியின் பெயரால் தார்மீக எல்லைகளைக் கடப்பது மகிழ்ச்சியற்ற ஒரு உறுதியான பாதையாகும்.

நீங்கள் எப்போதும் செய்யக் கூடாது என்று உங்களுக்குத் தெரிந்த ஒன்றை நீங்கள் செய்ய வேண்டும் என்று யாராவது வற்புறுத்தியோ அல்லது விரும்பும் போதோ நீங்கள் உறுதியாக நிற்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். கை லஞ்சம் வாங்கும் போது ஏற்படுத்தும் மகிழ்வு நிரந்தரமானது அல்ல. அதுவே பின்னாளில் நல்ல மனதுக்கு கசப்பாகிவிடும்

நீங்கள் குழப்பமாக இருக்கும் பொழுது உங்கள் மதிப்புகளை சுய மதிப்பாய்வு செய்து எழுதுங்கள். இது உங்களின் தார்மீக பாதையைக் காட்ட உதவும்.

நீங்கள் மற்றவர்களுக்காக தூய சாதகமான எண்ணங்களைக் கொண்டிருப்பதுடன் கருணை நிறைந்த உணர்வுகளுடன் உங்களை இகழ்பவர்களையும் ஈடேற்றுபவர் ஆகுவிர்களாக.

எங்களை ஒரு முறை மதிப்பாய்வு செய்து பார்ப்போமா?

ஒரு காகித தாளை எடுத்து இரண்டாக மடியுங்கள் பின்னர் ஒரு பக்கத்தில் நீங்கள் செய்த செயலாற்றிய நல்ல விடயங்களை குறிப்பிடுங்கள் மறு பக்கத்தில் நீங்கள் ஆற்றிய தீய செயல் மற்றும் மற்றவர்களுக்கு மறைக்க நினைத்த உங்கள் செயல் ஆகியவற்றை குறித்துக் கொள்ளுங்கள் அவற்றை ஒப்பீடு செய்துபாருங்கள். நீங்கள் யாரென்று உங்களுக்கே புரியும். உண்மையில் உண்மையாய் இருப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஒழுங்கீனத்தை அழிக்கவும்

நீங்கள் வேலையில் எவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டத் தேவையில்லை. உங்கள் பணியிடத்தை நன்றாகப் பாருங்கள் இனிமையான மற்றும் மேம்பட்ட இடத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்.

பணிபுரியும் ஒருவர் ஆசனத்தின் முன்னால் அமர்ந்து அவரது நேர மேலாண்மையை அபகரித்து நேர விரயம் ஏற்படுத்தும் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதும் ....

நேரம் கடந்து தினமும் பணிக்கு (கடமைக்கு) சமூகமளிப்பதும்....

இவ்வாறான நிகழ்வுகள் திறமை இருந்தாலும் ஆரோக்கியமான மகிழ்வைத் தராது.

எந்த முக்கியத்துவமும் இல்லாத குப்பை மற்றும் ஒழுங்கீனத்திலிருந்து விடுபடவும். உங்கள் மன நிலைக்கு சாதகமாக எதுவும் செய்யாதீர்கள்.

10. மற்றவர்களுக்கு கை கொடுங்கள்

உங்கள் சகாக்களுக்கு உதவ நேரம் ஒதுக்குவது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவது மட்டுமல்லாமல், அது உங்களுக்கும் மகிழ்ச்சியைத் தருகிறது.

நீங்கள் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளவில்லை என்பதை உறுதி செய்யும் வரை மற்றவர்களுக்கு உதவுவது உங்கள் மகிழ்ச்சியில் சாதகனமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உறுதி.

குழுக்களாக வேலை செய்யும் பொழுது மற்றவர்களுடன் குழுவின் வெற்றிக்கு ஒத்துழைப்பதும் முரண்டு பிடித்து தனிப்பட்ட விருப்பு வெறுப்பை திணிக்க முயற்சிக்காமையும் மகிழ்ச்சியைத் தருகிறது.

உதை பந்தாட்டம் ஒன்றைக் கவனியுங்கள். அணியின் வெற்றியில் ஒவ்வொருவருக்கும் உள்ள பங்கு ஒத்துழைத்தால்தான் அந்த அணியால் வெற்றி பெறமுடியும்.

11. உங்கள் செயல் திறனை மேம்படுத்திக் காட்டுங்கள்

உங்களுக்கு என்ன வேலை என்பதை நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். கண்டறிந்தும் நேரம் கடந்து செல்வது மற்றும் பிற வெளிப்புற கவனச் சிதறல்கள் பற்றிய விழிப்புணர்வை நீங்கள் இழக்கிறீர்கள்.

உங்களை மகிழ்விப்பது உங்கள் செயல் திறனை மேம்படுத்துவது மட்டுமல்ல இது உங்கள் ஆரோக்கியத்திற்கும் நல்லது.

உலக வாழ்க்கையிலோ அல்லது ஆன்மீக வாழ்க்கையிலோ சக்திகளே வெற்றிக்கான அடிப்படையாக விளங்குகின்றன. தமது கொள்ளளவிற்கு ஏற்பவே சக்திசாலிகள் ஆகுகிறார்கள்.

எந்தளவிற்கு அதிக சக்திகள் உங்களிடம் உள்ளதோ அந்தளவிற்கு அதிகமாக நீங்கள் வெற்றி அடைவீர்கள். பிரதானமான சக்திகள் சரீரத்தினதும் மனதினதும் செல்வத்தினதும் உறவு முறைகளினதும் சக்திகள் ஆகும்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. அதிகமான சிரிப்பும் புன்சிரிப்பும்

நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் சிரிப்பின் சிகரம் தொட்டுப் பாருங்கள் அங்கே மகிழ்ச்சில் திளைப்பீர்கள். மகிழ்ச்சியான நினைவுகளை கொண்டிருந்து சிரித்து வாழுங்கள் . சிரிப்பு இலவசமாய் கிடைக்கும் அருமருந்து. மனிதன் சிர்க்கின்ற போது 17 தசைகள் இயங்குகின்றன.

பல ஜீவராசிகளும் செய்ய முடியாததை மனிதன் ஒருவனே சிரிக்கின்றான். வாய் விட்டு சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்றார்கள். இது ஏழை பணக்காரன் என்றோ கருப்பு இனத்தவர் வெள்ளைக் காரன் என்ற பேதமின்றியோ பொதுவாகக் காணப்படுவது.

முல்லைச் சிரிப்பென்பார்களே (புன்சிரிப்பு) அதை இலவசமாக விதையுங்கள் அதன் அறுவடை மகிழ்ச்சியாய் அமையும் என்பது நிச்சயம்.

13. எதிர்மறை நபர்களிடமிருந்து விலகி இருங்கள்

புகார் அளிப்பவர்களும் எதிர்மறையான நபர்களும் மோசமான செய்திகளாக இருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் பிரச்சனைகளில் சிக்கிக் கொள்கிறார்கள் மற்றும் தீர்வுகளில் கவனம் செலுத்தத் தவறி விடுகிறார்கள்.

ஓர் அனுதாபக் காதுக்கு கடன் கொடுப்பதற்கும் அவர்களின் எதிர்மறை உணர்ச்சி சுழற்சிகளில் சிக்குவதற்கும் இடையே ஒரு நல்ல கோடு இருக்கிறது.

வரம்புகளை நிர்ணயிப்பதன் மூலமும் தேவைப்படும் போது உங்களைத் தூர விலக்குவதன் மூலமும் மட்மே நீங்கள் இழுக்கப்படுவதை தவிர்க்கலாம். இதைப்பற்றி யோசித்துப் பாருங்கள்.

ஒரு நபர் புகை பிடித்திருந்தால் பிற்பகல் முழுவதும் அவரில் இருந்து வெளிவரும் இரண்டாவது கை புகையை உள்ளிழுப்பீர்களா? நீங்களே தொலைவில் இருப்பீர்கள்.

14. உங்களைப் பார்த்துச் சிரிக்கவும்

வேலையில் உங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்ளும் போது உங்கள் மகிழ்ச்சியும் செயல் திறனும் பாதிக்கப்படும். கொஞ்சம் பாதிப்பைக் காட்டப் பயப்பட வேண்டாம்.

உங்களைப் பார்த்து சிரிப்பதைப் போன்ற எளிமையான ஒன்று உங்களை மக்களிடம் ஈர்க்கிறது. ஏனென்றால் நீங்கள் தாழ்மையும். அடித்தளமும் உடையவர் என்பதை இது காட்டுகிறது. இது உங்கள் பின்னால் சிரிப்பதை தடுக்கிறது.

மகிழ்ச்சியான மக்கள் தங்கள் தன்னம்பிக்கையை நல்ல நகைச்சுவையுடனும் பணிவுடனும் சமன் செய்கிறார்கள்.

15. நன்றியுணர்வின் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்

சில சமங்களில் உங்கள் மனதை எதிர்மறையிலிருந்து விலக்குவதற்கான சிறந்த வழி பின்வாங்கி நீங்கள் நன்றியுள்ளவர்களாக இருப்பதைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வாழ்க்கையில் உள்ள நன்மைகளைப் பற்றிச் சிந்திக்க நேரம் எடுத்துக் கொள்வது உங்கள் மன நிலையை மேம்படுத்துகிறது.

நன்றியுணர்வை வளர்க்க தினசரி உழைத்தவர்கள் மேம்பட்ட மனநிலை ஆற்றல் மற்றும் உடல் நலத்தை அனுபவித்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது. வித்தியாசமாக இருக்கக் கூடிய அல்லது நீங்கள் விரும்பிய விதத்தில் மாறாத விஷயங்களில் சிக்கிக் கொள்வது மிகவும் எளிதானது.

தினமும் பணி தொடங்கும் முன்பும் பணி நிறைவடைந்த பின்னரும் இறைவனை வணங்கி நன்றி செலுத்திப் பாருங்கள் உங்கள் மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

16. நல்லது இன்னும் வர இருக்கிறது

சிறந்தது இன்னும் வரவில்லை என்று நீங்களே சொல்ல வேண்டாம். அதை நம்புங்கள். எதிர்காலத்தைப் பற்றி நேர்மறையான நம்பிக்கையான கண்ணோட்டத்தைக் கொண்டிருப்பது உங்களை மகிழ்ச்சி அடையச் செய்யாது. இது உங்கள் சுய செயல்திறனை அதிகரிப்பதன் மூலம் உங்கள் செயல்திறனை மேம்படுத்துகிறது.

கடந்த கால இன்பத்தை இவ்வளவு பெரிய அளவில் பெரிதுபடுத்தும் போக்கு மனதில் உள்ளது. இந்த நிகழ்வு நீங்கள் ஏற்கனவே அனுபவித்ததை விட எதிர்காலச் சக்தியின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்யலாம். ஏமாற வேண்டாம். எதிர்காலத்தில் இருக்கும் பெரிய விஷயங்களை நம்புங்கள்.

நிறைவாக இன்னும் இதர விடயங்களை அவதானிப்போமாயின் பணியாளர்களின் குடும்ப உறவுகளுடன் வருட ஒன்று கூடல் சுற்றுலா செல்லுதல் போன்ற நிகழ்வுகளும் மகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

நம்அனைவருக்கும் நாளைப் பொழுது நல்லதாக மகிழ்ச்சியுடன் விடியட்டும்.

எஸ். நடராஜா
இலங்கை வங்கி ஓய்வுநிலை வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வூதியர் கல்லூரியில் இணைந்து...

அறுபது தலைநீட்டியது. ஓய்வூதியம் கைநீட்டியது. மறுப்பின்றி ஓய்வெடுத்தன ஓடியோடி வங்கிச் சேவையாற்ற உதவியாயிருந்த எனது சேவைக் (சக்)கரங்கள் அறுபதானாலும் சேவையாற்றக்கூடிய உடலுறுதி, உளவுறுதி இருந்தால் சேவையாற்றலாம் தானே என்ற கேள்வி என் மனதுள் தோன்றி மறைந்தது. இருப்பினும் அறுபதற்கு முன்பிருந்த உடலாரோக்கியம் அறுபதற்குப்பின் இருக்கமுடியாது என்பதை இயற்கை எமக்கு எடுத்துக் காட்டும் இயற்கையின் எழுதாச் சுற்றுநிருபத்தை மதித்து ஏற்று மனம் ஆறுதலடைந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள கல்லூரி ஒன்றில் க.பொ.த. உயர்தரம் வரை கற்றுப்பெற்ற உயர்பெறுபேறுகளே என்றன் இலங்கை வங்கியில் இணைந்து செயலாற்ற உறுதுணையாய் அமைந்தன. "நேரந்தவறாமை", "நேர்மை", "தூய்மை", "விசுவாசத்தன்மை" என்பவை நன்றே செயற்பட்டதையும், அவை எவ்விதத்திலும் சறுக்காமலும், மறுக்காமலும், இடையூறுகள் ஏதும் தராமலும் நான்கு தசாப்தங்களாய் நன்றே ஓடியதால் யான் எவ்வித இடையூறுமின்றி வங்கிச் சேவையாற்றியதை நினைந்து பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

வங்கிச் சேவைக்கு இணையமுன் கல்லூரி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தேன். சேவையால் ஓய்வுபெற்றபின் மீண்டும் ஒரு கல்லூரிக்குள் நுழைவது போன்ற ஓர் உணர்வு என்மனதுள். ஆமாம்! ஓய்வூதியர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் இணைந்துள்ளேன் எனலாம். இங்கு ஆசிரியர்களோ அதிபர்களோ இல்லை. நாம் கற்றவற்றை மீள்பார்வை செய்வோம். பத்திரிகை படித்து ஊர் உலக நடப்பை அறிவோம். கலந்துரையாடுவோம். இங்கு பரீட்சைகள் இல்லை. பட்டங்கள் வழங்குவதில்லை. இங்கு தினவரவு இடாப்போ அல்லது அதுபோன்ற பதிவேடுகள் எதுவுமில்லை. ஒருவர் பெரிய பிரித்தானியாவில் பிறந்த பேரப்பிள்ளையைப் பார்க்கச் செல்வதற்கு அவர் இங்கு யாரிடமும் அனுமதி பெறவேண்டிய அவசியமில்லை. முதுமை ஓய்வூதிய வாழ்வின் ஆரம்பப்பருவம் எனலாம். இங்கு இருப்பவர்களது அதாவது எங்களது தலைமயிர் நரைத்திருக்க வேண்டும். ஆனால் சிலரது தலைமயிர் அவ்வாறில்லாது பளபளவென்று கருப்பு நிறத்தில் காணப்படுகின்றது. இது அவர்கள் விருப்புடன் பொறுமையாய் பூசிய கருப்புச்சாயப் பூச்சால் ஏற்பட்ட தற்காலிக பொலிவு தரு எழில்த்தோற்றமே. இது தொடர்பாக பட்டினத்துச் சுவாமிகள் "உடற்கூற்று வண்ணம்" என்ற பகுதியில்,

"வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்து இரு கண்களிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோத குரோதமடைந்து"

என்று பாடுகின்றார். இயற்கையின் வளர்ச்சி முறையிது.

ஒருவர் நோயொன்றினால் நித்திரையின்றி வேதனைப்படுகின்றார் என்றால் அதற்கு தூக்கமருந்து நிரந்தர மருந்தாகாது. அது ஒரு தற்காலிக ஆறுதல் மட்டுமே. நோயை இனங்கண்டு அதற்கான மருந்தைக் கொடுத்தலே நிரந்தர தீர்வை வழங்கக்கூடியது. இதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாக குறிப்பிட்ட நோய் வராதிருப்பதற்கான தடுப்பு முறைகளை அறிந்து அவற்றைப் பின்பற்றி நடப்பதும் ஒரு வழியாகும். 'Prevention is better than Care' என்று இம்முறையைக் குறிப்பிடுவார்கள்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றின் 191வது பாடலும் நரைதிரைபற்றிக் கூறுகின்றது. பிசிராந்தையார் பாடிய குறிப்பிட்ட பாடல் வருமாறு:-

"யாண்டு பல ஆக. நரை இல ஆகுதல்
யாங்கு ஆகியர்? என வினவுதிர் ஆயின்
மாண்ட என் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்
யான் கண்டனையர் என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன் தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"

பிரிசாந்தையார் நரை திரை ஏற்படக் காரணம் முதுமை அல்ல மனக்கவலையே என்று கூறுகின்றார். இப்பாடலில் "மாண்ட என் மனைவி" என்று இவர் குறிப்பிடப்படுவதன் பொருள் மாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவி நற்குண நற்செயல்கள் உடையவள் என்பதையும் மனைவாழ்வாலும், மகப்பெற்று வளர்தலாலும் இயற்கை அறிவு மிகுந்தவளாக உள்ளதையும் குறிப்பிடுகின்றார். புதல்வரும் கல்வி கேள்விகளால் சிறந்து விளங்குகின்றனர் என்றும், தனது ஏவலர்கள்தான் சொல்வதை செய்வதோடுதான் கருதியதையே அவர்களும் கருதினர் எனவும் அத்தோடு அரசன் அறமல்லாவற்றை செய்யமாட்டான்" என்பதன் மூலம் செங்கோன்மைத்திறத்தை குறிப்பிடுகின்றார். மேலும் தனது ஊரில் கல்வி கேள்விகளால் நிறைந்தும், மனம் மொழி மெய்களாலும் ஐம்புலனாலும் அடக்கமுடைய சான்றோர் பலர் இருப்பதாகவும் கூறுகின்றார்.

வீட்டிலோ, ஊரிலோ, நாட்டிலோ கவலை தரக்கூடிய ஒன்றும் தனக்கு ஏற்படவில்லை என்று குறிப்பிட்டு நரை தோன்றுவதற்குக் காரணம் முதுமையன்று. மனக்கவலையே என முடித்தார்.

ஐயன் திருவள்ளுவர் குறள் 51, 52, 53இன் மூலம் இல்லாள் மாண்பு பற்றிக் குறிப்பிடுகின்றார். அதையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாகும். விசேடமாக குறள் 53 இவ்வாறு குறிப்பிடுகின்றது.

"இல்லது என் இல்லவள் மாண்பானால்? உள்ளது
என் இல்லவள் மாணாக் கடை?"

இக்குறளில் மனைவியின் நற்குணம், நற்செய்கை என்பவைபற்றிக் கூறப்பட்டுள்ளது. அதாவது இல்லாளின் மாண்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

பிசிராந்தையார் பாடலில் ஐம்புலனடக்கம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் மனதைப் புலன்வழி செல்லவிடாது ஐம்புலன்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புலனைந்தும் வென்றான் ன்ற வீரமே வீரம்" என்று கூறுவார் ஔவையார். சுவைக்கு அடிமையாகிய ஒருவர் நோயின் பிடியில் சிக்கித் துன்பப்படுவதை நாம் காண்கிறோம். உணர்ச்சிகளை அடக்கி ஆள வேண்டும். இல்லையேல் அவை எம்மை ஆளமுற்பட்டு எம்மைச் சோகத்தில் ஆழ்த்திவிடும். நீர் மேல் ஓடம் ஓடலாம். நீர் ஓடத்துக்குள் ஓடக்கூடாது. அதேபோல் மனக்கட்டளைப்படி ஐம்புலன்கள் செல்ல வேண்டும். மாறாக ஐம்புலன்கள் வழியில் மனம் சென்றால் அழிவையே சந்திக்க நேரிடும்.

அன்புடனான இன்சொல், அடக்கம், பொறுமை, சாந்தம் போன்ற நற்குணங்கள் ஒருவரை உயர்ந்த நிலைக்கு உயர்த்திவிடும் என்பதைக் குறிப்பிட்டு இக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன்.

தகவல் : அழ. பகீரதன்

ஒய்வூதியர் ஒருவரின் உள்ளத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிம்மதியான வாழ்க்கைக்கு... இவள் மனதிலிருந்து... சில வரிகள்...

யாரிலும் அதிகம் நம்பிக்கை வைக்காதீர்..
யாரிலும் அதிகம் தங்கி வாழாதீர்கள்...
யாருடனும் விரோதங்களை வளர்க்காதீர்கள்..
அவரவர் குணங்கள்,
அவரவர் குணங்கள்,
அவரவர் நடத்தைகள்,
அவரவர் சூழ்நிலைக்கேற்ப மாறலாம்...
இங்கு யாரும் நம்மோடு
சேர்ந்து வரவில்லை
யாரும் இறுதி வரை
சேர்ந்து வரப்போவதில்லை..
தனித்து வந்தோம்
தனித்தே செல்கிறோம்....!

இந்த உலக மேடையில் எல்லோரும்
ஒவ்வொரு கதாபாத்திரத்தில் வருவார்கள்,
அன்பைத் தருவார்கள்,
வெறுப்பைக் கொட்டுவார்கள்,
கூட இருப்பார்கள்,
பின் விலகிச் செல்வார்கள்,
புகழ்ந்து இசை பாடுவார்கள்,
பின் இகழ்ந்து வசை பாடுவார்கள்,
இவ்விதம் பலர் பலவிதமாய்
வந்து போவார்கள்...!

நாமும் ஒரு கதாபாத்திரம் தான்...!
யாரும் நிரந்தரமாய்
இங்கு தங்கப்போவதில்லை..!
ஆதலால்
எதையும் ஆழமாய்ப் பற்றிக்கொண்டு
அல்லற் படவேண்டாமே..!

யாரிடமும் அதிகம் தங்கியிராமல்
எல்லோரோடும்,
எல்லா சந்தர்ப்பத்திலும்
நம்மால் முடிந்தவரை
அன்பை மட்டும் பகிர்ந்து
நாம் நாமாக வாழ்ந்திடலாம்
யாரையும் மாற்ற போராடாமல்..
யாரிடமும் அதிகம்
எதிர்பார்ப்பையும் வளர்க்காமல்...
வாழப் பழகினால்
நாம் நாமாக நிம்மதியாக
வாழ்ந்து விடலாம்...!

நேசிப்பவர்க்கு நேசத்தையும்
புண்படுத்துபவர்க்கு
மன்னிப்பையும் பரிசளித்து
இன்பத்திலும் துன்பத்திலும்
வெற்றியிலும் தோல்வியிலும்
எல்லா சூழ்நிலைகளையும்
இயல்பாக கடந்து செல்லுங்கள்
இங்கு எதுவுமே நமக்கானது இல்லை...!

நிரந்தரமில்லா பூமியில்
எதிலும் நிரந்தரம் தேடாதீர்...!
வெறுப்புகள், துரோகங்கள்
காயங்கள், கவலைகள்,
அனைத்தையும்
அந்தந்த மனிதரோடும்,
அந்தந்தச் சூழ்நிலைகளோடும்,
வழியனுப்பி விட்டு
அன்பையும்,
சந்தோஷ நினைவுகளையும் மட்டும்
எடுத்துச் செல்லுங்கள்
வாழ்க்கை முழுதிலும்...!!!

கோபிகா சென்திராஜ்
BoC வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயிக்கிள்

வீதியின் மருங்கில் சளாப்பித் திரும்பி
ஜீப்வண்டி அருகில் பிறேக் போட்டு நிக்க
கதவம் திறந்து கழுத்திறுக்கி ரை கட்டிக்
குதித்திறங்கி என்னருகே மெதுவாய் கிட்ட
வந்தவர் புன்னகை புரிந்தென்னைக் கேட்டார்:
"என்ன ஐயா சைக்கிளிங் தொடங்கிட்டியள்?"

"மிச்சம் பிடிச்ச காலம்போய் எகிறும்
விலையேற்ற நிலையிலை நானெங்க
மோட்டச் சயிக்கிள் சவாரி செய்ய" என்றேன்

"ஆயிரத்துக்கும் வேண்டினனாங்கள் எண்டு
பறையிறாங்கள், நீங்க நாநூற்றிருபதுக்கு
ஒடிஞ்சு போறியள்" எனப் பல்லிழித்தார்

"விசர்க்கதை கதையாதை தம்பி நாம்
பட்ட பாட்டை அறிஞ்சா நிக்கமாட்டீர்"
"என்னையா?" என நெற்றிசுருக்கி விழித்தார்



"வாரம் ஒன்று கடந்து வேலைமுடிந்து
வவுனியா வங்கிக் கிளையி லிருந்து
வெற்றுச் சயிக்கிளில் மிதிச்சு மிதிச்சு
நாம் நால்வர் வாடி வதங்கி நொந்து
வட்டுக்கோட்டை வரை வந்த கதை
எட்ட வில்லையோ ஆர் செவியிலும்!

மீட்கப் பட்ட பிரதேசமென மூடுண்ட
சுன்னாகம் அமைந்த கிளைக்குச் செல்லவென
பாஸ் எடுக்கக் கூட்டமாய் நாங்கள்
கலட்டி சென்ரியாலை போய் பலாலி
வீதியால் றலிச் சயிக்கிளில் புத்தூர்
சென்று சுன்னாகம் தெருவிலே பயணித்த
பொழுதுகள் மறக்குமோ எமக்கு இன்றும்!
போர் என வீட்டிலிருக்க விடிவாமோ?

சிங்கர் மெசின் ஓயில் குப்பியில்
பெற்றோல் ஸ்ராட்டுக்குத் துளி விட்டு
மண்ணெண்ணையில் எம்ரி நையின்ரியில்
வடமாராச்சி யிலிருந்து வருவார் முகாமையாளர்

ஆயிரத்துக்கு ஓடக் கட்டுமோ அன்று...

இருகிலோ மீற்றர் உழக்க முடியாக்
கால் மூட்டு வலியே ஆயினும்
இன்றிந்த நாளாந்த விலையேற்ற நிலையில்
வேறென்ன வழி இயலும்?" என வினவ
விக்கித்த வங்கி முகாமையாளர் அவரோ
பதிலற்றுச் சிலையாய் நின்றார் சற்று!

அழ. பகீரதன்
ஓய்வுநிலை உதவி முகாமையாளர் இலங்கை வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sivaratnam - A 'Hatrick' Banker - who will never Be forgotten

Mr.Sivaratnam who started his Banking career in the Lower grade rose step by step in the ladder of Success and finally retired as Assistant General Manager Northern Province. During the war period he has to travel over 18 Km by cycle to go office and has to work. without the basic necessities of life like Electricity, communication, shortage of liquid cash and the handle with acute shortage of staff. Due to the transport problems and lack of medical facilities, the staff also has to work with their sickness.

Inspire of these difficulties, he also assisted staff by conducting Banking classes with the help of university of Jaffna lecturers on holidays. A number of a staff passed the exams conducted by the Institute of Bankers, Sri Lanka. He has also been a writer and have written a no. of articles which were published in the press. The dedicated services rendered by him was published in a booklet which was sent to his collegues and friends.

After retirement he also sent a grievance letter dated 25.10.2011to the management and to the B.O.C Pensioners Association highlighting the sacrifices contributed by the Staff during the War period. A copy of these letters was also sent to the Chairman L.LR.C., Ombudsman, English Media in Colombo and other relevant Authorities of the Bank. As this was his last letter sent by him, Hope the Management will honor these letters so that He will rest in Peace in Haven.

He also established V.2 Travels company With his son Mr.S.Saruban. This company not only does Travels but also handles exports and imports, Employment for Sri Lankan Abroad and also makes arrangements for students Education abroad. This Htrick company will bring in substantian Foreign Exchanging which is badly needed. His other daughter Mrs. Karunja Mathipan followed her Father's Banking career in the Peoples Bank and is now retired.

The Greatests Services any children can contribute to their departed Parents is to become 'Torch Bearers' of the services rendered by them and Publish all meritorious services rendered and pass this on to the Next Generation so that the Flame will not get extinguished.

K. Kanesamoorthy
President
exbanker76@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BANK OF CEYLON PENSIONERS ASSOCIATION-JAFFNA DISTRICT

E.Mail: bocpensionersasso.jd@gmail.com

1[ST] FLOOR, BANK OF CEYLON JAFFNA SUPER GRADE BRANCH,
HOSPITAL ROAD, JAFFNA.

The President,
Ex-Bankers Association of Sri Lanka, Colombo -4.

25[th] Oct 2011

Reciprocating the pensioners who have contributed their best during the most turbulent period

Now most of the banks and institutions proudly announce their services that are being rendered and named as "social responsibility projects". For these banks and other institutions to flourish now to engage in these projects, enhancing their profits and also to sustaining in the market. The yeoman services of the current pensioners of all banks during the war period was the prime reason.

It is highly regrettable to note that this fact has been conveniently forgotten by the present management. When the actual pillars are suffering in silence, the floors above are flourishing in luxury. It should be borne in mind that,if not for the unstinted services rendered to the banks at the risk of their lives by the present pensioners, the banks that were functioning in the north would not have risen to this present status and would have suffered great losses.

Therefore it is a duty on the part of management of all banks to reciprocate the services of all the pensioners who were in service during the war period, at least now. We just brief below the conditions under which they worked and the services rendered by them.

1. Whilst most of the institutions such as Railways, CTB, Telecom, Cement factory, CEB, Petroleum Corporation ceased to function the banks functioned and rendered their services to the public.

2. Even during the time of the non availability of liquid cash in the bank, the employees concerned went around the streets and visited each and every business establishment and traders, begging and collecting money to pay the salaries of the staff,teachers, hospital employees and other government servants etc.

3. At the time of the mass displacement of Valigamam in the year 1995, the Bank employees did not run away but found suitable places in the Vadamaradchy and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thenmaradchy to relocate the branches. Amidst shelling, bombing and helicopter gun fire they carried the vital bank documents, cash, cheque books etc in their shoulders and traveled in bullock carts in heavy shooting & raining, neglecting their own families to enable the bank to function without a break.

Most of the families of these pensioners lived under tree shadows and in verandas of homes without any basic facilities including a whole meal. Despite such hardships they carried out their duties in the banks satisfactorily and all customers & public appreciated their services and remained greatful to them.

Besides there was shortage of medical practitioners and proper medicines. The medical facilities were hardly available or not available at all. The only medicine that was available was the panadol. That too at a cost of more than Rs2.50 per pill. This pill was given to all types of diseases. As a result several family members and children fell critically ill.

4. There was no transport, no electricity and none of other facilities that are the basic needs of human life.

5. These pensioners travelled long distances by push bicycle as this was the only mode of transport available.

   One Mr. Alfred who travelled for work by push bicycle from Thenmaradchy to Vadamaradchy died of a heart attack in one evening after getting back from work.

6. If at all we list all what happened during the period and the services rendered by the current pensioners it will fill hundreds of pages.

7. These pensioners are now completely forgotten. Even during the anniversaries of the BOC all the current employees were honored by cash incentives and rewards, but the pensioners who exhausted and were the cause of the bank's present exalted status were not even given a meager incentive/reward.

8. When staff members were requested to be present in Colombo for official purposes they traveled through dangerous routes by tractors and boats up to Wanni and thereafter by buses after the army security checking.

   In one incident a peoples bank officer Mr Kanagasabai while travelling on official duty through Kilaly lagoon the Navy shot at the boat and after 4 days only the body was recovered. Was the family who sacrificed their bread winner for the bank suitably compensated?

9. The worse happened during Indian Army region, one bank employee who was shot dead in Chunnakam who attempted to cross the road in one evening.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One security guard died on a shell attack while returning from duty.

One pensioner Mr.Sivapalan is permanently disabled on a shell attack when he was coming to office for work.

10. During Indian army time many unknown groups threatened the banks to open only for three days. The Indian army wanted to open for all 5 days! What was the plight of the employees? Who were in between Both sides ruthless with guns.
Mr. Mahalingam then the Point Pedro BOC Manager was about to be shot by Indian army when. another sympathetic army officer intervened and saved him.

These are only few unfortunate incidents. After so much of sufferings and hardships and sometimes losing their family members these pensioners remained loyal to the bank and worked hard even during the difficult period of war to enable the banks to function smoothly. But did the management recognize the services of the pensioners who were behind the present exalted position of the banks?

At least now we appeal to the management to reciprocate their services. Suggestions are stated below.

1. Several staff (who is now pensioners) could not get their legitimate promotions due to their inability of sitting for examinations (both internal and external) and also the inability of appearing for interviews which were beyond their control.
Therefore we appeal to all the managements to place all pensioners who worked during the war period, one grade above their grades which were prevailing at the time of retirement. This will be a real and faithful reward which will reciprocate their yeoman services.

2. To consider and pay compensation for the pensioners who have paid the loans and interest up to their retirement date and also out of their retirement benefit for their loans obtained under staff housing loan scheme and whose properties were damaged due to war or brought under highly security zone

We trust that due consideration will be given to the above suggestions.

Thanking you in anticipation

N. Sivaratnam
(President)

Rasanayagam
(Secretary)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நல்ல நண்பரை இழந்து விட்டோம்

உலகில் ஒவ்வொரு மனிதனும் காலத்தின் கட்டளைக்கு கட்டுண்டே வாழ்பவன். அதுவும் அவனது வாழ்க்கை முன்னும் பின்னும் கிழிந்த புத்தகம் போன்றதே. மரணம் மனிதனுக்கு முடிவுரை இல்லை. மரணத்தின் பின்னால் உள்ள பக்கங்கள் நாம் வாழும் போது ஆத்மாவில் பதியும் கர்ம வினைகளின் தத்துவத்துக்கு அமைய எழுதப்படும். அதனையே அவரவர் தலை எழுத்து என்கிறோம். ஒருவன் எத்தனை காலம் வாழ்ந்தான் என்பதைவிட எப்படி வாழ்ந்தான் என்பதை அறிந்தால் வாழ்க்கையில் தோல்வியுமில்லை.

சிலர் பிறக்கும் போது சாதனையாளராக பிறக்கின்றனர். சிலர் சாதனையாளராக ஆக்கப்படுகின்றனர். எதுவும் தெரிந்தெடுத்து நாம் பிறப்பதில்லை. இருந்த போதிலும் சிலர் வெற்றி பெறுகிறார்கள் பலர் தோற்று விடுகின்றனர்.

அந்தவகையில், நம்மோடு வங்கி வாழ்வில் ஒன்றாகப் பயணித்து 28.12.2022ல் நம்மை விட்டு பிரிந்த அமரர் நடராஜா சிவரத்தினம் அவர்களுக்கான நெஞ்சார்ந்த வரிகளிவை.

என்னவென்று அழைப்பேன் எப்படிப் பகிர்வேன் அன்னாருடைய உறவு இலங்கை வங்கியில் முகாமையாளர் - உதவிப் பொதுமுகாமையாளர் பதவிக்கு அப்பால் ஒரு சிறந்த நண்பராகவும் விளங்கினார்.

அவரிடம் உள்ள திறமையில் ஒன்று யாரிடம் என்ன திறமை உண்டோ அதனை இனம் கண்டு உள் வாங்கி மற்றவர்கள் பயன் பெறத்தக்க முறையில் அவற்றை உபயோகிப்பது. அதனால் பலருக்கு சிலரை அறிமுகம் செய்தும் வைத்தார். அது அவர்களின் வாழ்வின் உயர்வுக்கு ஊன்று கோலாகவும் அமைந்தது. பின்னாளில் உறவு கலந்த நட்பாக மலர்ந்து விடுவதும் உண்டு. இத்தனைக்கும் தொலை பேசியை தளமாகக் கொண்டிருந்தார். அதன் வாயிலாக வேறும் பல சாதனைகளையும் புரிந்ததார். இது அவரோடு இருந்த நட்பின் காரணமாக நிதர்சனமாக கண்ட உண்மை.

அந்த வகையில் அமரர். சிவரத்தினம் அவர்கள் புரிந்த சாதனைகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம். அது சமூகத்தின் பணியாகவோ அல்லது வங்கியிலே பணி புரிந்த காலத்தின் கடமையின் வெளிப் பாடாகவே அமையலாம். அவற்றை விபரித்தால் பக்கங்கள் அதிகரித்து விடும். வாசகர்கள் நலன் கருதி அவற்றில் சிலவற்றை சுருக்கமாக பகிர்கின்றேன்.

* ஈழத்தில் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு உருவாக்கப்பட்ட கப்பல் "அன்ன பூரணி" பற்றியும் அதன் கடலோடிகள் பற்றிய சரிதம் எழுதி வாசர்களோடு பகிர்ந்து ஆவணப்படுத்தியமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* ஊக்கி என்னும் சஞ்சிகையை உருவாக்கி அதன் முழுப் பொறுப்பையும் தனதாக்கி பிரசுரித்து வந்தார். கட்டுரைகளின் ஆக்கங்களும் அதன் வினியோகமும் வங்கியாளர்களின் ஒத்துழைப்பும் இன்மையால் இடையே அது நின்று போனது.

* "வாழ் நாள் வங்கியாளர்" என்னும் சஞ்சிகையை பின்னாளில் மனம் தளராது ஆரம்பித்தார் இந்த சஞ்சிகை வாயிலாக பல பயனள்ள கட்டுரைகள் - வங்கி ஊழியர்களுக்கான பாட நெறிகள் இலங்கையின் சட்ட விதி முறைகள் பற்றிய கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. வங்கியில் கடமையாற்றிய ஊழியர்களின் தொடர்பினை ஏற்படுத்தும் விபரக் கோவை மற்றும் அவர்களின் இழப்பின் பின்னரான இரங்கல் கட்டுரைகளை பிரசுரித்தல், பரீட்சைக்குத் தோற்றும் வங்கி ஊழியர்களுக்கான பாட நெறிகள் பிரசுரித்தல் போன்றன அடங்கியிருக்கும். இச்சஞ்சிகை பிரசுரிக்கும் செலவை விட குறைத்து வெறும் ரூ.100.00 க்கு ஊழியர்களுக்கு வினியோகிக்கும் வழிமுறையை ஏற்படுத்தியமை.

* தலைநகர் கொழும்பில் நடைபெறும் வங்கியின் பாடநெறிப் பரீட்சைக்கு யாழ் குடாநாட்டில் உள்ள ஊழியர்கள் யாழ் நகரிலேயே தோற்றும் வண்ணம் வழி முறை உருவாக்கியமை.

* யாழ்.குடா நாட்டில் இலங்கை வங்கி கணிணி மயப்படுத்தப்பட்ட போது ஊழியர்கள் கொழும்பு சென்று கற்காமல் யாழ். நகரிலேயே கற்கும் வண்ணம் யாழ்.நகரில் கடமையாற்றிய ஒரு சிலருக்கு கொழும்பில் பயிற்றுவித்து அவர்கள் மூலமாக யாழ் குடா நாட்டின் ஏனைய ஊழியர்களுக்கு பயிற்றுவித்தமை.

* இலங்கை வங்கியின் சிறிய கிளைகளில் கடமையாற்றும் ஊழியர்கள் ஓய்வுபெறும் போது அவர்களது பிரியாவிடை சிறிய அளவிலேயே அங்கு கடமையாற்றும் மற்றறைய ஊழியர்களுக்கு தக்கவாறு அமையுமென்பதால் அத்தகைய ஊழியர்களுக்கு ஏனைய கிளைகளில் கடமையாற்றும் ஊழியர்களுடன் சேர்த்து ஒரு பொதுவான பிரியாவிடை நிகழ்வு நடாத்தும் முறைமையினை ஏற்படுத்தினார். இது சிறிய கிளைகளில் கடமையாற்றும் வங்கியாளர்களுக்கு ஏற்படும் மனத்தாக்கத்தை இந்த எண்ணக் கரு தவிர்த்தது.

* Managers Forum ஒன்றை Eurovil நிலையத்தில் ஏற்படுத்தி அதன் தலைவராக தாம் இறக்கும்வரை இருந்து பயனள்ள நிகழ்வுகளை நடாத்தியமை. யாழ் நகரில் உள்ள அனைத்து வங்கிக் கிளை ஊழியர்களும் பயன்பெறும் வகையில் பேராளர்கள் அறிஞர்களை வரவழைத்து எண்ணற்ற நிகழ்வுகளை நடத்தியமை.

* வட மாகாண இலங்கைவங்கி ஓய்வூதியர் நலன் புரிச்சங்கத்திற்கு யாழ்.அதிமேற்தரக் கிளையின் முதலாம் மாடியில் அதற்கொரு காரியாலயத்தை ஏற்படுத்தி கொடுத்தமை.

* யாழ் குடா நாட்டின் ஓய்வுதியர்களின் தொலை பேசி இலக்கம் உட்பட ஏனைய விபரங்கள் அடங்கிய நூல் ஒன்றை ஓய்வுநிலை வங்கியாளர் சங்கம் ஊடாக பிரசுரித்து அதனை யாழ் குடாட்டில் உள்ள சகல ஓய்வு நிலை ஊழியர்களுக்கும் இலவசமாக கொடுத்ததன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலாக சகல ஓய்வு நிலை ஊழியரகளுக்கும் இடையே ஒரு தொடர்பாடல் ஏற்படுத்திக் கொடுத்தமை.

* வெள்ளித்தகட்டின் மூலம் கேடயங்கள் செய்வித்து உயரிய பிரமுகர்கள் யாழ். வருகையின் போது அவற்றை பரிசளித்தமை வாயிலாக யாழ் மக்களின் விருந்தோம்பல் முறைமையினை கடைபிடித்தமை.

* வங்கிக் கிளைகளில் கடமையாற்றிய முகாமையாளர்கள் பெயரையும் அவர்கள் கடமையாற்றிய காலத்தையும் தெளிவு படுத்தும் பெயர்பட்டியலை வங்கிக் கிளைகளில் அனைவரும் பார்க்கும் வண்ணம் காட்சிப்படுத்தியமை.

* தபால் போக்குவரத்து யாழ் குடாநாட்டில் இருந்து ஏனைய இடங்களுடன் தடைப்பட்ட காலங்களில் இலங்கை வங்கிக் கிளை களுக்கு வெளியே Fronto எனும் நிறுவனத்தை ஆரம்பித்து அதன் வாயிலாக பலருக்கு தொழில் வாய்ப்பினையும் ஏற்படுத்தி தபால் போக்கு வரத்தை இலகுவாக்கியமை. அது மட்டுமல்ல கிளைகளில் இருந்து தபால்களை அந்தந்த கிளையின் ஒரு ஊழியர் மூலம் வட மாகாண உதவிப் பொதுமுகாமையாளர் காரியலயத்துக்கு தருவித்து அவற்றை Fronto மூலம் தலைநகர் கொழுமபுக்கும் அவ்வாறே கிளைகளில் இருந்து வரும் ஊழியர் மூலமாக கிளைகளுக்கும் தபால் பட்டுவாடா செய்தமை தபால் போக்குவரத்து இன்மையான அசாதாரண சூழ்நிலையில் வங்கியின் செயல் பாட்டில் தன்னிறைவைக் காட்டியமை.

* யுத்த காலத்தில் ஏற்பட்ட ஊழியர்களது தட்டுப்பாட்டை போக்குவதற்கு Steno Clup என்னும் நிறுவனத்தின் வாயிலாக பல தற்கால ஊழியர்களை நியமித்தமை. (அத்தகையவர்கள் தற்போது நிரந்தரமாக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.)

* பல ஊழியர்கள் வேலை வாய்ப்பினை எடுப்பதற்கு உரிய உதவிகள் வழிமுறைகள் போன்றவற்றிற்கு தன்னுடைய தனிப்பட்ட செல்வாக்கை பயன்படுத்திக் கொடுத்தமை.

* வங்கியில் கடமையாற்றும் ஊழியர்களது பிள்ளைகள் ஆண்டு ஐந்து புலமை பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற வேளையில் அவர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கி அவர்களை கௌரவிதது ஊக்குவித்தமை. அவ்வாறே வங்கி ஊழியர்களின் O/L மற்றும் A/L படிக்கும் சித்தி பெற்ற பிள்ளைகளை கௌரவித்து ஊக்குவித்துதமை.

* தன் தாய் மீது அளவற்ற பாசம் கொண்டவராக விளங்கினார். இளமையில் வறுமை அனுபவித்தாலும் அதனை மறவாது தனது தாய் "சீட்டுக்கார வள்ளியம்மாள்" நினைவாக ஒரு அறக் கொடை நிதியம் ஆரம்பித்து வறுமைப்பட்ட பிள்ளைகளின் கல்விக்கு உதவிகள் புரிந்தார் அதன் வாயிலாக பல மாணவர்கள் பட்டதாரிகள் ஆகியுள்ளனர்.

* இறுதிக்காலத்தில் இவர் இணையத்தளம் ஒன்றை ஆரம்பித்து அதன் வாயிலாக தனது ஆக்கங்களை பதிவிறக்கம் செய்து வெளிநாட்டில் உள்ளவர்களுடன் தொடர்பில் இருந்து பயனுள்ள கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தமது வாழ்வில் தமது எதிரிகளின் எதிர்கருத்துக்களை தம்மை விமர்சிப்பவரின் கருத்துக்களை தமது ஏணிப் படியாக்கி வெற்றியும் கண்டிருக்கிறார். இவ்வாறு பற்பல சாதனைகளை புரிந்ததன் காரணமாக ஒரு சாதனையாளரானார். அன்னாரைப் பற்றி இங்கு தெரிவித்தமை அவரின் செயல் திறன் பற்றிய ஒரு பக்கமே.

தன்னுடன் நெருக்கமாக பழகியவர்களுடன் தமது வாழ்க்கை 70 வயதளவில் பூர்த்தி அடைந்து விடும் என்று முன்கூட்டியே தெரிவித்திருந்தார் அதற்கமைய தமது 72வது வயதில் எமை விட்டுப்பிரிந்தார்.

எது எவ்வாறாயினும் பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் இயற்கையின் நியதி என்றே கீதாசாரம் பகிர்கின்றது. ஆனாலும் அன்னாரது இழப்பால் துன்புற்றிருக்கும் குடும்ப உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த துயரினைப் பகிர்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக..

ஓம் சாந்தி

திரு. ச. நடராஜா
ஓய்வுநிலை வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையும் செயலும் ஒன்றுபட வாழ்ந்தார் அமரர் கந்தையா பத்மநேசன் அவர்கள்

ஒவ்வொரு மனிதனும் தம் வாழ்வில் ஏதோ ஒன்றை விதைக்கின்றான். இதனை மறுத்துரைக்க மாற்றுக் கருத்து எதுவுமில்லை. அவனது விதைப்பின் அறுவடை அடுத்தவரை - அடுத்தவர் மனதை மகிழ்வித்தால் அது அழியாது நிலைத்திருந்தால் அவர்கள் மரணத்திலும் நிச்சயம் வாழ்வார்கள். அதனால் மரணம் ஒரு முடிவுரை அல்ல..

தமது அறிவால், குரலால், சொல்லால், கற்பனையால், பழகும் பண்பால் தெரிந்தெடுத்த துறையால் தமது சேவையால் சிந்தையும் செயலும் ஒன்றுபட்டு அடுத்தவர்க்கு உதவும் நெறிமுறையால் தம்மை அர்ப்பணிப்பவர்களுக்கு நிச்சயம் மரணத்தின் பின்னரும் வாழ்க்கை உண்டு.

அந்தவகையில், அமரர் க.பத்மநேசன் அவர்கள் ஒரு சிறந்த வங்கியாளனாகவும் ஒரு நல்ல வங்கி முகாமையாளராகவும் சமூக பொறுப்புடன் வாழ்ந்து வந்தார். அடுத்தவர் நலத்தில் அக்கறையாக இருந்தமையாலும் பல நண்பர்களை சிந்தையில் இருத்தி அதிகாலையில் மலரும் மலர்களைப் போல் தினம் அதிகாலையில் மின்னஞ்சல் மூலம் வங்கியின் சமகால மற்றும் ஓய்வுநிலை ஊழியர்களது பிறந்த நாட்களை அடுத்தவருடன் பகிர்ந்து வந்தமையாலும் தம்பால் ஈர்த்தமையயாலும் எமது நெஞ்சத் திரையில் நீங்கா இடம்பெற்றார்.

தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்பார்கள் அதற்கமைய அறிவுள்ள ஆங்கில துணுக்குக்களை தேடிப் பிடித்து மற்றவர்களுக்கு பகிர்ந்து கொள்வதன் மூலம் ஆங்கில அறிவை மட்டுமல்லாது சமூகம் சார்ந்த நல்ல விடயங்களை ஒவ்வொரு விடியலின் போதும் நம் கைகளில் தவழவிட்டார். எமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதனை வாசிக்கும் போது எமக்குள் அன்னார் நீங்கா இடம் பிடித்து என்றும் வாழ்ந்து வந்தார்.

இது மட்டுமல்ல வங்கி ஓய்வூதியர்களால் வெளியிடப்படும் "நித்திய வங்கியாளர்"எனும் சஞ்சிகைக்கு எழுதப்படும் கட்டுரைகளை சரிபார்த்துக் (proof) கொடுப்பதும் நல்ல பயனுள்ள கட்டுரைகளைத் தந்து உதவுதலிலும் பெரும் பங்காற்றினார்.

அவ்வாறு சமூகத்தை நேசித்தது போன்று அன்னார் பறவைகளையும் நேசித்தார். அன்னாரது வீடு தேடிவரும் புறாக் கூட்டத்திற்கு தினம் தானியம் வழங்கி பறவைகளுக்கு உணவளித்தார்.

அதுமட்டுமல்ல ஒரு சிறந்த குடும்ப தலைவனாகவும் வாழ்ந்தார். ஆசைக்கொன்று ஆஸ்திக்கொன்று எனத் திரு. முகுந்தனையும் (மகன்) திருமதி. ந.கௌசல்யா (மகள்) ஆகியோரைப் பெற்று தம் வாழ்வில் பேரப் பிள்ளைகளோடு தம் அன்பு. மனைவி திருமதி. சிவநேசராணியுடனும் அன்பாக வாழ்ந்து அவர்களுக்காக தம்மை அர்ப்பணித்து வாழ்ந்து வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எது எவ்வாறாயினும் பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் இயற்கையின் நியதி. இந்த விலக்கொணா செய்திக்கு வருந்துதல் முறையோ என்கிறது கீதாசாரம். இருந்த போதிலும் வங்கி வாழ்வில் வரலாற்றைப் படைத்து ஒன்றாகப் பயணித்த அமரர் க.பத்மநேசன் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாம் தொடர்கின்ற போது நெஞ்சம் நெகிழ்கின்றது. அன்னாரது பங்கமில்லா நட்பும் பழகிய நாட்களையும் எண்ணிப் பார்க்க முடியாமல் இதயம் கனக்கின்றது. அன்னார் சுவாசித்த காற்றுச் சூழலில் வாழும் எமக்கு நியதியை மீறிய நெகிழ்வு வார்த்தைகளுக்குள் அடக்க முடியாமல் தவிக்கின்றது. நிலையிலா வாழ்க்கை என்று நிமிர்ந்து சொன்னாலும் கண்கள் குளமாவதை அடுத்தவர் பார்ப்பதிலிருந்து தடுக்க முடியவில்லை.

அறிவு, ஆளுமை, நேர்மை, கண்ணியம், கடமை என அனைத்தும் கொண்ட அன்பு நேசன் காட்டிய தங்கள் வழியில் பயணிப்பது எமக்கு கௌரவத்தை அளிக்கின்றது. அவரவர் விருப்பப்படி பப்பி என்றும் பத்மா என்றும் பாங்கர் என்றும் ஐயா என்றும் பத்தண்ணா என்றும் பலரும் பலவாறு பேர் சொல்லி அழைத்தார்கள். ஆனால் அன்னார் கையின் பெருவிரலானது எல்லா விரல்களோடும் சேர்வது போன்று எல்லோரிடத்திலும் பேதம் காட்டாது அன்பைப் பொழிந்தார்.

இது நாடகம். இந்த உலக மேடையில் அன்னார் வகித்த பாத்திரம் இறைவன் அன்னாருக்கு கொடுத்த வரமாகும். நிறைவான வாழ்வும் நிகரற்ற போக்கும் நிலைத்திருக்க நீழ்துயில் கொண்ட அமரர். பத்மநேசன் அவர்கள் கடந்து வந்த பாதை முடிவு பெற்றாலும் அன்னாரோடு பயணித்த நாம் அவரின் பாதச் சுவட்டை தொடர்து பயணிப்போம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி அன்னாரின் பிரிவால் துயருறும் அத்தனை நல் இதயங்களுடன் நாமும் இணைந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

இருந்தாலும் மறைந்தாலும் இவர் போல யாரென்று ஊர் சொல்ல வாழ்ந்தார்.

நெருநல் உளனொருவன் இன்றில்லைஎனும்
பெருமை உடைத்து இவ் வுலகு.

நேற்று இருந்த ஒருவர் இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எஸ். நடராஜா
ஓய்வுநிலை வங்கியாளர்
சம்பியன் லேன், கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமையல் குறிப்புக்கள்

சமையலில் முக்கியமாக இனிப்புப் வகைகள், கேக், போன்றவற்றிற்கு வாசனை, சுவை அளிக்க கூடிய ஏலக்காய் ஒரு இயற்கை மருந்து என்பது நம்மில் பலருக்கு தெரியாமல் இருக்கலாம் "வ...ாசனைப் பொருட்களின் ராணி" (Queen of the spices) என்று சிறப்புப் பெயர் - செல்லப் பெயர் கொண்ட ஏலக்காய், இந்தியாவில் சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

ஏலக்காய் விதையில் புரதச்சத்து, சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ், பொட்டாசியம், இரும்புச்சத்து, சோடியம், வைட்டமின்கள் ஏ,பி,சி ஆகியவை அடங்கியுள்ளன. ஏலக்காயில் காணப்படும் எளிதில் ஆவியாகும் எண்ணெய்களான போர்னியோல், கேம்பர், பைனின், ஹீயமுலீன், கெரியோ பில்லென், கார்வோன், யூகேலிப்டோல், டெர்பினின், சேபினின் ஆகியவற்றின் காரணமாக அதில் அரிய மருத்துவ குணங்கள் நிரம்பி உள்ளன.

* சிறிது ஏலப்பொடியை, வெற்றிலையுடன் மென்று தின்றால், அஜீரணம் அகலும். பசி ருசி உண்டாகும்.
* ஏலப்பொடியுடன், மிளகுப்பொடி சேர்த்து, சிறிது துளசிச்சாறில் சேர்த்துக் குடித்தால், கடும் கபம் இளகி வெளிப்பட்டு, நலம் உண்டாகும். பக்க விளைவு இல்லாத இயற்கை மருந்து இது.
* ஏலக்காய் தூள், டீ தூள் இரண்டையும் சேர்த்து டீ தயாரித்து அத்துடன் தேன் சேர்த்து, தினம் இருவேளை பருகி வர, நரம்புகள் வலுப்படும்.
* தேனுடன், ஏலக்காய்தூள் கலந்து, சாப்பிட்டு வர, நரம்புத் தளர்ச்சி நீங்கும். நரம்புகள் நன்கு இயங்கும். வலிமை அடையும்.
* ஏலக்காயுடன், கறிவேப்பிலை வைத்து மைய்யாக அரைத்து எருமைத் தயிரில் சேர்த்து மூன்று வேளை சாப்பிட்டால் சீதபேதி குணமாகும்.
* ஏலக்காய் விதைகளை வாயிலிட்டு அடக்கிக் கொண்டு, உமிழ்நீரை விழுங்கிவர, வாய்நாற்றம் மாறும்.
* நான்கு மிளகு, சிறிது ஏலக்காய், சுக்கு இவைகளுடன் பால் தெளித்து விழுதாக அரைத்து, நெற்றியில் பற்றிட தலை வலிதானே போகும்.
* ஏலக்காய், மிளகு, சுக்கு, திப்பிலி, தனியா இந்த ஐந்தையும் சேர்த்து கஷாயம் செய்து பருகிவர குற்றிருமல் குணமாகும்.
* வெந்தயத்தை ஊற வைத்து எடுத்து சிறிது ஏலக்காய்ச் சேர்த்து மென்று தின்றால் வயிற்றுக் கடுப்பு நீங்கும்.
* சிறிது ஏலக்காயுடன் வேப்பிலை மஞ்சள் வைத்து அரைத்து பித்த வெடிப்பு மீது பூசிவர, விரைவில் வெடிப்பு குணமாகும்.
* ஏலக்காயுடன், அதிமதுரம், மிளகு போட்டு கொதிக்க வைத்த நீரை வடிகட்டி பருகினால், வாந்தி, குமட்டல் உடனே நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* அன்னாசிப்பழச்சாறுடன், ஏலக்காய்தூள் சேர்த்து பருகிவர, மூத்திரக் கோளாறுகள் குணமாகும். நீர்கடுப்பு நீங்கும். சிறுநீர் பிரியாமல் அவதிப்படுபவர்களுக்கு, சிறுநீர் தாராளமாகப் பிரியும்.

* சுக்கு, ஏலக்காய், கிராம்பு இவைகளுடன் சிறிது நீர் தெளித்து மைய அரைத்து, சூடாக்கி கை, கால் மூட்டுகளின் மீது பூசி வர, மூட்டுவலி குணமாகும். ஆரம்பநிலை வாதம் நீங்கும்.

* ஏலப்பொடி, சீரகப்பொடி, மல்லிப்பொடி இவைகளுடன், சிறிது கருப்பட்டி பொடித்திட்டு கலந்து, ஒரு நெல்லிக்காய் அளவு வீதம் காலை மாலை தின்றுவர, பித்த கிறுகிறுப்பு மாறும்.

* திராட்சைச்சாறுடன், ஏலக்காய்த்தூள் கலந்து சாப்பிட்டுவர, நரம்புத்தளர்ச்சி நீங்கும். நரம்புகள் வலுப்பெறும்.

* ஏலக்காய்தூள், சுக்குப்பொடி, மிளகுப்பொடி இவைகளை தேனில் கலந்து சாப்பிட்டுவர, தசைபிடிப்புகள் நீங்கும்.

* செவ்வாழைப்பழத்துடன், சிறிது ஏலக்காய்தூள் சேர்த்துச் சாப்பிட்டால் மாதவிடாய்க் கோளாறுகள் ஒழுங்குபடும்.

* வெல்லத்தைப் பொடித்து நீரில் கலந்து, அத்துடன், எலுமிச்சைச்சாறு, ஏலக்காய் தூள் சேர்த்து பானம் தயாரித்து பருகினால் கோடைத்தாகம் நீங்கும். உடல் குளிர்ச்சி அடையும். சோர்வு மாறி புத்துணர்ச்சி ஏற்பட

* ஏலக்காயின் முக்கியமான பயன் என்னவென்றால். சூரிய வெப்பத்தால், உடலில் வெப்பம் அதிகம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும். மேலும் பக்கவாதம் வராது. அதிலும் வெளியே செல்லும் போது ஏலக்காயை வாயில் போட்டு மென்று சென்றால், வெப்ப அலைகள் உடலை தாக்காமல் பார்த்துக் கொள்ளும்.

* ஆயுர்வேத கொள்கையின் படி, ஏலக்காய் உடலில் உள்ள மூன்று தோஷங்களான வாதம், பித்தம், கபம் போன்றவற்றிற்கு சிறந்தது. இவை உடலில் இந்த மூன்றையும் சமநிலையில் வைத்து, உடலை ஆரோக்கியமாக வைக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதனை உண்டால் நன்கு ஆரோக்கியமாக வாழலாம். மேலும் அதனை உண்பதால், நல்ல குரல் வளத்தையும் பெறலாம்.

* குழந்தைகளுக்கு வாந்தி ஏற்பட்டால் இரண்டு ஏலக்காய்களை பொடியாக்கி, அந்தப் பொடியை தேனில் குழைத்து குழந்தையின் நாக்கில் மூன்று வேளை தடவினாலே போதும். வாந்தி உடனே நின்று விடும்.

* ஜலதோஷத்தால் பாதிக்கப்பட்டு மூக்கடைப்பில் அவதிப்படும் குழந்தைகளுக்கும் ஏலக்காய் தகுந்த நிவாரணம் தருகிறது. நான்கைந்து ஏலக்காய்களை நெருப்பில் போட்டு, அந்தப் புகையை குழந்தைகள் சுவாசித்தாலே மூக்கடைப்பு உடனே திறந்து கொள்ளும்.

* மன அழுத்தப் பிரச்சினை உள்ளவர்கள், 'ஏலக்காய் டீ' குடித்தால் இயல்பு நிலைக்கு வருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நா வறட்சி, வாயில் உமிழ்நீர் ஊறுதல், வெயிலில் அதிகம் வியர்ப்பதால் ஏற்படும் தலைவலி, வாந்தி, குமட்டல், நீர்ச்சுருக்கு, மார்புச்சளி, செரிமானக் கோளாறு ஆகிய பிரச்சினைகளுக்கு ஏலக்காயை வாயில் போட்டு மென்றாலே நிவாரணம் பெற முடியும். அதேநேரம், ஏலக்காயை அதிகமாக, அடிக்கடி வாயில் போட்டு மெல்லுவது நல்லதல்ல

* வெயிலில் அதிகம் அலைந்தால் தலைசுற்றல், மயக்கம் ஏற்படும். இதற்கு நான்கைந்து ஏலக்காய்களை நசுக்கி, அரை டம்ளர் தண்ணீரில் போட்டு, கஷாயமாகக் காய்ச்சி, அதில் சிறிது பனை வெல்லம் போட்டு குடித்தால் தலைசுற்றல் உடனே நீங்கும். மயக்கமும் மாயமாய் மறைந்துவிடும்.

* விக்கலால் அவதிப்படுவோர் இரண்டு ஏலக்காய்களை நசுக்கி, அத்துடன் நான்கைந்து புதினா இலைகளைப் போட்டு, அரை டம்ளர் தண்ணீரில் நன்கு காய்ச்சி வடிகட்டி, மிதமான சூட்டில் இந்தக் கஷாயத்தைக் குடித்தாலே போதும்.

* வாய்வுத் தொல்லையால் அவதிப்படுவோர் ஏலக்காயை நன்கு காய வைத்து பொடியாக்கி, அந்தப் பொடியில் அரை டீஸ்பூன் எடுத்து, அரை டம்ளர் தண்ணீரில் கொதிக்கவிட வேண்டும். உணவு உட்கொள்வதற்கு முன்பாக, இந்த ஏலக்காய் தண்ணீரைக் குடித்தால் வாய்வுத் தொல்லை உடனே நீங்கிவிடும்.

* பாலுணர்வு தூண்டும் பொருளாகவும் உள்ளது.

காளான்

அசைவத்தில் உள்ள சுவையும், சத்துக்களும் காளானில் கிடைப்பதால், அசைவ உணவு சாப்பிடாதவர்கள் எடுத்துக்கொள்ளலாம். தாதுக்கள், ஆன்டிஆக்ஸிடன்ட், அமினோஅமிலங்கள், புரதம் போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. ஹார்மோன்கள் சுரப்பதற்கும், நரம்பு மண்டலத்துக்கும், பாண்டோதினிக் (Pantothenic acid) என்ற அமிலம் உதவுகிறது. சிவப்பு ரத்த அணுக்களை ஆரோக்கியமாக்க ரிபோ.ஃபிளேவின் உதவுகிறது. இதில் உள்ள செலினியம் (Selenium), உடலில் உள்ள செல்களுக்குக் கவசம். வைட்டமின் டி இருப்பதால், எலும்புகள் வலுப்பெறும். கொழுப்பு இல்லை. கலோரிகளும் இதில் மிகக் குறைவுதான். இரண்டு நாட்களுக்குள் பயன்படுத்திவிடுவது நல்லது.

புற்றுநோயைத் தடுக்கும் திராட்சை!

திராட்சைக் கொடியில் தொங்கும் திராட்சைப் பழத்தைப் பார்த்தால், திராட்சைக் கொத்து நுரையீரல் போலவும், அதில் உள்ள ஒவ்வொரு திராட்சையும் ஆல்வியோலி எனப்படும் நுண்காற்று அறைகள் போலவும் தோன்றும். ரத்தத்தில் உள்ள கார்பன் டை ஆக்ஸைடைச் சுத்திகரித்து, சுவாசக் காற்றில் உள்ள ஆக்சிஜனைப் பிரித்து, ரத்த அணுக்களில் நிறைத்து அனுப்புகிறது நுரையீரல். இந்தச் செயல்பாட்டை மேம்படுத்தும் திறன், திராட்சைப் பழத்துக்கு உண்டு. நுரையீரலில் வரக்கூடிய புற்றுநோய் செல்களை அழிக்கும் திறன் திராட்சைக்கு உண்டு. கர்ப்பிணிகள் திராட்சையை 23-வது வாரத்தில் இருந்து சாப்பிட்டுவந்தால், குழந்தையின் வளர்ச்சிக்கு உதவும். திராட்சையில் உள்ள ப்ரோஆந்தோசயனிடின் (Proanthocyanidin) ஆஸ்துமா பிரச்னையின் வீரியத்தைக் குறைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* திராட்சையில் உள்ள பாலிபீனால் நுரையீரல், வாய், சுவாசப் பாதை, மூச்சுக்குழாய், கணையம் போன்ற இடங்களில் ஏற்படும் புற்றுநோயைத் தடுக்கும்.

மஞ்சள் ரகசியம் :

இன்றைய காலக்கட்டத்தில் ஆண்மைக் குறைவு, நரம்பு தளர்ச்சி போன்ற குறைபாடுகளால் ஏராளமான கணவன்மார்கள் சிக்கி தவிக்கிறார்கள். இவர்களால் இனிமையான இல்லறத்தை அனுபவிக்க முடியவில்லை. இப்படிப்பட்டவர்களின் மனைவிமார்கள் தினமும் மஞ்சள் பூசி குளித்தாலே, அவர்களின் இந்த குறைபாடு நீங்கி விடும்.

அது எப்படி தெரியுமா?

மஞ்சள் பூசி குளிக்காத பெண்களின் கணவன்மார்களுக்கு நரம்பு தளர்ச்சியும், ஆண்மைக் குறைவும் உண்டாகும் வாய்ப்பு அதிகம் உள்ளது. காரணம், பெண்களுக்கு மூன்று மடங்கு உஷ்ணம் அவர்கள் உடலில் உள்ளது தான்.
இது இயற்கை.

ஒன்று... உணவு சீரணமாவதற்கும், இரண்டு ... மாதவிலக்கு ஆவதற்கும், மூன்று ... கருத்தரிப்பதற்கும் என்று இந்த உஷ்ணத்தை இயற்கையே பெண்களின் உடலில் உருவாக்கி வைத்துள்ளது.

கணவனும், மனைவியும் தாம்பத்திய உறவில் ஈடுபடும்போது, மனைவி உடலில் உள்ள அதிகப்படியான உஷ்ணம் கணவனின் உடலுக்கு கடத்தப்படுகிறது. இதனால், அந்த கணவனுக்கு நரம்பு தளர்ச்சியும், ஆண்மைக் குறைவும் உண்டாகும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

பெண்கள் மஞ்சள் பூசி குளிக்கும்போது அவர்களது உடலில் உள்ள அதிகப்படியான உஷ்ணம் கட்டுப்படுத்தப்படுகிறது.

அவர்கள், கணவனுடன் உடலுறவு வைத்துக் கொள்ளும்போது, அவர்களது உடல் வெப்பம் கணவனது உடலுக்கு அதிகம் கடத்தப்படாது. அதனால், கணவனுக்கு ஆண்மைக் குறைவு, நரம்பு தளர்ச்சி போன்ற குறைபாடுகள் ஏற்படுவதை தவிர்க்கலாம்.
மஞ்சள் குணங்கள் :

1. குழந்தை இல்லாத பெண்கள், மாதவிலக்கு சமயம் அந்த 3 நாட்களும் ஒரு அவுன்ஸ் தண்ணீரில் 4 சிட்டிகை சுத்தமான மஞ்சள் பொடியை கலக்கி வெறும் வயிற்றில், மதியம், மாலை என்று மூன்று வேளையும் சாப்பிட்டு வந்தால் மலட்டுத்தன்மை நீங்கி குழந்தைப்பேறு கிடைக்கும்.
2. பெண்களின் தோல் பகுதி மிகவும் மென்மையானது. அதனால் கிருமி தொற்றுதலுக்கு எளிதில் ஆளாகும் வாய்ப்புகள் அவர்களுக்கு அதிகம் உண்டு. அதனால் தான், பெண்களை மஞ்சள் தேய்த்து குளிக்கச் சொல்கிறோம்.

   சைவம் ஆனாலும் சரி, அசைவம் ஆனாலும் சரி, மஞ்சள் சேர்த்து தயாரிக்கப்படும் உணவு பொருட்களில் விஷத்தன்மை ஏற்படாது.

4. பாதாம் பாலுடன் கஸ்தூரி மஞ்சள் சிறிது சேர்த்து சாப்பிட்டு வந்தால் ஆண்களுக்கு ஆண்மை சக்தி பெருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம், பவுத்திரத்தால் அவதிப்படுபவர்கள் ஒரு டீஸ் பூன் வெண்ணெயில் சிறிது மஞ்சள் பொடியையும் கலந்து, அந்த கலவையை உள் மூலத்திற்கும், வெளிமூலத்திற்கும் தடவி வந்தால் நாளடைவில் நல்ல குணம் கிடைக்கும்.

5. குளிக்கும் தண்ணீருடன் சிறிதளவு மஞ்சள் பொடியையும் சேர்த்து கலக்கி, அதை சூரிய ஒளியில் வைத்து, சிறிதுநேரம் கழித்து குளிப்பது நல்லது. சூரியஒளி சக்தியினால் மஞ்சள் மேலும் வீரிய சக்தி பெற்று நோயை தடுக்கும் மருந்துபோல் செயல்படுகிறது. அம்மை நோய்க்கு மட்டுமல்ல் சாதாரண நாட்களிலும் ஆண்-பெண் இருபாலரும் இப்படி மஞ்சள் தண்ணீரில் குளிக்கலாம்.
6. மஞ்சளையும், சந்தனத்தையும் கலந்து நெற்றியில் திலகமிட்டால் அடிக்கடி டென்ஷன் ஆகுபவர்கள் அதில் இருந்து விடுபடுவார்கள். மனதில் கெட்ட எண்ணங்கள் இருந்தால் விலகிவிடும். மூளை, நரம்பு மண்டலம் அப்போது குளிர்ச்சி அடைவதே இதற்கு காரணம்.
7. மஞ்சள் பொடியை உடலில் பூசி குளிப்பதால் கவர்ச்சியான நிறத்தை பெறலாம். அதாவது தோல் பளபளப்பாகும். இதனால்தான் ஹோலி பண்டிகையின்போது மஞ்சள் தூவி விளையாடுகிறார்கள்.
8. தொற்றுநோய் உள்ள பகுதியில் மஞ்சள் நீரையோ, மஞ்சள் பொடியையோ தெளித்து வந்தால், அந்த நோய் மற்ற பகுதிகளுக்கு பரவாது. வந்த பகுதியிலும் அதை கட்டுப்படுத்தலாம். வீட்டு வாசலில் மஞ்சள் கொத்தை கட்ட காரணமும் இதுதான்.
9. ஈக்களின் தொல்லையை கட்டுப்படுத்த, மஞ்சள் நீரில் துளசி இலைகளை தேவையான அளவு சேர்த்து கலந்து, ஈ உள்ள பகுதிகளில் தெளித்து வந்தாலே போதும். ஈக்கள் தொல்லை குறைந்து விடும்.
10. தொடர்ச்சியான இருமல் உள்ளவர்கள் சூடான பாலில் சிறிது மஞ்சள் பொடியை கலந்து தினமும் 3 வேளை வீதம் பருகி வந்தால் இருமல் காணாமலேயே போய்விடும்.
11. சுட்ட அல்லது வறுத்த மஞ்சள் பொடியை பாலில் சிறிதளவு கலந்து சில நாட்கள் தொடர்ச்சியாக பருகி வந்தால் மேக நோய் குணமாகும

Source Internet

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Membership Directory

(Continuation of the Membership Directory released by us in December 2022)

Name of Pensioner : Mr. S. Thavalingam
Pension No : 137726
Date of Birth : 28.12.1962
Date joined service : 23.10.1992
Present address : Kurumbaikaddy Puloly South, puloly.
Contact No : 0777034226
Date of retirement : 31.12.2022
Name of Spouse : Mrs. Bama Thavalingam
Contact No of Spouse : 021 226 4215, 077 843 5261

Name of Pensioner : Mrs. Uma Varatheswaran
Pension No : 137776
Date of Birth : 30.06.1965
Date joined service : 02.11.1992
Present address : Kathirgama Kovilady, Vathiry Karaveddy.
Contact No : 0779498674
Date of retirement : 15.02.2023
Name of Spouse : Mr.R. Varatheeswaran
Contact No of Spouse : 0776944144

Name of Pensioner : Mr. S. Kanthasami
Pension No : 185547
Date of Birth : 03.06.1962
Date joined service : 25.05.2012
Present address : Innavathai, Kollankaladdy, Thellippalai.
Contact No : 077 406 3324, 0707063324
Date of retirement : 31.12.2022
Name of Spouse : Mrs. Kandasamy Ranjnidevi
Contact No of Spouse : 077 247 8265

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Opening of newly established Kankesanthurai Limited Service Branch

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"BOC Connect "Agent Banking Service established at Iranaipalai. Puthukudiyiruppu.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Services
Visited to Our Senior Members

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our Services
At Mandatheevu for abnormal Persons and their Family





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Honoring Senior Pensioner Mr. M. Nagenthiram
Widow Pensioner Mrs. Pathmarany Magarajah

Management Committee - 2022

Seated Left tp Right

Mr. E. Premarajan, Mr. T. Piruthiviraj (Seretuary), Mr. T. Senthinathan (President), Mr. T. Nagenthiran

Standing

Mr. K.K. Vigneswaran, Mr. A.A. Reginold, Mr. A. Paheerathan, Mr. S. Nadarajah

Apsent

Mr. P. Francis (Treasurer), Mr. S. Sivananthavigneswaran, Mr. A.W. Jesuthasan, Mr. K. Sethukavalar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TRIBUTE TO OUR BELOVED COLLEAGUES

Late Mr. K. Nagamany

Pension No : 073809
Date of Birth : 25.09.1948
Date of Death : 13.08.2022
Name of Spouse : Mrs. N. Selvamalar
Contact No of spouse : 0769776291

Late Mr. N. Sivaratnam

Pension No : 29038
Date of Birth : 25.02.1950
Date of Death : 28.12.2022
Name of Spouse : Mrs. Nalini Sivaratnam
Contact No of spouse : 0212263750

Late Mr. K. Pathmanesan

Pension No : 026991
Date of Birth : 04.10.1948
Date of Death : 16.11.2022
Name of Spouse : Mrs. P. Sivanesarani
Contact No of spouse : 0212223464 , 0718474844

Late Mr. K. Balasubramaniam

Pension No : 21006
Date of Birth : 21.03.1946
Date of Death : 04.02.2023
Name of Spouse : Mr. B. Muralitharan
Contact No of spouse : 0212263015, 0775487200

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Late Mr. S. Sivakumar

Pension No :
Date of Birth : 19.03.1958
Date of Death : 18.03.2022
Name of Spouse : Mrs. S. Vinothini
Contact No of spouse : 077 7863116

Late Mr. V. S. Sivakumaran

Pension No : 096417
Date of Birth : 20.10.1955
Date of Death : 02.02.2022
Name of Spouse : Mrs. Uma Sivakumaran
Contact No of spouse : 0212263410

Late Mr. V. K. Thangarajah

Pension No : 086315
Date of Birth : 29.03.1952
Date of Death : 15.02.2022
Name of Spouse : Mrs. T. Kengadevi
Contact No of spouse : 0212270477

Late Mr. N. Thiyaganathan

Pension No : 073809
Date of Birth : 12.03.1947
Date of Death : 08.04.2022
Name of Spouse : Mrs. T. Naguleswary
Contact No of spouse : 0114958112

Late Mr. K.Vigneswaran

Pension No : 2119
Date of Birth : 10.06.1942
Date of Death : 2022
Name of Spouse : Ms. V. Vijayarathy
Contact No of spouse : 0772591891

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Our sincere thanks to...

- The authors of the articles who have taken lot of pain to prepare their contributions.
- The members of the Editorial Committee who have amongst their busy schedule of program managed to co-ordinate with the press.
- The General Manager - For his message.
- The A.G.M (BoC - N.P) for his message.
- All the branch Managers of our branches as well as that of other banks.
- Our area representatives for distributing the magazines to our members and to other respective institutions
- The "Guru Printers" Thirunelvely for providing their continuous service by printing the magazines in time.

Thanking all of you who have directly or indirectly involved in our activities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOC SMARTGEN
சேமிப்புடன் வாழ்க்கை சுலபமாக

இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும் வங்கியியலில் புதிய பரிமாணம் மற்றும் சௌகரியமான சேமிப்பு கணக்கு உங்கள் விரல் நுனியில்

- இலவச வைப்புப் புத்தகத்துடனான சேமிப்பு கணக்கு
- இணையத்தள கணக்கினை துரிதமாக செயற்படுத்தல்
- டெபிட் அட்டைக்கான உடனடி காப்புறுதி
- இலவச SMS சமிஞ்ஞைகள் மற்றும் மாதாந்த ஈ.கூற்று
- தகுதியுடைய வாடிக்கையாளர்களுக்கு கடன் அட்டை
- கணக்கு மீதியினை பொருத்து 90% வரையிலான கடன் வசதி

மேலதிக விபரங்கள் அழையுங்கள் 011 220 4444

www.boc.lk

தலைமைக் காரியாலயம் "இலங்கை வங்கி சதுக்கம்" இலக்கம் 1,
இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 01.

Fitch Rating
AA+(lka)

இலங்கைவங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Guru Printers - 021 222 8266